



# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 467 பிலவ வருடம், மாசி மாதம் 17ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (01.03.2022) ஹிஜ்ரி - 1443, ரஜப் - 27, 0115886187 - பக்கங்கள் 16

விலை ரூ.30


## திரிபோஷாவுக்கு பெரும் தட்டுப்பாடு



நாடு முழுவதும் விநியோக நடவடிக்கைகள் இடைநிறுத்தம்

03 பக்கம்

## ரஷ்ய - உக்ரைன் பேச்சில் முன்னேற்றமில்லை!

- படைகளை மீளப்பெற ரஷ்யா மறுப்பு - சரண் இல்லையென உக்ரைன் திட்டவட்டம்
- பொருளாதாரத் தடைகளுக்கு அஞ்சேன் - மேற்கு நாடுகள் பொய்களின் பேரரசுகள் - ரஷ்ய ஜனாதிபதி புட்டின் காரசாரம்
- உக்ரைனுக்கு அடுத்த 24 மணிநேரம் "முக்கியமானது" - ஜெலென்ஸ்கி தெரிவிப்பு
- ரஷ்யாவின் தாக்குதலில் 14 சிறுவர்கள் உட்பட 352 பேர் உயிரிழப்பு - உக்ரைன் சுகாதார அமைச்சு அறிவிப்பு



14,15 பக்கம்




ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையில் இடம்பெற்றுவரும் போரை நிறுத்துமாறு கோரி, இலங்கைக்கு சுற்றுலா வந்துள்ள உக்ரைன் பிரஜைகள் சிலர் நேற்று (28) கொழும்பில் அமைந்துள்ள ரஷ்ய தூதரகத்தின் முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (படப்பிடிப்பு எஷான் தஸநாயக்க)



# எரிபொருள் தட்டுப்பாட்டால் சேவைகள் முடக்கம்!

•யோ.தர்மராஜ்

நாட்டில் நிலவும் டொலர் பிரச்சினையால் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு தொடரும் நிலையில், நாட்டின் பல துறைகள் முற்றாக முடங்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. நாடளாவிய ரீதியில் நாளுக்கு நாள் பல எரிபொருள் நிலையங்களில் எரிபொருள் இல்லை என்ற அறிவித்தல்கள் வைக்கப்படுவதால், வாகனங்களும் மக்களும் பல மணி நேரமாக வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளனர். பெப்ரவரி மாதத்தில் இருமுறை இந்திய ஒயில் நிறுவனம் (ஐ.ஓ.சி) எரிபொருள் விலையை உயர்த்தியதுடன், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் தற்போது விலையை அதிகரிப்பதற்கு அனுமதி கோரியுள்ளதால் எரிபொருள் தட்டுப்பாடு உக்கிரமடைந்து நாட்டின் பல பகுதிகளில் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூடப்பட்டுள்ளன. மேலும், எரிபொருள் தட்டுப்பாட்டால் மின்சார உற்பத்திகள், போக்குவரத்துகள், தொழிற்சாலைகள், தொழில் நிறுவனங்கள், நீர் வழங்கல் என பல துறைகளும் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த எரிபொருள் தட்டுப்பாடு தொடருமாக இருந்தால் நாடு முற்றாக முடங்கும் ஆபத்தை எதிர்நோக்க நேரிடலாம்.

02 பக்கம்

### கமெண்ட் கந்தர்..



ஒருத்தர் தீவிரமா ரஷ்யாவுக்கு ஆதரவா பேசுறார்... விசாரிச்சுப் பார்த்தா அந்தாள் கொரோனா காலத்தில ஸ்புட்னிக் ஊசி போட்டவராம்...

## இலங்கை கடற்படை கைதுசெய்த மீனவர்களை விடுவிக்க உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும்



பிரதமர் நரேந்திர மோடிக்கு தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் கடிதம்

02 பக்கம்

## கடல் வளத்தை பாதிக்காத வகையில் இழுவைமடிச் சட்டம்

அமைச்சர் டக்ளஸ் உத்தரவாதம்

02 பக்கம்



### உஷ்

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ குருநாகல் எம்.பியல்லவா?

அவரின் அலுவலகமொன்று குருநாகலில் திறக்கப்பட ஏற்பாடாகியது. ஆனால் அப்பகுதி அமைச்சர் ஒருவரின் தலையீட்டால் அந்த நிகழ்வு ஒத்திப்போடப்பட்டதாக தகவல். அடுத்த மாகாண சபைத்தேர்தலில் தனது மகனை முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்த முயற்சிக்கிறார் அந்த அமைச்சர். ஆனால் பிரதமரின் மகனும் அங்கே அரசியலில் குதிக்கவுள்ளதால் அமைச்சர் சற்று விசனத்தில் இருப்பதாக சொல்லப்படுகிறது.

## சிவராத்திரி தின ஆன்மீகச் செய்தி ஒற்றுமையை மேலும் பலப்படுத்தும்



ஜனாதிபதி கோட்டாபய வாழ்த்துச் செய்தி

02 பக்கம்



## மக்களுக்கும் நாட்டுக்கும் சிறந்த எதிர்காலத்தை வழங்க சிவராத்திரியில் பிரார்த்தனை செய்வோம்

வாழ்த்துச் செய்தியில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ

02 பக்கம்




## ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 49ஆவது கூட்டத்தொடர் நேற்று ஆரம்பம்

•யோ.தர்மராஜ்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 49ஆவது கூட்டத்தொடர் நேற்று ஜெனீவாவில் ஆரம்பமாகியுள்ளது. இந்த கூட்டத்தொடர் எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதி வரையில் இடம்பெறவுள்ளது.

02 பக்கம்

## ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு தமிழ்க் கட்சிகள் ஆவணக் கடிதம்

ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு தமிழ்த் தேசியக் கட்சிகளின் சார்பில் கடிதமொன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்கள் கூட்டணி ஆகியன இணைந்து இந்த ஆவணக் கடிதத்தை அனுப்பியுள்ளன.

ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத்தொடர் நேற்று ஆரம்பமாகியுள்ளது. இந்த அமர்வின்போது இலங்கை தொடர்பில் தீர்மானம் எதுவும் இடம்பெறாத போதிலும், நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை...

02 பக்கம்



## பாப்பரசரை சந்தித்தார் மெல்கம் ஆண்டகை

02 பக்கம்

## இன்று 3 மணி நேர மின்வெட்டு

இன்று காலை 8.30 மணிமுதல் மாலை 5.30 மணிவரையான காலப்பகுதிக்குள் அனைத்து பிரிவினருக்கும் மூன்று மணி நேர மின்வெட்டு அமுல்படுத்தப்படும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. மின்சாரத் தேவை அதிகரித்தால், இரவு நேரத்தில் மேலும் 30 நிமிடம் திட்டமிடப்படாத மின்வெட்டு அமுல்படுத்தப்படும் என்றும் ஆணைக்குழு கூறியுள்ளது. இதன் காரணமாக மாலை 6 மணிமுதல் இரவு 10 மணிவரை மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத் துமாறு பொதுமக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# அம்பாறை மாவட்டத்தின் பெயரை மாற்றுவதற்கு இராஜாங்க அமைச்சர் விமலவீர திசாநாயக்க பிரேரணை முன்வைப்பு

## நாடாளுமன்ற உறுப்பினர் அதாவுல்லா கடும் எதிர்ப்பு






அம்பாறை மாவட்டத்தின் பெயரை திகாமடுல்ல என மாற்றுவதற்கு முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம்.அதாவுல்லா பாரிய எதிர்ப்பினை வெளியிட்டுள்ளார்.

இதனால் நேற்று (28) இடம்பெற்ற அம்பாறை மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர் விமலவீர திசாநாயக்கவிற்கும், நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம். அதாவுல்லாவிற்கும் இடையில் பாரிய வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

இராஜாங்க அமைச்சர் விமலவீர திசாநாயக்க மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம்.அதாவுல்லா ஆகியோருக்கு இடையில் அம்பாறை மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தொடர்ச்சியாக வாக்குவாதம் இடம்பெற்று வருகின்றது.

இவ்வாறான நிலையில் நேற்று (28) இடம்பெற்ற வாக்குவாதம் பல நிமிடங்கள் நீடித்ததாக கூட்டத்தில் கலந்துகொண்டவர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

"அம்பாறை மாவட்டத்திற்கு அம்பாறை நிர்வாக மாவட்டம் என்றும், திகாமடுல்ல தேர்தல் மாவட்டம் என்றும் இரண்டு பெயர்கள் காணப்படுகின்றன. இதில் திகாமடுல்ல எனும் பெயரை நிர்வாகம் மற்றும் தேர்தல் ஆகிய இரண்டுக்கும் சூட்டுவோம் என்ற பிரேரணை நேற்றைய அம்பாறை மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது.

இதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் அதாவுல்லா பாரிய எதிர்ப்பை வெளியிட்டுள்ளதுடன், இது தொடர்பில் தற்போது கலந்துரையாட வேண்டிய அவசியமில்லை எனவும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, குறித்த பெயர் மாற்றத்திற்கு ஆட்சேபனை தெரிவிக்கும் வகையில் சம்மாந்துறை பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எம்.நௌசாத்தும் இந்த கூட்டத்தில் கருத்து வெளியிட்டுள்ளார்.

எனினும் கூட்டத்தில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான முஷாரப் முதுநபீன் மற்றும் டி.கலையரசன் உள்ளிட்ட சிறுபான்மையின பிரதிநிதிகள் எவரும் எந்தக் கருத்தினையும் வெளியிடவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# நாட்டில் ஆப்பிள், திராட்சை உள்ளன; எரிபொருளும் மருந்துகளும் இல்லை!

## வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில

*யோ.தர்மராஜ்*

நாட்டில் ஏற்பட்டுள்ள அந்நிய செலாவணி கையிருப்பு பிரச்சினைக்கு மத்தியில் அநாவசிய செலவுகளை கட்டுப்படுத்தி, அத்தியாவசிய பொருட்களை கொண்டுவருவதற்கு முக்கியத்துவம் கொடுக்காதமையினால், நாட்டில் ஆப்பிள், திராட்சை, தோடம்பழம் மற்றும் வெளிநாட்டு தேன் இருக்கும்போது எரிபொருளும் மருந்துகளும் இல்லை என வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

அத்துடன், நாட்டில் எரிபொருள் பிரச்சினையோ, மின்சார பிரச்சினையோ இல்லை. மாறாக, அந்நிய செலாவணி கையிருப்பிலேயே பிரச்சினை இருக்கின்றன. எரிபொருள் கப்பலுக்கு செலுத்த டொலர் இருந்தால் தடையற்ற எரிபொருள் விநியோகத்திற்கு உறுதியளிக்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

வலுசக்தி அமைச்சில் நேற்று (28) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் எரிபொருள் பிரச்சினையோ, மின்சார பிரச்சினையோ இல்லை. மாறாக, அந்நிய செலாவணி கையிருப்பிலேயே பிரச்சினை இருக்கின்றன. இலங்கை கடந்த வருடம் 21 பில்லியன் டொலரை இறக்குமதிக்காக செலவு செய்துள்ளது. இதில் 2.8 பில்லியன் டொலரே எரிபொருளுக்கு செலவழிக்கப்பட்டுள்ளது.

எனவே, முறையான கட்டுப்பாடுகளுடன் அநாவசிய செலவுகளை கட்டுப்படுத்தினால் தடையின்றி எரிபொருளை வழங்குவதற்கு உறுதியளிக்க முடியும் என்பதோடு, தடையற்ற மின்சாரத்தையும் எங்களால் வழங்கமுடியும்.

நான் அமைச்சராக இருக்கும் அரசாங்கம் எதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பதை கண்டறிய வேண்டும். ஆப்பிள், தோடம்பழம் உண்டு இருளில் இருப்பதா? வெளிநாட்டில் இருந்து நீர் கொண்டுவந்து குடித்துவிட்டு வாகனங்களுக்கு எரிபொருள் இல்லாதிருப்பதா? அல்லது இவற்றை தியாகம் செய்து அத்தியாவசிய பொருட்களான மருந்து மற்றும் எரிபொருளை கொண்டுவருவதற்கு முக்கியத்துவம் கொடுப்பதா என்பதை தீர்மானிக்க வேண்டும். இதனை செய்யாதமையினால் ஆப்பிள், தோடை, திராட்சை இருக்கின்றது. எரிபொருள் இல்லை. வெளிநாட்டிலிருந்து கொண்டுவரும் தேன் இருக்கின்றது. மருந்துகள் இல்லை.

தற்போதும் எரிபொருள் அடங்கிய கப்பல் துறைமுகத்தில் நங்கூரமிட்டுள்ளன. ஆனால், டொலர் இல்லை. உலகில் எரிபொருள் பிரச்சினை இருந்தால் இவ்வாறு கப்பல்கள் வந்து நிற்காது. எனவே, உலக யுத்தம் ஏற்பட்டாலும் தடையின்றி எரிபொருளை வழங்கமுடியும். குறிப்பாக, வரும் கப்பல்களுக்கு செலுத்த டொலர் இருந்தால் தடையின்றிய விநியோகத்திற்கு உறுதியளிக்க முடியும்.

இதேவேளை, எரிபொருள் விலை அதிகரிப்பதா இல்லையா? என்பதைத் தாண்டி, எரிபொருள் கப்பல்களுக்கு செலுத்துவதற்கான டொலரை சேர்ப்பதே பாரிய பிரச்சினையாகவுள்ளது.

எங்களிடம் எரிபொருளை கொண்டுவருவதற்கு போதிய நிதி இல்லையேல் எங்களுக்கு யாரேனும் உதவ வேண்டும் அல்லது விலையை அதிகரிக்க வேண்டும் அல்லது அரசாங்கம் மானியம் வழங்க வேண்டும். ஆனால், அரசாங்கமும் மானியம் வழங்காது, வங்கிகளும் கடன் வழங்காது, எரிபொருள் வரியையும் நீக்காதிருப்பின் நாட்டுக்கு தேவையான எரிபொருளை விநியோகிக்க முடியாது, தட்டுப்பாடு ஏற்படும்.

இதேவேளை, எரிபொருள் விலையை அதிகரிப்பதற்கு இதுவரை எவ்வித தீர்மானமும் இல்லை. அதேபோன்று, விலை மாற்றமடையாது என உறுதியளிக்கவும் முடியாது – என்றார்.

### கடல் வளத்தை பாதிக்காத...

உள்ளூர் இழுவைப் படகுகள் தொடர்பான சட்டத் திருத்தங்களை மேற்கொள்ளும் வரையில் நாரா நிறுவனத்தினால் அடையாளப்படுத்தப்பட்ட பிரதேசங்களில் இழுவைமடி வலைகளைப் பயன்படுத்த முடியும் என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கொழும்பு புகையிரத நிலையம் முன்பாக நேற்று (28) நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட கடற்றொழிலாளர்களின் பிரதிநிதிகளுக்கும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கும் இடையிலான கலந்துரையாடலின்போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக மேலும் கருத்து தெரிவித்த கடற்றொழில் அமைச்சர்,

"கடந்த ஆட்சியில் இழுவைமடி வலை தடைச் சட்டம் கொண்டு வரப்பட்டிருந்தது. எனினும் கடற்றொழிலாளர்களின் எதிர்ப்பு காரணமாக நாரா நிறுவனத்தினால் அடையாளப்படுத்தப்பட்ட பகுதிகளில் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையிலேயே, இழுவைமடி வலைத் தொழிலை முற்றாக தடைசெய்ய வேண்டும் என்ற கோரிக்கை தற்போது முன்வைக்கப்பட்டு வருகின்றது.



இந்நிலையில், எமது கடல் வளத்தை பாதிக்காத வகையில் இழுவைமடி வலையைப் பயன்படுத்துவது தொடர்பாக பொருத்தமான சட்ட திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். அதுவரையில் அடையாளப்படுத்தப்பட்ட பகுதிகளில் கடற்றொழிலாளர்கள் கடற்றொழில் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும்.

அதேபோன்று, கற்பிட்டி பிரதேசத்தில் இழுவைமடி வலையைப் பயன்படுத்துவதற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளமையினால், அப்பிரதேசத்தில் குறித்த தொழில் முறையை வாழ்வாதாரமாகக் கொண்டவர்கள் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடி பொருத்தமான தீர்வு வழங்கப்படும்" என்று தெரிவித்தார்.

அதேவேளை கருத்து தெரிவித்த கடற்றொழிலாளர் பிரதிநிதிகள், சுயலாப அரசியல் நலன்களுக்காக நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் போன்ற அரசியல்வாதிகள் தமது தொழில்முறைக்கு எதிரான கருத்துக்களை தெரிவித்து வருவதாகவும், விஞ்ஞான ரீதியாக நாரா நிறுவனத்தினால் ஆய்வு செய்து அனுமதிக்கப்பட்ட பிரதேசங்களில் தொழில் செய்வதற்கு ஏற்றமுறையில் சட்டத் திருத்தங்களை மேற்கொண்டு தமது வாழ்வாதாரத்தினை உறுதிப்படுத்தி தரவேண்டும் என்ற கோரிக்கையை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் முன்வைத்தனர்.

முன்னதாக, யாழ்ப்பாணம், மன்னார், கற்பிட்டி போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள், கொழும்பு புகையிரத நிலையம் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட நிலையில், நேரடியாகச் சென்று போராட்டத்தில் ஈடுபட்டிருந்த கடற்றொழிலாளர்களை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சந்தித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

### சிவராத்திரி தின...

சிவனுக்கு உகந்த நன்னாள் எடுத்துரைக்கும் நம்பிக்கை, உலக வாழ் மக்கள் அனைவரும் புத்தெழுச்சி பெறுவதற்கான உற்சாகத்தை ஏற்படுத்துவதோடு, உண்மைத்தன்மை, தியாக மனப்பான்மை மற்றும் மன்னிப்பு வழங்கல் போன்ற உண்மைக் குணங்களுடன் வாழ்வதற்கான வழியமைக்கிறது.

இவ்வாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சிவராத்திரி தின வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

மஹா சிவராத்திரி என்பது, சிவனருள் வேண்டி நடத்தப்படும் ஆன்மீகச் சடங்காகும். பல்லாயிரம் காலந்தொட்டே, இந்துக்கள் சிவபெருமானை வழிபட்டு, இந்தத் தெய்வீகப் பிரார்த்தனையில் ஈடுபட்டு சிவனருள் பெற்று வருகின்றனர்.

மனித உயிர்களுக்குள்ளும் இவ்வுலகத்திலும் உள்ள இருள் மற்றும் அஞ்ஞானம் நீங்கி, ஞான ஒளியைச் சரணடையும் நோக்கில், இந்தச் சிவராத்திரி தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. அத்துடன், ஒற்றுமை மற்றும் முக்திப் பேறு போன்றனவும் இந்நன்னாளில் கிடைக்கப்பெறும் என்பது நம்பிக்கை.

அனைவரையும் துன்பத்திலிருந்து விடுவிப்பதே, மனித குலத்தைத் தாண்டிய தெய்வீகப் பிரார்த்தனையாக உள்ளது. சிவபெருமானை நினைத்து விரதமிருந்து, சிவராத்திரி தினத்தன்று பெற்றுக்கொள்ளப்படும் ஆன்மீக பலம், ஒட்டுமொத்த சமூகமும் எதிர்கொண்டுவரும் சவால்களை வெல்வதற்குக் கிடைக்கும் ஆசீர்வாதமாகவே நாம் பார்க்கிறோம்.

சிவனுக்கு உகந்த நன்னாள் எடுத்துரைக்கும் நம்பிக்கை, உலக வாழ் மக்கள் அனைவரும் புத்தெழுச்சி பெறுவதற்கான உற்சாகத்தை ஏற்படுத்துவதோடு, உண்மைத்தன்மை, தியாக மனப்பான்மை மற்றும் மன்னிப்பு வழங்கல் போன்ற உண்மைக் குணங்களுடன் வாழ்வதற்கான வழியமைக்கப்படுகிறது. மஹா சிவராத்திரி தின ஆன்மீகச் செய்தியானது, ஒவ்வொருவரிடையேயான ஒற்றுமையை மேலும் பலப்படுத்தும்.

ஆன்மீகச் சிந்தனை, உத்வேகம் மற்றும் வீரத்தைக் குறிக்கும் சிவனிரவு, அனைவரதும் நோக்கங்களை அடைய வழிவகுக்கும் நன்னாளாக அமைய பிரார்த்திக்கிறேன் - என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

### மக்களுக்கும்...

பக்தி மிகுந்த சிவராத்திரி நாளிலே அனைவருக்கும் சௌபாக்கியமே கிடைக்க இறையருளை மனதார வேண்டித் துதிப்போம். அனைவரும் ஒருமித்த ஆன்மீக உணர்வோடு வழிபாடு செய்வதன் ஊடாக பல நன்மைகள் கைகூடும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ விடுத்துள்ள சிவராத்திரி தின வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது,

இந்து மக்கள் அனைவரதும் முழுமுதற் கடவுளான சிவபெருமானை நினைந்து விரதம் அனுட்டித்து, பக்தியோடு கொண்டாடும் மகா சிவராத்திரி எனும் புனித நன்னாளிலே, இந்த வாழ்த்துச் செய்தியினைக் கூறிக்கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

எல்லா மதங்களினதும் வளமான வாழ்க்கைக்கு ஆன்மீகமே அடிப்படையானது.

இந்துக்கள் அனைவராலும் புனிதமாக அனுஷ்டிக்கப்படும் விரத தினங்களிலே, மகா சிவராத்திரி மகோன்னதமானது.

இந்நன்னாள் இந்துமக்கள் அனைவராலும் ஆன்மீக உணர்வோடு சிறப்புற அனுஷ்டிக்கப்படும் சுபீட்சத்துக்கான பெருநாளாகும். இந்த புனித வழிபாட்டின் ஊடாக கடவுளின் ஆன்மீக சக்தி தமக்கு கிடைக்கும் என்று இந்து மக்கள் நம்புகின்றனர். செழிப்பானதொரு வாழ்க்கைப் பயணத்திற்கு ஆன்மீக உணர்வு அடிப்படையான ஒன்று. இன்றைய தினத்தில் அனைவரும் ஒருமித்த ஆன்மீக உணர்வோடு வழிபாடு செய்வதன் ஊடாக பல நன்மைகள் கைகூடும் என்பது இந்து மக்களின் நம்பிக்கையாகும்.

பல்வேறு இனத்தவர்களும் மதத்தவர்களும் இணைந்து பணியாற்றுவதன் மூலம், உங்களுக்கும் நாட்டிற்கும் சிறந்த எதிர்காலத்தை உருவாக்குவதற்கான வாய்ப்பு கிட்டும். இலங்கைத் தாயின் மக்கள் அனைவருக்கும் ஆரோக்கியமானதும் சுபீட்சம் மிக்கதும் அபிலாஷைகள் எல்லாம் கைகூடும் ஒரு எதிர்காலம் அமைய இந்த சிவராத்திரி தினம் மிகவும் முக்கியமானது என்பது எனது நம்பிக்கை.

துன்பங்கள் என்ற இருள் நீங்கி இன்ப ஒளி எங்கும் பரவ வேண்டித் துதிக்கும் பக்தி மிகுந்த இந்த நாளிலே அனைவருக்கும் சௌபாக்கியமே கிடைக்க இறையருளை மனதார வேண்டித் துதிப்போம்.

இந்த உன்னதமான மகா சிவராத்திரி தினத்தில் இலங்கை வாழ் இந்து மக்கள் அனைவருக்கும் நலமே விளையட்டும். நாடு நலம் பெறட்டும் - இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

### இலங்கை கடற்படை...

இலங்கை கடற்படை கைதுசெய்த தமிழக மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதமர் நரேந்திர மோடிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுதிய கடிதத்தில்கூறியதாவது,

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற் படையினரால் மீண்டும் மீண்டும் துன்புறுத்தப்படுவதையும், கைதுசெய்யப்படுவதை யும் இந்தியப் பிரதமரின் உடனடி கவனத்திற்கு கொண்டுவர விழைவதாகத் தெரிவித்துள்ளார். நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த 9 மீனவர்கள் தங்களது இயந்திர மீன்பிடிக் கப்பலில் (பதிவு எண் IND-TN-06-MM-6824) 24-2-2022 அதிகாலையில் பாக் வளைகுடா பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது இலங்கைக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு, இலங்கை யாழ்ப்பாணத்திலுள்ள மயிலாட்டி தளத்திற்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும்,

புதுச்சேரி, காரைக்கால் பகுதியைச் சேர்ந்த 13 மீனவர்கள் மற்றொரு மீன்பிடிப் படகில் (பதிவு எண் IND-PY-PK-MM-1370) மீன்பிடிக்கச் சென்றபோது, இலங்கைக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும், அதேபோன்று, 26-2-2022 அன்று இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து இயந்திரப் படகில் மீன்பிடிக்கச் சென்ற 8 மீனவர்கள் 27-2-2022 அதிகாலையில் இலங்கைக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு, இலங்கையிலுள்ள கிராஞ்சிக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர் என்றும் முதலமைச்சர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

நமது மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் குறுகிய கால கட்டங்களில் தொடர்ந்து இதுபோன்று எதிர்கொள்ளும் துன்புறுத்தல்கள் மிகுந்த மனச்சோர்வை ஏற்படுத்துவதாகக் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர், மீனவர்கள் துன்புறுத்தப்படும் நிகழ்வுகளும், கைதுசெய்யப்படும் நிகழ்வுகளும் அதிகரித்து வருகின்றன என்பதைக் குறிப்பிட்டு, தமிழ்நாடு அரசின் சார்பில் பலமுறை கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளபோதிலும் இந்த நிலை தொடர்வதாகத் தனது கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ளார்.

பாக் வளைகுடாவில் தமிழக மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளைப் பறிக்கும் வகையிலான இலங்கைக் கடற்படையினரின் இத்தகைய நடவடிக்கைகள், ஒன்றிய அரசின் ஒருங்கிணைந்த முயற்சிகளின் மூலம் நிரந்தரமாக முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டுமென்று முதலமைச்சர் கேட்டுக் கொண்டுள்ளார்.

தொடர்ந்து மீனவர்கள் கைதுசெய்யப்படுவதும், அவர்களது படகுகள் சிறைபிடிக்கப்படுவதும், மீனவ சமூகத்தினரிடையே மிகுந்த விரக்தியை ஏற்படுத்தியுள்ளது என்று குறிப்பிட் டுள்ள முதலமைச்சர், இந்த விவகாரத்தில் இந்தியப் பிரதமர் நேரடியாகத் தலையிட்டு, மீனவர்கள் மற்றும் அவர்களது மீன்பிடிப் படகுகளை உடனடியாக விடுவிக்கும் வகையில், இப்பிரச்சினையை இலங்கை அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு செல்ல ஒன்றிய வெளியுறவு அமைச்சகத்திற்கு உத்தரவிட வேண்டுமென்று தனது கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

# மற்றுமொரு வழக்கில் பெசில் விடுதலை

கடுவெல நீதவான் நீதிமன்றில் சொத்துக்குவிப்பு குற்றச்சாட்டில் தாக்கல்செய்யப்பட்ட வழக்கில் இருந்து நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷ விடுவிக்கப்பட்டுள்ளார். 2015ஆம் ஆண்டு சமுர்த்தி உத்தியோகத்தர்களின் பணிக்கொடைப் பணத்தை முறைகேடாகப் பயன்படுத்தியமை தொடர்பில் பொலிஸ் நிதிக் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### பாப்பரசரை சந்தித்தார்...

கொழும்பு பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை வத்திக்கானில் பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸை சந்தித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்கள் தொடர்பில் இலங்கையில் நடத்தப்பட்ட விசாரணைகள் மற்றும் அது தொடர்பில் உரிய நடவடிக்கைகள் எடுக்காமை குறித்து பேராயர் இதன்போது பாப்பரசரிடம் விளக்கமளித்துள்ளார்.

### ஐ.நா. மனித உரிமைகள்...

இந்நிலையில், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சல் பெச்லெட் இலங்கை தொடர்பாக முன்வைத்துள்ள எழுத்து மூல ஆவணம் குறித்து எதிர்வரும் 3ஆம் திகதி விவாதிக்கப்படவுள்ளதாக வெளிவிவகார அமைச்சின் தகவல்கள் தெரிவித்தன.

இந்த அறிக்கை தொடர்பாக இலங்கை அரசாங்கமும் உரிய பதிலை வழங்குவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் முன்னெடுத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளன.

குறிப்பாக, நாட்டில் பாதிக்கப்பட்ட மக்கள் உரிமைகளை ஏற்றுக்கொள்வது, இலங்கையில் கடந்த காலத்தில் இடம்பெற்றதாக கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலை செயற்படுத்துவதில் உள்ள தாமதம் தமது அதிருப்திக்கு காரணமாக அமைந்துள்ளதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் முன்வைத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 40 /ஒன்று தீர்மானத்திற்கு இணை அனுசரனை வழங்குவதில் இருந்து விலகி, இரண்டு வருடங்கள் கடந்தபோதிலும், பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் தொடர்பான திட்டமிடலை இலங்கை அரசாங்கம் இதுவரை எடுக்கவில்லை என அவர் தமது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 49ஆவது கூட்டத்தொடருக்கான இலங்கை பிரதிநிதிகள் குழுவிற்கு, வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தலைமை வகிக்கவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் முன்வைத்துள்ள அறிக்கைக்கு இலங்கை பிரதிநிதிகள் குழு பதிலளிக்கவுள்ளது. வெளிவிவகார அமைச்சர் மனித உரிமைகள் ஆணையாளர் மற்றும் பல்வேறு தரப்பினரையும் சந்திக்கவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

### எரிபொருள் ...

நாட்டில் கடந்த வாரத்திலிருந்து மின்சார உற்பத்திக்கு போதிய எரிபொருள் கிடைக்காதமையினால், 1–3 மணி நேர மின்வெட்டு அமுல்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக, நாளுக்கு நாள் இந்த நிலைமை தொடர்வதால் இன்று (01) முதல் 3 மணி நேரத்துக்கும் அதிகமான நேரம் மின்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது.

இதனால், பல தொழில் நிறுவனங்கள் பெரும் பாதிப்பை சந்தித்துள்ளது. குறிப்பாக, மின்வெட்டு அமுல்படுத்தப்பட்ட காலப்பகுதியில் இரவு நேரங்களில் மின்வெட்டு பரீட்சார்த்திகளுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியதால், தற்போது பகல், மாலை மற்றும் இரவு நேரங்கள் என மின்வெட்டு அமுல்ப்படுத்தப்பட்டுள்ளன.

அதேபோன்று, எரிபொருள் தட்டுப்பாட்டால் நாடளாவிய ரீதியிலுள்ள எரிபொருள் நிலையங்களில் எரிபொருள் இல்லை என்ற அறிவித்தல் ஒட்டப்பட்டுள்ளதுடன், சில நிலையங்கள் மூடப்பட்டுள்ளன. இதனால், போக்குவரத்துக்கு தேவையான எரிபொருளை பெற்றுக்கொள்வதற்காக மக்களும் வாகனங்களும் பல மணிநேரமாக நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டியுள்ளது.

அத்தோடு, எரிபொருள் இல்லாத காரணத்தினால் வாகன போக்குவரத்துகளும் முடங்கும் நிலையில் உள்ளது. குறிப்பாக, நாளுக்கு நாள் 40 – 50 வீதமான தனியார் பேருந்துகள் போக்குவரத்தில் இருந்து விலகும் நிலைமை ஏற்பட்டுள்ளன. இதனால், பயணிகளுக்கான போக்குவரத்துகளும் முடங்கியுள்ளன. அதேபோன்று, தற்போது அத்தியாவசிய தேவைக்கு மாத்திரம் எரிபொருள் வழங்கும் நிலைமை காணப்படுவதால் தனியார் வாகனங்களின் போக்குவரத்துகளும் குறைவடைந்துள்ளது.

இதேவேளை, எரிபொருள் தட்டுப்பாட்டை கட்டுப்படுத்துவதற்காக நிறுவனங்களில் வேலை நாட்களை கட்டுப்படுத்துவதற்கும் யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. எரிபொருளை நம்பியுள்ள நிறுவனங்களின் வியாபார செயற்பாடுகளும் தொடர்ந்து முடங்கும் நிலைமை ஏற்பட்டுள்ளன.

ஆகவே, எரிபொருள் தட்டுப்பாடு தொடருமாக இருந்தால் போக்குவரத்துகள், மின்உற்பத்திகள், தொழில் நிறுவனங்கள் என அனைத்துத் துறையும் முடங்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

### ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு...

மேம்படுத்துவதில் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றம் குறித்த உரையாடல் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தமிழீழ விடுதலை இயக்கம், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் ஆகியனவும், தமிழ் மக்கள் கூட்டணி, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழ்த் தேசிய கட்சி ஆகியனவற்றின் தலைவர்கள் கையெழுத்திட்ட ஆவணம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இந்த ஆவணத்தில் கையெழுத்திடுவதற்காக இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவிற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்த போதும், அவர் கையெழுத்திடவில்லை.

# இன்றைய ராசி பலன்

**01.03.2022 செவ்வாய்க்கிழமை மாசி 17**

**ஜோதிடர் நற்பவி**

**தொலைபேசி இலக்கம் : 0715346213/0714037141**

**நட்சத்திரம்: அவிட்டம்**
அ.கா. 5.19 - 02.03.2022
அதிகாலை 3.48 வரை

**திதி: அமர பட்ச சதுர்த்தசி**
அ.கா. 3.16 - 02.03.2022
அதிகாலை 1.00 வரை

**முற்கரணம்: கரஜம்**
அ.கா. 3.16 - பி.ப 2.06

**யோகம்: பரிகம்**
காலை 11.18 வரை

**சிவம்**
காலை 11.18 - 02.03.2022
காலை 8.21 வரை

**பிற்கரணம்: வணிஜம்**
பி.ப. 2.06 - 02.03.2022
அதிகாலை 1.00 வரை

**சுப நேரங்கள்**
காலை 10.54 - பி.ப 12.223

**அசுப நேரங்கள்**
**ராகு காலம்**
மாலை 3.23 - 4.53

**குளிகை காலம்**
பிற்பகல் 12.23 - 1.53

**எமகண்ட காலம்**
காலை 9.23 - 10.53

**துர் முகூர்த்தம்**
காலை 8.47 - 9.35
இரவு 11.11 - 11.59

லோகநாயகி ஸஹஷ்ர சீர்ஷ வதனா அன்னை பிரத்யங்கிராவின் கருணையாலே நற்பவி நற்பவி நற்பவி

**மேஷம்:** வணிகத்தில் நண்பர்களின் உதவி கிடைக்க பெறலாம். பணியில் பதவி உயர்வு உண்டாகலாம். சமுதாய செல்வாக்கு மேம்படலாம். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

**ரிஷபம்:** கடன் கொடுக்கும் விடயங்களில் கவனம் தேவைப்படலாம். ஆன்மீக நிகழ்வுகளில் பங்கேற்கும் வாய்ப்பு கிடைக்கலாம். எதிர்கால நலனுக்கான முதலீட்டில் கவனம் தேவைப்படலாம். தேவையற்ற சில நட்பால் பிரச்சினைகள் ஏற்படலாம்.

**மிதுனம்:** பரம்பரை சொத்துகள் தொடர்பில் மகிழ்ச்சி உண்டாகலாம். பிறருக்கு பரிந்துரைக்கப்படும் உத்தரவாதத்தை இன்று தவிர்ப்பது நல்லது. கோபத்தில் பேசும் சொற்களில் கவனம் தேவைப்படலாம். பணியிடங்களில் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கலாம். **சந்திராஷ்டமம்: புனர்பூசம் நட்சத்திரம் பாதம் 1/2/3க்கு மாலை 4.32 வரை**

**கடகம்:** வணிகத்தில் புதிய மாற்றங்களை செய்யலாம். இலக்கிய ஆர்வம் அதிகரிக்கலாம். தொழில் பயணம் ஏற்படலாம். வேலை தேடுவோருக்கு பணி கிடைக்க பெறலாம். **சந்திராஷ்டமம்: புனர்பூசம் நட்சத்திரம் பாதம் 4க்கு மாலை4.32 - இரவு 10.09 பூசம் நட்சத்திரத்திற்கு இரவு 10.09 - 02.03.2022 இரவு 8.53 வரை**

**சிம்மம்:** குடும்பப் பொறுப்புகள் அதிகரிக்கலாம். சட்டம் சம்பந்தப்பட்ட விடயங்களில் நன்மை கிடைக்கலாம். உடல்நலத்தில் அக்கறை தேவைப்படலாம். வேலைகளில் பணித்திறன் பாராட்டப்படலாம்.

**கன்னி:** பணம் சம்பந்தப்பட்ட சில சிக்கல்கள் ஏற்படலாம். வாழ்க்கைத்துணையின் உடல்நலத்தில் கவனம் தேவைப்படலாம். பணியில் கடின உழைப்பின் பலன் தாமதமாக கிடைக்கலாம். முறையற்ற விடயங்களில் ஒதுங்கியிருப்பது நன்மை. இறைவணக்கம் நன்மை.

**துலாம்:** விரும்பத்தகாத செய்திகள் கிடைக்கலாம். காப்புறுதி ஆவணங்களில் கவனம் தேவைப்படலாம். பணிச்சுமை அதிகரிக்கலாம். வசதிகள் குறையலாம். இறைவணக்கம் தேவை.

**விருச்சிகம்:** வணிகத்தில் புதிய விற்பனை ஒப்பந்தங்கள் கிடைக்கலாம். நேர்மறை எண்ணங்கள் மனதில் நிறைந்திருக்கும். கூட்டுத்தொழில் சம்பந்தப்பட்ட வேலைகளில் நன்மை அதிகரிக்கலாம். பயணம் ஏற்படலாம்.

**தனுசு:** நிதி பற்றாக்குறை நீங்க துவங்கலாம். மன கவலைகளை இறைவணக்கத்தில் நீக்கி, மன வலிமையும் பெறலாம். மாணவர்களுக்கு கல்வியில் நல்ல நிலை தோன்றலாம் விரும்பத்தகாத சொற்களை நீக்குவதில் கவனம் தேவைப்படலாம்.

**மகரம்:** தம்பதியரிடையே உறவின் நிலை மேம்படும். காதலர்களுக்கு இனிமையான நாளாக அமையலாம். குடும்ப ஆதரவு அதிகரிக்கலாம். சிலரால் தேவையான வழிகாட்டுதல் உருவாகலாம். மரியாதை மேம்படும்.

**கும்பம்:** வீட்டை தவிர்ந்த வெளி உணவு விடயங்களில் சிறிய கவனம் தேவைப்படலாம். சில நிதிப் பிரச்சினைகள் ஏற்பட்டாலும், இன்றைய கிரக நிலையால் நன்மை கிடைக்கலாம். தேவையற்ற நட்பால் பிரச்சினை ஏற்படாமல் இருக்க கவனம் தேவைப்படலாம். செயல்களில் சிறந்த தந்திரத்தை கடைப்பிடித்தல் நன்மை தரலாம்.

**மீனம்:** நண்பர்களுடன் உற்சாகமான நாளாக அமையலாம். இல்லச் சூழலில் இணக்கம் நிலவும். சில பிரச்சினைகள் நீங்க துவங்கலாம். பணியில் பதவி உயர்வு கிடைக்கலாம். காதலர்களுக்குள் பரஸ்பர ஆதரவு அதிகரிக்கலாம்.



# திரிபோஷாவுக்கு பெரும் தட்டுப்பாடு

## நாடு முழுவதும் விநியோக நடவடிக்கைகள் இடைநிறுத்தம்

**(நமது விசேட செய்தியாளர்)**

திரிபோஷாவுக்கு நாடு முழுவதும் தட்டுப்பாடு நிலவுவதாக சுகாதார அமைச்சின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார். இதன் காரணமாக சுகாதார அமைச்சிடம் கையிருப்பில் உள்ள குறைந்த எண்ணிக்கையிலான திரிபோஷா பைக்கற்றுகளை விநியோகிக்கும் நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

திரிபோஷாவுக்கு தட்டுப்பாடு நிலவுவதுடன், சுகாதார அமைச்சின் களஞ்சியத்தில் திரிபோஷா பைக்கற்றுகள் கையிருப்பில் இல்லையென சுகாதார அமைச்சின் குடும்பநல சேவைப் பணியகத்தின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் சித்ரமாலி டி சில்வா 'தமிழன்' நாளிதழுக்கு தெரிவித்தார்.

திரிபோஷா உற்பத்திக்காக தேவையான அளவு சோளம் கிடைக்காமையே இதற்குக் காரணம் என அவர் குறிப்பிட்டார்.

நாளாந்த திரிபோஷா தேவைக்காக 70 மெட்ரிக் தொன் சோளம் தேவைப்படுவதாகவும் கடந்த காலங்களில் நாட்டில் சோள உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். தேவையான அளவு சோளமும் கோதுமை மாவும் கிடைக்கும் பட்சத்தில் திரிபோஷாவை தயாரிக்க முடியுமெனவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.




உக்ரைனுக்கு எதிரான ரஷ்யாவின் தாக்குதல்களை உடனடியாக நிறுத்தக்கோரி இலங்கையிலுள்ள உக்ரைன் பிரஜைகள் கொழும்பிலுள்ள ரஷ்ய தூதரகத்துக்கு முன்பாக நேற்று (28) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (படப்பிடிப்பு: ஏஷான் தசநாயக்க)

# மார்ச் 11,12,13 ஆம் திகதிகளில் 'அகுன' நாடகம் அரங்கேற்றம்

## நுழைவுச் சீட்டுகள் இன்றுமுதல் விநியோகம்





இலங்கையின் வரலாற்றுக் கதைகளை அடிப்படையாகக்கொண்டு கற்பனை கதாபாத்திரங்களாலும் மற்றும் இடங்களிலும் காட்சியமாக்கப்பட்டு சமகால அரசியலையும் பொருளாதாரத்தையும் மற்றும் உலகின் உண்மை தன்மைகளை தழுவி எழுதப்பட்டுள்ளது 'அகுன' (மின்னல) நாடகம்.

முற்றிலும் மின்மயமாக்கப்பட்ட 'அகுன' (மின்னல்) மும்மொழியிலும் தயாராகியுள்ளது. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலத்தின் கலவையாக தயாராகும் இந்நாடகம் 'கலாகீர்த்தி' லக்ஷ்மன் டி சில்வாவினால் இயக்கப்பட்டு மார்ச் 11,12, 13 ஆம் திகதிகளில் அரங்கேற்றப்படவுள்ளது.

இலங்கை நாடக வரலாறு பல்வேறு விதமான நாடக வகைகளை கடந்து வந்துள்ளது. அவ்வகையில் முற்றிலும் மாறுபட்ட இக்காலத்திற்கு ஏற்ற நவீன இசை நாடகமாக இது அரங்கேற்றப்படவுள்ளது.

ஜெரோம் லக்ஷ்மன் டி சில்வா பற்றிய அறிமுகம் ஆங்கில நாடக ரசிகர்களுக்கு ஒன்றும் புதிதல்ல. இந்நாடகத்தின் பின் சிங்களம் மற்றும் தமிழ் நாடக ரசிகர்களுக்கு அவரின் அறிமுகம் தவிர்க்க முடியாததொன்றாகும்.

லயனல் வென்ட் வொர்க்ஷாப் பிளேயர்ஸ் நாடக பயிற்சி முகாம் ஒன்றில் நடத்தப்பட்ட பிரெய் ஸ்ட்ரோமிங் என்ற பயிற்சியின் மூலமாக கலைஞர்கள் எல்லோரும் அவர்களின் கருத்துகளின் மூலத்தை மையமாக வைத்து தோன்றியதே இந்த நாடகம். ஏறக்குறைய 60இற்கும் மேற்பட்ட லயனல் வென்ட் கலைஞர்களின் அயராத உழைப்பாலும் பயிற்சியினாலும் உருவாகிறது. கொவிட் தொற்றுப் பரவல் காலங்களிலும் கூட ஒளி உரு கலந்துரையாடல் மூலம் வசனங்கள் மற்றும் பாடல்களை பயிற்சிசெய்து நாடகத்தை இவ்வளவு காலம் கொண்டுவந்துள்ளார்கள்.

கதை, எழுத்து ஜெரோம் டி சில்வா மற்றும் மகேஷ் விக்ரமசிங்க ஆகியோராவர். அமில விஜயரத்ன மற்றும் பிரபோத புத்திபிரியவும் இசை அமைத்துள்ளார்கள். நடன அமைப்பு ஜெரோம் டி சில்வா. இணை நடன அமைப்பாளராக இந்திக்க லக்மால் செயற்பட்டுள்ளார். இந்த நாடகத்துக்கான நுழைவுச்சீட்டுகளை இன்றுமுதல் லயனல் வென்ட் அரங்கில் பெற்றுக்கொள்ளலாம். காட்சிநேரங்கள் மார்ச் 11 வெள்ளி இரவு 7 மணி, மார்ச் 12 சனி 3 மணி (பி.ப.), 7 மணி (பி.ப.), மார்ச் 13 ஞாயிறு 3மணி (பி.ப.), 7 மணி (பி.ப.) என அறிவிக்கப்பட்டுள்ளது.



இந்திய கடற்படைக்குச் சொந்தமான ஐஎன்எஸ் நிரீக்ஷக் கப்பல் இலங்கை கடற்படையினருக்கு டைவிங் பயிற்சியை வழங்குவதற்காக திருகோணமலை துறைமுகத்தை நேற்று (28) வந்தடைந்தது. இந்தக் கப்பலை இலங்கை கடற்படையினர் கடற்படை மரபின்படி வரவேற்றனர். இந்திய கடற்படைக் கப்பலின் கட்டளை அதிகாரி மொஹமட் இக்ரம் தலைமையிலான குழுவை கிழக்குப் பிராந்தியத்துக்குப் பொறுப்பான கட்டளைத் தளபதி ரியர் எட்மிரல் பி.டி.எஸ்.டயஸ் வரவேற்று கலந்துரையாடல்களை மேற்கொண்டார்.

# கண்டிக்கான நெடுஞ்சாலை பணிகள் 2024இல் பூர்த்திசெய்ய ஏற்பாடு

## அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உறுதி



ஜனாதிபதி கோட்டாபயவின் உத்தரவின் பேரில் கண்டிக்கான நெடுஞ்சாலைகள் நிர்மாணிப்பணிகள் 2024ஆம் ஆண்டளவில் பூர்த்திசெய்யப்பட வேண்டும். கண்டிப்பாக இதை செய்து முடிப்போம். நிச்சயமாக நாங்கள் அதை செய்வோம். கொவிட் என்று கூறி நாங்கள் எந்த அபிவிருத்தி செயல்பாடுகளை நிறுத்தவில்லை - என நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

மல்வத்து அனுநாயக்க தேரர் திம்புல்கும்புரே விமலதர்ம தேரரின் தலைமையில் கண்டியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

எங்களுக்கு டொலர் பிரச்சினை உள்ளது. எமது நாட்டுக்கு டொலர்களை அனுப்பியவர்களை நாம் நாட்டு மாவீரர்கள் என்று அழைத்தோம். அந்த நாடுகளில் மக்கள் இறந்தபோது எமது நாட்டு மாவீரர்களை இலங்கைக்கு கொண்டு வந்தோம். தற்போது இரண்டு இலட்சம் பேர் திரும்பிச் சென்றுள்ளனர். இந்தப் பிரச்சினைகளை எமக்கு தீர்க்க முடியும். வருமானத்தைப் பெருக்கி, செலவைக் குறைத்து இந்த நாட்டை எப்படியாவது அபிவிருத்தி செய்வோம். சரியான நேரத்தில் ஊதியம் வழங்கப்படுகிறது. எனவே, குறித்த நேரத்தில் பணிபுரிந்து, தங்கள் பணியை முறையாக செய்தால் பிரச்சினைகள் தீரும்.

2024ஆம் ஆண்டு ஜனாதிபதியின் உத்தரவின்படி, இந்த அதிவேகப் பாதையை நிறைவுசெய்ய நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். தொண்ணூறு சதவீத காணிகள் கையகப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றுக்கு பணம் செலுத்தப்பட்டுள்ளது. இன்னும் பத்து சதவீதம் செலுத்த வேண்டியுள்ளது. 2014 நவம்பரில் குருநாகல், தம்புள்ளை, கலகெதரவில் அதிவேக நெடுஞ்சாலைக்கான அடிக்கல்லை 5ஆவது நிறைவேற்று ஜனாதிபதி நாட்டினார். இதற்கான அனைத்து ஒப்பந்தங்களையும் வழங்கியதுடன், அவர் தோல்வியடைந்ததையடுத்து அவை இரத்துசெய்யப்பட்டன. அதை இரத்துசெய்யாமல் இருந்திருந்தால் 2018இல் கடந்த அரசே இதனை திறந்து வைத்திருக்க முடியும்.

அதை அவர்கள் செய்த வழியில் திறந்திருக்கலாம். ஆனால், அவர்கள் பழிவாங்கல் செய்ததால் அனைத்தும் இரத்துசெய்யப்பட்டன. 2017ஆம் ஆண்டு கடவத்தை முதல் மீரிகம வரையும் மீரிகமவில் இருந்து குருநாகல் வரையும் 1, 2 என இரண்டு பிரிவுகளை கடந்த அரசு ஆரம்பித்தது.

2015ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்து மூன்று மாதங்களில் கடவத்தையிலிருந்து மீரிகம வரையான நிர்மாணப் பணிகளை முதலாவதாக வழங்கியது. எமது அரசு ஆட்சிக்கு வந்தவுடன் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ 2019 ஆம் ஆண்டளவில் 36 பில்லியன் ரூபாவை 60 நாட்களுக்குள் வழங்கினார். என்னால் முடிந்தவரை விரைவாக இதைச் செய்ய நான் கடுமையாக உழைக்கிறேன் - என்றார்.



# ஸ்ரீ இராஜேஸ்வரி கோயிலில் மகா சிவராத்திரி விழா

கொழும்பு, மட்டக்குளி, காக்கைத்தீவு பிரதேசத்தில் அமைந்துள்ள ஸ்ரீ இராஜராஜேஸ்வரி தேவாஸ்தானத்தில் இன்று (01) மகாசிவராத்திரி பூஜைகள் இடம்பெறவுள்ளன.

இன்றைய தினம் விசேட அபிஷேக ஆராதனைகள், அலங்காரங்கள், உற்சவங்கள் நடைபெறவுள்ளன. பூஜைகளை தொடர்ந்து ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அறநெறி பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. மேலும், நடனம், பன்னிசை, பேச்சு மற்றும் வில்லுபாட்டு போன்ற நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.




டொலர்களில் அறவிடப்படும் வட்டியை உடனடியாக நிறுத்துதல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்கள் கூட்டுத்தாபனத்துக்கு முன்பாக நேற்று (28) போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். (படப்பிடிப்பு: சமன் அபேசிறிவர்தன)



கடற்றொழிலாளர்கள் பல்வேறு கோரிக்கைளை முன்வைத்து கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக நேற்று (28) போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர். இதன்போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவ்விடத்துக்கு வருகைதந்து மீனவர்களின் கோரிக்கைகள் தொடர்பில் கேட்டறிந்தார். (படப்பிடிப்பு: சமன் அபேசிறிவர்தன)

கொவிட்–19 உண்டாக்கிய பொருளாதாரப் பாதிப்பிலிருந்து உலகம் மீண்டு வருவதற்குள் உக்ரைன் - ரஷ்யா இடையிலான மோதல் சர்வதேச அளவில் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியுள்ளது. இந்தப் பிரச்சினை சர்வதேச அரசியலில் பெரும் தாக்கம் செலுத்துவதோடு, தொழில் மற்றும் பொருளாதார உலகிலும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று கருதப்படுகிறது.

உக்ரைன் நெருக்கடி தீவிரமான நிலையில், மசகு எண்ணெய் விலையில்தான் உடனடி பாதிப்பு இருந்தது. சர்வதேச சந்தையில் மசகு எண்ணெய் விலை பீப்பாய்க்கு 100 டொலரைக் கடந்தது. நெருக்கடி இன்னும் தீவிரமானால், மசகு எண்ணெய் விலை மேலும் உயரலாம்.

மசகு எண்ணெய் இறக்குமதியை அதிகம் சார்ந்திருக்கும் நிலையில், உள்நாட்டிலும் இது பாதிப்பை ஏற்படுத்தலாம். உலகளவில் பொருட்களின் விலை அதிகரிப்பது, பணவீக்கம் அதிகரிப்பது போன்றவையும் நிகழலாம். இவை வளர்ச்சி வேகத்தை பாதிக்கும். எனினும், ரஷ்யா மீதான சர்வதேச நாடுகளின் நிலைப்பாடு இன்னும் தீவிரமாகி, அந்நாடு மேற்கத்திய பணப் பரிவர்த்தனை அமைப்பிலிருந்து விலக்கி வைக்கப்படும் நிலை உண்டானால் பாதிப்பு இன்னும் தீவிரமாகும்.

ஐரோப்பாவின் எரிசக்தித் தேவையைப் பூர்த்திசெய்வதில் ரஷ்யா முக்கிய பங்கு வகிப்பதால், இத்தகைய நடவடிக்கை பரவலாக பாதிப்பை உண்டாக்கும். மசகு எண்ணெய் விலைப்போக்கு நிச்சயம் இலங்கையின் பொருளாதாரம் மீது தாக்கம் செலுத்தும். இறக்குமதிக்கான செலவு அதிகரித்து, நடப்புக் கணக்கு பற்றாக்குறையையும் அதிகமாக்கலாம். இலங்கை ரூபாயின் மதிப்பிலும் இது தாக்கம் செலுத்தும்.

ரஷ்யா மற்றும் உக்ரைன் ஆகிய நாடுகள் உலக கோதுமை உற்பத்தியில் முக்கிய அங்கம் வகிக்கின்றன. இரு நாடுகளும் 30 சதவீத ஏற்றுமதியைக் கொண்டுள்ளன. போரால் கோதுமை விநியோகச் சங்கிலி பாதிக்கப்பட்டால் கோதுமை விலையிலும் தாக்கம் செலுத்தும். சர்வதேச போக்கு உள்நாட்டு சந்தையிலும் தாக்கம் செலுத்தலாம். இதனால் கோதுமைப் பொருட்கள் விலை உயரும் வாய்ப்புள்ளது.

அதேபோல் இந்த இரு நாடுகளிலிருந்தும் பல நாடுகளுக்கு சூரிய காந்தி எண்ணெய் ஏற்றுமதி செய்யப்படுகிறது. தற்போதைய பிரச்சினை நீடித்தால் அது சமையல் எண்ணெய் விலையிலும் தாக்கம் செலுத்தும். சோளம், பார்லி போன்ற உணவுப்பொருட்கள் பிரிவிலும் பாதிப்பிருக்கும் எனக் கருதப்படுகிறது. இந்த நெருக்கடி மேலும் தீவிரமாகாமல் சுமுகமான தீர்வுக்கு வருவதையொட்டி பொருளாதார பாதிப்பின் தீவிரமும் அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உக்ரைன் மீதான தாக்குதலையடுத்து ஐரோப்பிய ஒன்றியம், ரஷ்யா மீது விதித்துள்ள பொருளாதாரத் தடைகளால் இலங்கையும் பெரிதளவில் பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை ஐரோப்பிய ஒன்றியம் ரஷ்ய வங்கி பணப்பரிமாற்றத்திற்கு விதித்த தடையின் காரணமாக ரஷ்யாவுடன் கொடுக்கல் - வாங்கல்களை மேற்கொள்ளும் இலங்கை உட்பட்ட பல நாடுகள் பெரிதான சவாலை சந்திக்கவுள்ளன.


தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.

தொலைநகல் : 0112 67 34 42.

தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87

விளம்பரம் : 077 172 1880

மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2022, மார்ச் 01ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை


# வரப்போகும் நெருக்கடி!

தேயிலையை கொள்வனவுசெய்யும் ரஷ்யாவின் மூன்றாவது நாடாக இலங்கை திகழ்கிறது. வருடாந்தம் 150 மில்லியன் டொலர் பெறுமதியான தேயிலை ரஷ்யாவுக்கு ஏற்றுமதிசெய்யப்படுகிறது. இப்போது வங்கி முறைமை ஊடாக ரஷ்யாவுடன் கொடுக்கல் - வாங்கல் செய்ய ஐரோப்பிய ஒன்றியம் தடைவிதித்திருப்பதால் இலங்கை அதன் சவாலை எதிர்கொள்ளவுள்ளது.

தேயிலையை இலங்கை ஏற்றுமதி செய்யும்போது அதற்கான பணத்தைப் பெறுவதில் சிக்கல் நிலைமை ஏற்படக்கூடுமென இலங்கை தேயிலைச் சபையின் தலைவர் ஜயம்பதி மொல்லிகொட தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் மாத்திரம் 27 மில்லியன் கிலோ தேயிலை ரஷ்யாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. அது மட்டுமல்லாமல், இலங்கையிலிருந்து ரஷ்யாவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் இதர பொருட்களிலும் இதே தாக்கம் ஏற்படவுள்ளது. இதேவேளை, கடந்த காலங்களில் இலங்கை வந்த சுற்றுலாப் பயணிகளில் நூற்றுக்கு 30 வீதமானவர்கள் உக்ரைன், ரஷ்யா, கஸகஸ்தான் மற்றும் பெலாரஸ் ஆகிய நாடுகளிலிருந்து வந்தவர்களாவர். ஆனால், இப்போதைய நிலையில், சுற்றுலாப்பயணிகளின் வருகையிலும் வீழ்ச்சி ஏற்படுமென சுட்டிக்காட்டப்படுகிறது.

இவற்றுக்கப்பால், சர்வதேச சந்தையில் எரிபொருள் விலைகளிலும் ரஷ்ய - உக்ரைன் விவகாரம் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனால் இலங்கையில் எரிபொருள் விலை மேலும் அதிகரிக்கப்படக்கூடுமென சொல்லப்படுகிறது.

ஆயிரக்கணக்கான நிதி நிறுவனங்களால் பயன்படுத்தப்படும் சர்வதேச பணப்பரிவர்த்தனை சேவை அமைப்பான ஸ்விஃப்டில் இருந்து பல ரஷ்ய வங்கிகளை விலக்கி வைக்க ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் ஒப்புக்கொண்டுள்ளன.

ரஷ்ய மத்திய வங்கியின் சொத்துகளும் இதன்மூலம் முடக்கப்படும். இது, ரஷ்யாவின் வெளிநாட்டுக் கையிருப்புகளை அணுகும் திறனைக் கட்டுப்படுத்தும். “சர்வதேச நிதி அமைப்பிலிருந்து ரஷ்யாவை மேலும் தனிமைப்படுத்துவதே இதன் நோக்கம்” என இது தொடர்பாக வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எண்ணெய் மற்றும் எரிவாயு ஏற்றுமதிக்கு ரஷ்யா, ஸ்விஃப்ட் சேவையையே அதிகம் சார்ந்திருக்கிறது. உக்ரைன் மீதான ரஷ்ய படையெடுப்பைத் தொடர்ந்து, ரஷ்யாவுக்கு எதிராக இன்றுவரை விதிக்கப்பட்ட நடவடிக்கைகளில் இது மிகக் கடுமையானதாகும்.

ஸ்விஃப்ட் என்பது உலகளாவிய நிதிப் பரிவர்த்தனைகளுக்கான சேவை அமைப்பாகும். அதாவது, எல்லைகளைத் தாண்டி பணத்தை பாதுகாப்பாகவும், விரைவாகவும் அனுப்ப இந்த முறை அனுமதிக்கிறது.

ஸ்விஃப்ட் என்பது, சொசைட்டி ஃபோ வேர்ல்ட் வைட் இன்டர்பேங்க் ஃபைனான்சியல் ரெலிகம்யூனிகேஷன் (Worldwide Interbank Financial Telecommunication) என்பதன் சுருக்கமாகும். 1973 இல் இது பெல்ஜியத்தில் உருவாக்கப்பட்டது. ஸ்விஃப்ட், 200இற்கும் மேற்பட்ட நாடுகளில் 11,000இற்கும் மேற்பட்ட வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களால் பயன்படுத்தப்படுகிறது. ஸ்விஃப்டிலிருந்து எந்த ரஷ்ய வங்கிகள் அகற்றப்படும் என்பது தற்போது தெளிவாகத் தெரியவில்லை. இது எதிர்வரும் நாட்களில் தெளிவாகும்.

டிரில்லியன் டொலர்கள் மதிப்பிலான பணப் பரிவர்த்தனைகளுக்குப் பயன்படுத்தப்படும் ஸ்விஃப்ட் சேவையிலிருந்து ரஷ்ய வங்கிகளை நீக்குவது, பொருளாதாரத்தைக் கடுமையாக பாதிக்கும். எளிமையான மற்றும் உடனடி பரிவர்த்தனை வசதியிலிருந்து ரஷ்ய நிறுவனங்களை விலக்கிவைப்பதே இதன் நோக்கம். ரஷ்யாவின் மதிப்புமிக்க எரியாற்றல் மற்றும் விவசாயப் பொருட்களுக்கான பணவரவு கடுமையாக பாதிக்கப்படும். வங்கிகள் ஒன்றுக்கொன்று நேரடியாகச் சமாளிக்க வேண்டியிருக்கும்.

தாமதங்கள் மற்றும் கூடுதல் செலவுகள் ஏற்படும். இதனால் ரஷ்ய அரசின் வருவாய் குறையும். அதேவேளை, உலக நாடுகளின் ஏற்றுமதி வருமானம் குறையும். தனது சொந்தப் பணப்பரிவர்த்தனை முறையை வைத்துள்ள சீனா போன்ற, பொருளாதாரத் தடைகளை விதிக்காத நாடுகளின் வழியாக ரஷ்ய வங்கிகள் பணம் செலுத்தக்கூடும். தொடக்கத்தில், ஜேர்மனி, பிரான்ஸ் மற்றும் இத்தாலி போன்ற சில நாடுகள், ரஷ்யாவை ஸ்விஃப்ட் பயன்பாட்டிலிருந்து விலக்கிவைக்கும் நடவடிக்கையை மேற்கொள்ளத் தயக்கம் காட்டின. இந்தத்தடையானது, பிற நாடுகளையும், நிறுவனங்களையும் பாதிக்கும் என்ற கவலைகளும் நிலவுகின்றன.

கொரோனா தாக்கத்திற்குள்ளாகிய உலக நாடுகள் அதிலிருந்து விடுபட்டு தலைதூக்கிவரும் நிலையில், இப்போது ஏற்பட்டுள்ள இந்த மோதல் அதில் மேலும் தாக்கத்தை செலுத்தப்போகிறது. இலங்கை போன்ற சிறிய நாடுகளின் நிலை மேலும் மோசமடையும். பொருளாதார உபாயங்கள் முறையாக வகுக்கப்பட்டாலே இவற்றிலிருந்து மீள முடியும்.



# உக்ரைன் போரின் பின்னணி

ஓட்டோமன் பேரரசின் வீழ்ச்சியைத் தொடர்ந்து, ரஷ்யப் பேரரசு கிரீமியா தீபகற்பத்தைத் தன்னோடு இணைத்துக்கொண்டது. ரஷ்யப் பேரரசில் உக்ரைன் இணைந்ததன் 300ஆம் ஆண்டைச் சிறப்பிக்கும் வகையில், 1954இல் அன்றைய சோவியத் ஒன்றியத்தின் ஜனாதிபதி நிகிதா குருஷேவ் கிரீமியாவை உக்ரைனுக்குப் பரிசாக வழங்கினார். 40 ஆண்டுகளில் சோவியத் ஒன்றியம் தகர்ந்துவிடும் என்று அவர் அன்று நினைத்திருக்க வாய்ப்பில்லை.

சோவியத் ஒன்றியம் 1991இல் உடைந்தபோது, சோவியத்தின் அணு ஆயுதக் கிடங்குகளில் மூன்றில் ஒரு பகுதி உக்ரைனில் இருந்தது. அன்றைய காலகட்டத்தில் அது உலகின் மூன்றாவது பெரிய அணு ஆயுதக் கிடங்கு என்று கூறலாம். இதிலிருந்தே முன்பு நிலவிய உக்ரைன் - ரஷ்ய பரஸ்பர உறவைப் புரிந்துகொள்ள முடியும். பின்பு, இந்த அணு ஆயுதங்கள் அனைத்தும் சோவியத்திலிருந்து பிரிந்து சென்ற சுதந்திர நாடுகளின் கூட்டமைப்பின் கண்காணிப்பில் இருந்தன. உக்ரைன் 1994இல் ஆயுதப் பரவல் தடைச் சட்டத்தில் கையெழுத்திட்ட பின்பு, தன்னிடம் இருக்கிற அனைத்து அணு ஆயுதங்களையும் 1996இல் ரஷ்யாவிடம் ஒப்படைத்தது.

1991இல் சோவியத் ஒன்றியம் சிதறுண்டதோடு பனிப்போர் முடிவுக்கு வந்தது. ஆனால், தன்னுடன் எல்லையைப் பகிர்ந்துகொண்டுள்ள முன்னாள் சோவியத் ஒன்றிய நாடுகளின் உள்நாட்டு அரசியல் மாற்றங்கள், ரஷ்யாவுக்குப் புதிய பாதுகாப்பு சவால்களைத் தோற்றுவித்துள்ளன. கிழக்கு ஐரோப்பிய நாடுகள், மேற்கத்திய நாடுகளால் தூண்டப்படுகின்றன. குறிப்பாக, ஐரோப்பியக் கூட்டமைப்பு, அமெரிக்கா ஆகியவற்றின் வழிகாட்டுதலிலுள்ள வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பில் (நேட்டோ) உக்ரைன் சேர்வதற்கான முயற்சிகளைத் தனது பாதுகாப்புக்கான பெரும் அச்சுறுத்தல் என்று ரஷ்யா கருதுகிறது.

உக்ரைன் மக்களில் ஒருசாராரிடம் ஐரோப்பிய ஒன்றியத்தில் இணையும் ஆர்வமிருக்கிறது. சோவியத் ஆட்சிமுறையின் கட்டுப்பாடுகளை அனுபவித்த அம்மக்கள், ஐரோப்பிய சுதந்திர ஜனநாயகத்தைப் பெரிதும் விரும்புகின்றனர். இதனால், உக்ரைன் ஜனாதிபதி தேர்தல்களில் ஐரோப்பிய ஒன்றியத்துடன் சேர்வதற்கு முன்மொழியும் தலைவருக்கே கூடுதல் ஆதரவு கிடைத்தது. அதே நேரத்தில், ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைவதற்கான சாத்தியங்கள் இன்னும் அங்கு உருவாகவில்லை. குறிப்பாக, அதன் வளர்ச்சி பெறாத பொருளாதாரம், வலுப்பெறாத ஜனநாயக அமைப்பு, அரசுக்கு எதிராக நடக்கும் தொடர் ஆர்ப்பாட்டங்கள் ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

மொஸ்கோவின் சுற்றுப்பாதையிலிருந்து கீவ் நகர் விலகி, மேற்கத்திய சித்தாந்தத்தை நோக்கிய மாற்று வழியில் பயணிக்கத் தடைக்கல்லாக உக்ரைன் முன்னாள் ஜனாதிபதி விக்டர் யெனுகோவேய்க் இருந்தார். அவர் ஒரு ரஷ்ய ஆதரவாளர். 2010இல் அவருடன் போட்டியிட்டுத் தோல்வியடைந்த பெண் வேட்பாளர் டைமோஷென்ஸ்கோ இருமுறை பிரதமராகப் பதவி வகித்தவர். இவர் ஐரோப்பிய ஒன்றியத்துடன் உக்ரைன் அங்கம் வகிக்க வேண்டுமென்றும், அவ்வாறு இணைந்தால் உக்ரைன் செழிப்படையும் என்றும் வெளிப்படையாக ஆதரவு திரட்டியவர். உக்ரைனின் பாதுகாப்புக்கு நேட்டோவுடன் இணைவது முக்கியம் என்ற கருத்தைக் கொண்டவர். ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்த அவர், அரசியல் கைதியாக சிறையிலடைக்கப்பட்டார். அவர் தன் மருத்துவ சிகிச்சைகளுக்காக ஜேர்மனி செல்லவும், உக்ரைனில் அரசியல் பதற்றம் தணியவும் உக்ரைன் நாடாளுமன்றத்தில் நவம்பர் 2013இல் முன்வைக்கப்பட்ட தீர்மானங்கள் நிராகரிக்கப்பட்டன. அதைத் தொடர்ந்து பேரலையைபோல் அங்கு போராட்டங்கள் வெடித்தன.

ஜனாதிபதி விக்டர் யெனுகோவேய்க் தலைமையிலான அரசு, ஐரோப்பிய ஒன்றியத்துடனான அனைத்துப் பேச்சுவார்த்தைகளையும் முடித்துக்கொண்டு, ரஷ்யாவுடன் கைகோர்க்கத் தயாரானது. இதன் காரணமாக, ஏற்கனவே நடந்துகொண்டிருந்த போராட்டங்கள் மேலும் வலுபெற்றன. இந்தப் போராட்டங்களில் 18 பொலிஸ் அதிகாரிகள் உட்பட மொத்தம் 130 பேர் கொல்லப்பட்டனர்.

இதற்கிடையே, எதிர்க்கட்சியினருக்கும், ஜனாதிபதி விக்டர் யெனுகோவேய்க்குக்கும் இடையே ஒருங்கிணைந்த ஓர் அரசை நிறுவுவதற்கும், நாடாளுமன்றத் தேர்தலை முன்கூட்டியே நடத்துவதற்கும் ஓர் இடைக்கால ஒப்பந்தம் ஏற்பட்டது. ஆனால், யாரும் எதிர்பாராத நிலையில், விக்டர் யெனுகோவேய்க் ஜனாதிபதி பதவியிலிருந்து விடுவிக்கப்படுவதாக நாடாளுமன்றம் பிரகடனப்படுத்தியது. அதற்கு முன்பே அவர் ரஷ்யாவின் உதவியை நாடி, அங்கு தப்பியோடினார். இதன் தொடர்ச்சியாக ரஷ்ய ஆதரவாளர்களுக்கும், ஐரோப்பிய ஆதரவாளர்களுக்குமிடையே பெரும் மோதல்கள், உக்ரைனின் கிழக்கு மற்றும் தெற்குப் பிராந்தியங்களில் தோன்றின. பூர்வீக ரஷ்யர்கள் பெருமளவில் வாழும் கிரீமியாவில் கீவுக்கு எதிராகவும் ரஷ்யாவுக்கு ஆதரவாகவும் போராட்டங்கள் வெடித்தன. ரஷ்ய ஆதரவாளர்கள் கிரீமியாவில் உள்ள அரசாங்கக் கட்டடங்களையும், விமான நிலையங்களையும் தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதாக உக்ரைன் முன்வைத்த குற்றச்சாட்டை ரஷ்யா மறுத்தது. மேலும், உக்ரைனில் அமைதியை ஏற்படுத்துவதற்காக இராணுவத்தை அனுப்பவும் மார்ச், 2014இல் ரஷ்ய அதிபர் புட்டின் உத்தரவிட்டார். கிரீமியாவில் சுதந்திரத்துக்கான வாக்கெடுப்பொன்றும் நடந்தது. பெரும்பான்மையினர் ரஷ்யாவுடன் இணைய வாக்களித்தனர். இதை எதிர்பார்த்துக் காத்திருந்த ரஷ்யாவும் கிரீமியாவை ரஷ்யாவின் ஒரு பகுதியாக அங்கீகரித்தது. அதைத் தொடர்ந்து, ரஷ்யாவின் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடையை விதித்தது. பனிப்போர் காலகட்டத்துக்குப் பிறகு ரஷ்யாவுக்கும், அமெரிக்காவுக்கும் இடையேயான உறவு கடுமையான பாதிப்புக்குள்ளாகியது. உக்ரைனுடனான ரஷ்யாவின் உறவும் தீர்க்க இயலாத சிக்கலுக்குத் தள்ளப்பட்டுவிட்டது.

மேற்கத்திய நாடுகளுக்கும், ரஷ்யாவுக்கும் இடையேயான அதிகாரப் போட்டியில், உக்ரைன் சிக்குண்டு தன்னுடைய நிலப்பரப்பை ரஷ்யாவிடம் இழந்தமை, சர்வதேச சட்டங்களுக்கு ஒரு சவாலாக அமைந்துவிட்டது. உக்ரைனின் எல்லையோரப் பிராந்தியமான டான்பாஸில் ரஷ்ய ஆதரவுப் படையினருக்கும், உக்ரைன் இராணுவத்துக்குமிடையே கடந்த 2021இலிருந்தே மோதல்கள் தொடங்கிவிட்டன. அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், ‘நோட்டோ’வுடன் உக்ரைன் சேர்வதற்கு ஊக்கமளித்தார். ஜோ பைடனுடனான காணொளிப் பேச்சுவார்த்தையின்போது, இந்த முயற்சிகள் தங்களது தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ளதாக புட்டின் தமது தரப்பு நியாயங்களை முன்வைத்தார். அதற்கு பைடனின் பதில், ரஷ்யாவின் மீது கடுமையான பொருளாதாரத்தடை விதிக்கப்படும் என்பதாகவே இருந்தது.

இதற்கிடையில், உக்ரைன் எல்லையில் படைக்குவிப்புக்கு புட்டின் உத்தரவிட்டார். ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட ரஷ்ய வீரர்கள் உக்ரைன் எல்லையை நோக்கி விரைந்தனர். கூடுதலாகத் தனது நேசநாடான பெலாரஸில் அணு ஆயுதப் போர்ப் பயிற்சியிலும் ரஷ்ய இராணுவம் ஈடுபட்டுவந்தது. உக்ரைன் மீது முப்படைகளின் மூலமும் முழுத் தாக்குதலுக்கு உத்தரவிட்டுள்ளார் புட்டின். தாக்குதல் தொடங்கிய முதல் நாளிலேயே செர்னோபில் அணுமின் உலை இயங்கிய பகுதியை ரஷ்யா கைப்பற்றிவிட்டது. இந்நடவடிக்கை உக்ரைன் அரசை அச்சத்தில் ஆழ்த்தியிருக்கிறது. இரண்டாம் உலகப்போருக்குப் பிறகு ஐரோப்பிய எல்லையில் இரு நாடுகள் மோதிக்கொள்வது இதுவே முதன்முறையாகும்.


• சி.ஆன்றணி விஜிலியஸ்

(மூத்த ஊடகவியலாளர் )


## இன்றைய நாளில்...

- 1565 – ரியோ டி ஜெனீரோ நகரம் அமைக்கப்பட்டது.
- 1873 – முதலாவது பயன்படத்தகுந்த தட்டச்சுப் பொறியை ரெமிங்டன் சகோதரர்கள் நியூயோர்க்கில் தயாரித்தனர்.
- 1893 – நிக்கோலா டெஸ்லா வானொலி பற்றிய தனது முதலாவது பொதுமக்களுக்கான அறிமுகத்தை அமெரிக்காவின் செயின்ட் லூயிஸ் நகரில் நடத்தினார்.
- 1896 – என்றி பெக்கெரல் கதிரியக்கத்தைக் கண்டுபிடித்தார்.
- 1899 – இலங்கையில் குற்றவியல் தண்டனைச் சட்டவிதித் தொகுப்பு நடைமுறைக்கு வந்தது.
- 1901 – இலங்கையில் நான்காவது மக்கள் தொகைக் கணக்கெடுப்பு இடம்பெற்றது.
- 1953 – சோவியத் தலைவர் ஜோசப் ஸ்டாலினுக்கு மாரடைப்பு ஏற்பட்டது. நான்கு நாட்களின் பின்னர் அவர் இறந்தார்.
- 1954 – அணுகுண்டு சோதனை: காசில் பிராவோ என்ற ஐதரசன் குண்டு பசிபிக் பெருங்கடலில் பிக்கினி திட்டில் வெடிக்க வைக்கப்பட்டதில் கதிரியக்க மாசு அமெரிக்காவில் ஏற்பட்டது.
- 1961 – உகாண்டா சுயாட்சி பெற்று முதற்தடவையாக தேர்தல்கள் இடம்பெற்றன.
- 1966 – சோவியத்தின் வெனேரா-3 விண்கலம் வெள்ளி கிரகத்தில் மோதியது. வேறொரு கிரகத்தில் இறங்கிய முதலாவது விண்கலம் இதுவாகும்.
- 1977 – சார்லி சாப்ளினின் உடல் சுவிட்சர்லாந்தில் அவரது கல்லறையிலிருந்து திருடப்பட்டது.
- 1980 – சனிக் கிரகத்திற்கு யானுஸ் என்ற சந்திரன் இருப்பதை வொயேஜர்-1 விண்கலம் உறுதிசெய்தது.
- 2003 – அனைத்துலகக் குற்றவியல் நீதிமன்றம் தனது முதலாவது அமர்வை நடத்தியது.



# எரிபொருள் நெருக்கடிகளுக்கு விரைவில் தீர்வு மீனவர்களிடம் அமைச்சர் டக்ளஸ் உத்தரவாதம்





நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் விலையேற்றங்கள் காரணமாக கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளக்கூடிய அசௌகரியங்களுக்கு விரைவில் தீர்வு காணப்படும் - என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

மேலும், அம்பாறை மாவட்ட கடற்றொழிலாளர்களின் வாழ்வில் சிறந்த மாற்றத்தினை ஏற்படுத்தக்கூடிய ஒலுவில் மீன்பிடித் துறைமுகத்தின் செயற்பாடுகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

தேசிய கடற்றொழிலாளர் மகா சம்மேளனத்தின் பொதுச் சபை கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நக்டா எனப்படும் தேசிய நீரியல்வள அபிவிருத்தி அதிகாரசபையின் கேட்போர் கூடத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற குறித்த பொதுச் சபைக் கூட்டத்தில் கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளும் தொழில்சார் பிரச்சினைகள் தொடர்பாக சமேளனத்தின் மாவட்ட பிரதிநிதிகளினால் எடுத்துரைக்கப்பட்டது.

குறிப்பாக கடற்றொழில் திணைக்களம் மற்றும் நக்டா ஆகியவற்றின் மாவட்ட காரியாலயங்களில் காணப்படுகின்ற உத்தியோகத்தர்கள் பற்றாக்குறை காரணமாக தமது தேவைகளை உரிய நேரத்தில் நிறைவேற்றிக்கொள்ள முடியாதிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

அதேபோன்று, எரிபொருள் நெருக்கடிகளினால் கடற்றொழிலாளர்கள் தொழில் அச்சுறுத்தல்கள் தொடர்பாகவும் தடைசெய்யப்பட்ட தொழில் முறைகளையும் தங்கூசி வலை போன்ற தடை செய்யப்பட்ட வலைகளையும் பயன்படுத்துவதால் ஏற்படுகின்ற பாதிப்புகள் தொடர்பாகவும் கடற்றொழிலாளர் பிரதிநிதிகளினால் தெளிவுபடுத்தப்பட்டது.

அம்பாறை மாவட்ட கடற்றொழிலாளர்களின் எதிர்பார்ப்பாக இருக்கின்ற ஒலுவில் மீன்பிடித் துறைமுகத்தின் செயற்பாடுகளை விரைவில் ஆரம்பிக்குமாறும் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த கடற்றொழில் அமைச்சர், நன்னீர் மற்றும் பருவகால நீர் நிலைகளை வாழ்வாதாரமாகக்கொண்ட மக்களின் வாழ்வியலை மேம்படுத்தும் நோக்கில் வரவு-செலவுத் திட்டத்தில் பெருமளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமையினால், குறித்த நீர்நிலைகளில் கடந்த காலங்களைவிட அதிகளவு மீன் மற்றும் இறால் குஞ்சுகளை இம்முறை வளர்ப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும் எனவும் அதனூடாக, தொடர்புபட்ட மக்கள் நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவித்தார்.

மேலும், நாட்டில் தற்காலிகமாக ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடிகளினால் கடற்றொழில் செயற்பாடுகள் பாதிப்படையக்கூடாது என்பதில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கவனமாக இருப்பதாகவும், இந்த நெருக்கடிகளில் கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு பரிகாரங்களை வழங்கும் வகையில் அமைச்சரவைப் பத்திரத்தினை சமர்ப்பித்து விரைவில் பரிகாரங்கள் வழங்கப்படும் எனவும் தெரிவித்தார்.

அத்துடன் பொதுச் சபைக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை சம்பந்தப்படடவர்கள் எழுத்துமூலம் சமர்ப்பிக்குமாறும் முன்னுரிமை அடிப்படையில் அவை தீர்க்கப்படும் எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

இந்நிலையில், அண்மைய நாட்களாக இந்தியக் கடற்றொழிலாளர்களின் எல்லை தாண்டிய சட்டவிரோதச் செயற்பாடுகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்த கடற்றொழிலாளர்களின் பிரதிநிதிகள், தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்ற ஜனாதிபதி, கடற்றொழில் அமைச்சர் மற்றும் கடற் படையினருக்கு நன்றி தெரிவிப்பதாகவும், குறித்த விவகாரம் நிரந்தரமாக தீர்க்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்தனர்.

அதேபோன்று, கடற்றொழில் அமைச்சரின் முயற்சியினால் வடக்கு மாகாணத்தில் பரந்தளவில் கடலட்டைப் பண்ணைகள் அமைக்கப்பட்டு வருவதை சுட்டிக்காட்டிய கடற்றொழிலாளர் பிரதிநிதிகள் சிறப்பான பொருளாதார நன்மைகளை பெற்றுக்கொடுக்க கூடிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சிக்கு நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்தனர்.

ஸ்ரீ லංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA


## 28.02.2022 நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 030 618 | 036 170 |
| கனேடியன் டொலர் | 043 1583 | 05 0017 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 20 0477 | 21 3131 |
| யூரோ | 110 4358 | 120 362 |
| ஜப்பான் யென் | 0 6 68 | 0 6607 |
| சிங்கப்பூர் டொலர் | 034 5341 | 04 2581 |
| ஸ்ரேலிங் பவுன் | 153 074 | 161 3126 |
| சுவிஸ் பிரான்ங் | 101 7032 | 11 2642 |
| ஐ.அ.டொலர் | 087 4 7 | 1 1 8881 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 422 1756 |
| குவைட் | குவைட் தினார் | 552 4218 |
| ஓமான் | ஓமான் றியால் | 411 1084 |
| கட்டார் | கட்டார் றியால் | 44 625 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 42 48 8 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 43 6274 |

# முதலை இறைச்சியை வைத்திருந்த நபர் வண்ணாத்திவில்லுவில் கைது

நீண்டநாள் வியாபாரம் தொடர்பில் தீவிர விசாரணை







(ஜுட் சமந்த)

முதலை இறைச்சியை காயவைத்து விற்பனைசெய்வதற்கு தயாராக வைத்திருந்த நபர் ஒருவரை கருவலகஸ்வெவ வனவளத் திணைக்கள அதிகாரிகளின் தகவலுக்கமைய பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

வண்ணாத்திவில்லு, விஜயபுர பகுதியிலேயே சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். இவரிடமிருந்து 09 கிலோ கிராம் முதலை இறைச்சி மீட்கப்பட்டுள்ளது. மேலும், முதலையின் தலை உட்பட வேறு பாகங்களும் மீட்கப்பட்டுள்ளன,

சந்தேக நபரால் கொலைசெய்யப்பட்டதாக நம்பப்படும் முதலை சுமார் 08 அடி நீளமானதென வனவளத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

விஜயபுர பகுதியிலுள்ள சிறிய குளத்தில் வசித்துவந்த முதலையின் தலையில் தாக்கி சந்தேக நபர் கொலைசெய்துள்ளார். அதன்பின்னர் அதனை விற்பனைக்கென தயார்செய்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

மேலும், இவ்வாறு முதலை இறைச்சி விற்பனை நீண்டகால செயற்பாடா எனவும் பொலிஸார் பல்வேறு கோணங்களில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# இலங்காதீஸ்வரர் கோயிலில் மகா சிவராத்திரி பூஜைகள்

(தலவாக்கலை செய்தியாளர்)

நுவரெலியா ஸ்ரீ இலங்காதீஸ்வரர் ஆலய காயத்திரி பீடத்தில் மகா சிவராத்திரி விழா இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிமுதல் நாளை புதன்கிழமை அதிகாலை 6 மணிவரை மிகவும் பக்திபூர்வமாக நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக ஆலய காயத்திரி பீடத்தின் நிர்வாக அறங்காவலர் ஸ்ரீ சக்திவேல் சந்திரமோகன் தெரிவித்துள்ளார்.

இன்றைய தினம் ஸ்ரீ இலங்காதீஸ்வரப் பெருமானுக்கு மகா மிருத்யுஞ் ஜெய தேவருக்கு நான்கு சாமங்களிலும் விசேட அபிஷேக அலங்காரப் பூஜைகள் நடைபெறும்.

மேலும் சமாதி மண்டபத்தில் குரு பூஜை, காயத்திரி பூஜை மாஹா மிருத்யுஞ் ஜெய ஓமம், பிரார்த்தனை, தியானம், பஜனை, சிவபஞ்சாட்சர பாராயணம் மற்றும் அருள் உபதேசம் என்பனவும் நடைபெறவுள்ளன. முதலாம் சாம பூஜைகளுக்கு பின் ( மாலை 6 மணி முதல்) பக்தர்களின் கரங்களினால் ஸ்ரீ இலங்காதீஸ்வரப் பெருமானுக்கும் 108 பாணலிங்கங்களுக்கும் பால், இளநீர் கொண்டு அபிஷேகம் செய்யவும், இரண்டாம் சாம பூஜைகளின் பின் ( 9.30 மணிமுதல் )விசேட மூலிகைகளைக் கொண்டு நடைபெறும் மஹா மிருத்யுஞ் ஜெய ஹோமத்தில் ஆகுதி கொடுக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

# நுவரெலியாவில் டீசலுக்கு பாரிய தட்டுப்பாடு நீண்ட வரிசையில் வாகன சாரதிகள் காத்திருப்பு







(செ.திவாகரன்)

நுவரெலியாவில் நேற்றுக் காலைமுதல் டீசல் எரிபொருளுக்குத் தட்டுப்பாடு நிலவியது. நானுஓயா எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெற்றோல் மாத்திரம் விநியோகம் செய்தமையும் குறிப்பிடத்தக்கது.

ஒவ்வொரு வாகன சாரதிகளும் எரிபொருள் நிரப்புவதற்காக முண்டியடித்துக்கொண்டு வாகனங்களைக் கொண்டுசெல்ல முற்பட்டதன் காரணமாக நுவரெலியா - பதுளை பிரதான வீதியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்னால் வாகன நெரிசலும் ஏற்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாகவும் நகரில் நிலவும் போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்தவும் நுவரெலியா - பதுளை பிரதான வீதியினை ஒருவழிப் பாதையாக மாற்றியுள்ளனர். வாகன சாரதிகளுக்கு மாற்று வீதிகளை பயன்படுத்துமாறும் நுவரெலியா போக்குவரத்து பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

அத்துடன், வாகன சாரதிகள் நீண்டதுரம் அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் மரக்கறி வகைகளை கொண்டுசெல்வதில் பெரிதும் சிரமங்களை எதிர்கொள்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# தி.மு.க. முதன்மைச் செய்தித் தொடர்பாளர் இராதாகிருஷ்ணனுடன் ஆனந்தகுமார் சந்திப்பு



ஐக்கிய தேசிய கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆனந்தகுமாருக்கும் தமிழக திராவிட முன்னேற்ற கழகத்தின் முதன்மைச் செய்தி தொடர்பாளர் கே.எஸ்.இராதாகிருஸ்ணனுக்கும் இடையில் நட்பு ரீதியிலான சந்திப்பொன்று நேற்றுமுன்தினம் (27) கொழும்பில் இடம்பெற்றது.

இலங்கை வாழ் இந்திய வம்சாவளித் தமிழ் மக்கள் குறித்து இதன்போது விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

இலங்கை எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இந்திய வம்சாவளித் தமிழ் மக்கள் சந்தித்துவரும் பிரச்சினைகள் தொடர்பில் எஸ்.ஆனந்தகுமார், தமிழக திராவிட முன்னேற்றக் கழகத்தின் முதன்மைச் செய்தி தொடர்பாளர் கே.எஸ்.இராதாகிருஸ்னுக்கு விளக்கமளித்துள்ளார்.

இந்த சந்திப்பில், எஸ்.ஆனந்தகுமாருடன், இலங்கை - இந்திய தொடர்பாளர் மனவை அசோகனும் கலந்துகொண்டிருந்தார்.

# ஆசிய அபிவிருத்தி வங்கியின் மூலம் இரத்தினபுரிக்கு 5 கெப் வாகனங்கள்



(இரத்தினபுரி செய்தியாளர்)

இரத்தினபுரி மாவட்டத்தில் சுகாதாரத்துறையை மேலும் ஊக்குவிப்பதற்கென ஆசிய அபிவிருத்தி வங்கியின் மூலம் 600 இலட்சம் ரூபா பெறுமதியாக 05 கெப் வாகனங்கள் இரத்தினபுரி மாவட்டத்திற்கு அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளன.

மேற்படி இரத்தினபுரி மாவட்டத்திற்கு அன்பளிப்பு செய்யப்பட்ட 5 கெப் வாகனங்களை காவத்தை, எலபாத்த, இம்புல்பே, எம்பிலிபிட்டிய, வெலிகபொல ஆகிய ஐந்து சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளுக்கு சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவவினால் அண்மையில் கையளிக்கப்பட்டன.

# தொழிலாளர் தேசிய சங்க மஸ்கெலியா கிளையில் மகளிர் தினம் பற்றிய கலந்துரையாடல்









(செ.தி .பெருமாள்)

மகளிர் தினம் தொடர்பாக மஸ்கெலியா பிரதேச தொழிலாளர் தேசிய சங்கத்தின் தோட்டத் தலைவர்கள், தலைவிமார் ஆகியோருக்கிடையிலான கலந்துரையாடல் கூட்டம் ஒன்று மஸ்கெலியா கிளைக் காரியாலத்தில் நேற்றுமுன்தினம் இடம் பெற்றது.

நிகழ்வில் மஸ்கெலியா பிரதேச சபையின் உறுப்பினர் ராஜ் அசோக் தொழிலாளர்கள் தேசிய சங்கத்தின் தேசிய அமைப்பாளர் கணபதி நகுலேஸ்வரன் மற்றும் சங்க நிர்வாகிகள். பெண்கள் கலந்துகொண்டு பெண்கள் தின விழாவை கொண்டாடுவது தொடர்பில் கருத்துகளைப் பகிர்ந்தனர்.

# ஆலமரக்கிளை வெட்டப்பட்டதால் உயிரிழந்த ஆசிரியரின் மரணத்துக்கு நீதிகோரி தலவாக்கலையில் போராட்டம்







**கோயிலை தோட்ட நிர்வாகத்திடம் ஒப்படைக்க வேண்டும் எனவும் கோரிக்கை**

தலவாக்கலை லோகி தோட்ட மக்கள் நுவரெலியா - ஹட்டன் பிரதான வீதியில் தலவாக்கலை லோகி வழிப்பிள்ளையார் கோயிலுக்கு அருகில் பாதுகாப்பற்ற முறையில் வெட்டப்பட்ட ஆலமரத்தின் கிளையால் உயிரிழந்த ஆசிரியருக்கு நீதி கோரி, பிரதேச மக்கள் தலவாக்கலை லோகி வழிப்பிள்ளையார் கோயில் வீதியோரமாக நேற்று (28) திங்கட்கிழமை காலை கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த போராட்டதில் 100இற்கும் அதிகமான மக்கள் கலந்துகொண்டனர்.

21ஆம் திகதி மாலை நுவரெலியா - ஹட்டன் பிரதான வீதியில் தலவாக்கலை லோகி தோட்ட வழிப்பிள்ளையார் கோயிலுக்கு அருகிலுள்ள 200 வருட பழைமை வாய்ந்த ஆல மரமொன்றின் கிளைகளை வெட்டிக்கொண்டிருந்தபோது, அதன் கிளையொன்று உடைந்து பிரதான வீதியில் சென்ற மோட்டார்சைக்கிள் மீது விழுந்ததில் ஆசிரியர் ஒருவர் உயிரிழந்தார்.

தலவாக்கலை லோகி தோட்டத்தைச் சேர்ந்தவரும் தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலய பாடசாலையின் பிரபல கணித ஆசிரியருமான வேலுசாமி மகேஸ்வரன் (வயது 39) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

இவ்வாறு உயிரிழந்த ஆசிரியருக்கு நீதி வேண்டியும் 200 வருடங்கள் பழைமையான ஆலமரத்தின் கிளைகளை வெட்டுவதற்கு அனுமதி வழங்கியது யார்? என கேள்வி எழுப்பியுமே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. குறித்த ஆலமரத்தை பாதுகாப்பற்ற முறையில் வெட்டியதன் காரணமாகவே இந்த உயிரிழப்பு இடம்பெற்றுள்ளது.

வேலுசாமி மகேஸ்வரன் என்பவர் தலவாக்கலை நகரில் மிகப் பிரசித்திபெற்ற ஒரு கணித ஆசிரியர். இவருக்கு 10 வயதில் ஒரு மகளும் 3 வயதில் மகனும் இருக்கின்றனர். அக்குடும்பம் ஒரு தலைவனை இழந்து வாடுகின்றது. அதுமட்டுமல்லாது தலவாக்கலை சமூகம் ஒரு சிறந்த கணித ஆசானை இழந்துள்ளது. எத்தனையோ மாணவர்களை கணித பாடத்தில் சித்தியடைய செய்த இந்த ஆசிரியருக்கு இணையாக இனி யாரும் உருவாகப்போவதில்லை. எனவே, இதற்கு உரிய நீதி வேண்டும். இந்த கோயிலை தோட்ட நிர்வாகத்திடம் ஒப்படைக்க வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எடுக்கவேண்டும் என போராட்டத்தில் கலந்துகொண்ட மக்கள் பதாகைகளையும் கோஷங்களையும் எழுப்பியவாறு இந்த கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேவேளை, வழிப்பிள்ளையார் கோயிலை தனி நபர் ஒருவர் நிர்வகித்து வருவதாகவும் இக்கோயில் லோகி கூம்மூட் தோட்டத்திற்கு சொந்தமான கோயிலாகும். இதனை ஒரு தனிநபர் வைத்துக்கொண்டு அதனை சுற்றியுள்ள நிலப்பரப்பை ஆக்கிரமிப்புசெய்து கொண்டிப்பதை நாங்கள் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. எனவே, இக்கோயிலை லோகி கூம்மூட் தோட்டத்திடம் ஒப்படைக்க வேண்டும் எனவும் போராட்டக்காரர்கள் கோரிக்கைவிடுத்தனர்.

ஆலமரத்தின் கிளைகள் வெட்டப்படுவதாக எவ்வித அறிவுத்தல்களையும் பிரதான வீதியில் பயணிக்கும் வாகனங்களுக்கோ வாகன சாரதிகளுக்கோ விடுக்கயில்லை. பாரிய மரம் ஒன்றை வெட்டுவதாக இருந்தால் அதற்கான சில ஒழுங்குவிதிகளை பின்பற்றி இருக்கவேண்டும். பெயர்ப்பலகைகள் வைக்கப்பட்டு சாரதிகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு இரு பக்கங்களிலும் வாகனத்தை நிறுத்தி சரியான முறையில் போக்குவரத்தை செய்வதற்கு ஊழியர்கள் மூலமாக வழிகாட்டல்கள் வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அப்படி எதுவும் அங்கு இடம்பெறயில்லை. எவ்வித பாதுகாப்பு நடைமுறையும் பின்பற்றாமல் ஒரு பிரதான வீதியில் பாரிய மரம் ஒன்று வெட்டப்பட்டுள்ளது. மரம் வெட்டப்பட்டு ஒருவர் உயிரிழந்த பின்னர் அப்பகுதி கிராமசேவகர், தலவாக்கலை மற்றும் லிந்துலை பொலிஸார், தலவாக்கலை - லிந்துலை நகரசபை, வீதி அபிவிருத்தி அதிகாரசபை மேலும் இதனுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எவருக்கும் இது தொடர்பாக எதுவும் தெரியாது என அனைவரும் இதிலிருந்து நழுவ பார்க்கின்றதாகவும் மக்கள் குற்றஞ்சுமத்தியுள்ளனர்.

## இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் வைரவிழா பதுளையில்


இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் 64ஆம் ஆண்டு வைரவிழாவும் சர்வதேச மகளிர் மாநாடும் எதிர்வரும் மார்ச் மாதம் 5ஆம் திகதி நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் மற்றும் சங்கத்தின் பொதுச் செயலாளர் தலைமையில் பதுளை நகரில் இடம்பெறவுள்ளது.

இம்மாநாட்டின் பிரதம அதிதியாக எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாச கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்துடன், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைப்பாளர்கள் உள்ளிட்ட பலர் இதில் கலந்துகொள்ளவுள்ளனர்.

விசேடமாக பெருந்தோட்டத் தொழிலாளர்கள் எதிர்நோக்குகின்ற தொழிற்சங்கப் பிரச்சினைகள், சம்பளப் பிரச்சினை, தொழில் சட்டங்கள் மீறப்படுகின்றமை, பெருந்தோட்டக் கம்பனிகளின் முறையற்ற நிர்வாகம் போன்ற விடயங்கள் தொடர்பிலான தீர்மானங்களும் இம்மாநாட்டில் நிறைவேற்றப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

## நானுஓயா - ரதெல்ல குறுக்கு வீதியில் லொறிகள் மோதி விபத்து; மூவர் காயம்


(க.கிஷாந்தன்)

நுவரெலியா - ஹட்டன் வீதியில் நானு ஓயா - ரதெல்ல குறுக்கு வீதியில் நேற்றுமுன்தினம் (27) மாலை இரு லொறிகள் நேருக்கு நேர் மோதியதில் மூவர் காயமடைந்துள்ளதாக நானுஓயா பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்களில் இருவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகவும் சிகிச்சைக்காக நுவரெலியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரியித்தனர்.

புகையிரதத் திணைக்களத்திற்கு சொந்தமான லொறியொன்று பட்டிப்பொலயிலிருந்து கொழும்பு நோக்கி சிலிப்பர் மரக்கட்டையை ஏற்றிச் சென்றபோது, செங்குத்தான ரதெல்ல குறுக்கு வீதியில் மற்றுமொரு லொறியை முந்திச் சென்றபோது சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த லொறி எதிரே வந்த லொறியுடன் மோதி வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது.

மற்றைய லொறியும் வீதியை விட்டு விலகி மரத்தில் மோதியதில் இரண்டு லொறிகளில் பயணித்த இருவர் மற்றும் புகையிரத திணைக்களத்திற்கு சொந்தமான லொறியின் சாரதி ஆகியோர் காயமடைந்துள்ளனர். இவ்விபத்து தொடர்பாக நானுஓயா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## பெருந்தோட்ட மக்களின் காணி பிரச்சினையை தீர்க்க பெரும்பான்மையினத்தவரின் ஆதரவை பெற தீர்மானம்

**ஆக்கப்பூர்வ நடவடிக்கைகளுக்கான முன்மொழிவு ஊவா திட்ட வரைபு ஒன்றியத்தினால் ஏகமனதாக ஏற்பு**

(எம். செல்வராஜா)

மலையகப் பெருந்தோட்ட மக்களின் காணி மற்றும் வீட்டுரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் அம்மக்கள் எதிர்நோக்கும் இன்னோரன்ன பிரச்சினைகளை நிவர்த்திசெய்வதற்கும் பெரும்பான்மை மக்களின் பூரண ஆதரவினையும், பங்களிப்பினையும் பெற்றுக்கொள்ள வேண்டும். அதற்கான ஆக்கப்பூர்வ செயற்பாடுகளை முன்னெடுப்பதென்ற முன்மொழிவு ஊவா மக்களின் திட்ட வரைபு ஒன்றியத்தினரால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பதுளை வெலிகம யிடுதியில் நேற்று (28) ஊவா மக்களின் திட்ட ஒன்றியத் தலைவர் ஏ.எம்.எம்.சுரங்க தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலேயே மேற்படி முடிவு ஏகமனதாக எடுக்கப்பட்டுள்ளது.

பெருந்தோட்ட மக்கள் எதிர்நோக்கும் இன்னோரன்ன பிரச்சினைகளை நிவர்த்திசெய்ய மேற்கொள்ளவேண்டிய போராட்டங்களில், கிராமிய மக்களையும் ஒன்றிணைத்து செயற்படவும் மேற்படி கூட்டத்தில் இணக்கம் காணப்பட்டன.

இக்கூட்டத்தின்போது, பெருந்தோட்ட மக்கள், கிராமிய மக்கள் ஆகியோரின் வாழ்வியல் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டன. மேலும் இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட கீழ்க்காணும் முன்மொழிவுகளும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன், அம் முன்மொழிவுகள் அனைத்தையும் செயற்படுத்துவதற்கு திகதிகளும் அறியிக்கப்பட்டன.

01. மலையகப் பெருந்தோட்ட இளைஞர், யுவதிகள் பலர் தோட்டங்களை விட்டு ஏனைய இடங்களில் வாடகை வீடுகளில் வாழ்ந்து வருகின்றனர். அரசின் வீடமைப்புத் திட்டங்களில், அந்த இளைஞர், யுவதிகளுக்கும் விகிதாசார அடிப்படையில் வீடுகள் வழங்கப்படல் வேண்டும்.

02. இன ரீதியாக குடி பரம்பல்களுக்கமைய நிர்வாக ரீதியான செயற்பாடுகளுக்கும், நிர்வாக உத்தியோகத்தர்கள் நியமிப்பதிலும், இனரீதியிலான முறைமை பின்பற்றப்படல் வேண்டும்.

03. இதுவரையில் நிர்மாணித்து நிறைவு செய்யப்பட்ட வீடுகளுக்கு வீட்டுரிமை வழங்கப்படல் வேண்டும்.

04. பதுளை மாவட்ட 12 பிரதேச செயலகப் பிரிவுகளை மூன்று வலயங்களாக வகுத்து, அவ்வப்பகுதி மக்களுக்கு தமிழ், சிங்கள மொழிகளில் தெளிவூட்டல், விழிப்புணர்வுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.



05. பிரதேச சபை உறுப்பினர்கள், மதத் தலைவர்கள், தோட்டத் தலைவர்கள், மாகாண அரசியல்வாதிகள் ஆகியோரிடம் மலையக மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளின் முக்கியத்துவங்களை தெளிவுபடுத்த வேண்டும்.

06. இணக்கச் சபை உறுப்பினர்களுக்கும் மலையக மக்களின் பிரச்சினைகளை தெளிவூட்ட வேண்டும்.

07. காணி மற்றும் வீட்டுரிமைகளைப்பெற நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் கூட்டமாக அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும்.

08. காணி மற்றும் வீட்டுரிமைகள், எதிர்நோக்கும் ஏனைய பிரச்சினைகள் ஆகியவற்றை தேசிய மட்டத்தில் பல்வேறு படிமுறைகள் ஊடாக கொண்டுசென்று வலியுறுத்த வேண்டும்.

## இராவண எல்ல நீர்வீழ்ச்சியிலிருந்து தவறி விழுந்த வெளிநாட்டவர் பலி




(எம்.செல்வராஜா)

இராவண எல்ல நீர்வீழ்ச்சியிலிருந்து கீழே விழுந்த வெளிநாட்டு உல்லாசப் பிரயாணி, சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். இச் சம்பவம் நேற்று (28) இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரியித்தனர்.

இச்சம்பவம் குறித்து, அப்பகுதி மக்கள் எல்ல பொலிஸாருக்கு அறியித்ததும் அவ்விடத்துக்கு விரைந்த பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளனர்.

ஜேர்மனி நாட்டைச்சேர்ந்த 32 வயது நிரம்பிய ஆண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து பண்டாரவளை நீதிவான் நீதிமன்ற நீதிபதி விசாரணைகளையடுத்து சடலம் வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப் பட்டுள்ளது.

இதனையடுத்து இச்சம்பவம் குறித்த ஆரம்ப விசாரணைகளை எல்ல பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

குறித்த சடலம் மரண பரிசோதனைக்காக பதுளை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.







கம்பளை பெற்றோல் நிலையத்தில் பெற்றோல் நிரப்புவதற்காக கம்பளை - கண்டி பிரதான வீதியிலிருந்து கடுகண்ணாவ வீதி வரை வாகனங்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தன. (படங்கள் : கம்பளை நிருபர்)



# மகா சிவராத்திரியின் மகிமை



சிவராத்திரி இரவில்தான் இந்தப் பிரபஞ்சமே லிங்க வடிவம் கொண்ட தோற்றமாய் உணரமுடியும். அந்தப் பிரபஞ்சப் பெருவெளிக்குள் நாமும் இருக்கிறோம் என்கிற நினைப்பே சிவனோடு கலந்திருக்கிறோம் என்கிற பேருணர்வை நமக்கு உண்டாக்கும்.

திரயோதசி, சதுர்த்தசி ஆகிய இரண்டு திதிகளுமே விசேடமானவை. திரயோதசி, அன்னை பார்வதியின் வடிவம். சதுர்த்தசி, சிவபெருமானின் வடிவம் என்கின்றன புராணங்கள். மகாபிரளய காலத்துக்குப் பின் சிவபெருமானுள் அன்னை உமாதேவி ஒடுங்கி நின்ற தினமே மகாசிவராத்திரி.

அன்னை, இந்தப் பிரபஞ்சத்தின் சக்தி. ஐயன், இந்தப் பிரபஞ்சப் பெருவெளி. இரண்டும் இணைந்து அருளிய தினம் என்பதே சிவராத்திரியின் பொருள். சிவமும் சக்தியும் இணைந்து அருளும் தினம் என்பதாலேயே, இந்த தினம் மிகவும் சிறப்பு வாய்ந்தது. அந்த நாளில் வழிபடுவதன்மூலம் வேண்டும் வரங்களைப் பெற முடியும். இதற்கு புராணங்களில் பல்வேறு நிகழ்வுகள் சான்றுகளாகக் கூறப்படுகின்றன.

வேதங்கள் இறைவனால் அருளப்பட்டவை என்றாலும், அவை இறை வடிவங்களே என்பது நம்பிக்கை. ஒவ்வொரு வேதத்துக்கும் ஒவ்வொரு தேவதை உண்டு. நான்கு வேதங்களில் நடுநாயகமாகத் திகழும் வேத பாகம், யஜுர்வேத ஸ்ரீ ருத்ரம். அந்த ஸ்ரீ ருத்ரத்திலும் மத்தியில் இருக்கும் சொல், சிவ என்பது. இந்த சிவ என்னும் வார்த்தையைச் சொல்ல, சகல வேதங்களையும் சொன்ன பலன் கிடைக்கும் என்பது ஐதிகம். எளிதில் அனைவராலும் சொல்ல முடிகிற மந்திரம், சிவ மந்திரம். அந்த சிவ மந்திரத்தைத் தவறாமல் உச்சரிக்கவேண்டிய தினம், சிவராத்திரி.

குரங்கு ஒன்று வில்வ மரத்தின் மீதமர்ந்து இரவு முழுவதும் இலைகளைப் பிய்த்து கீழே போட்டுக்கொண்டே இருந்தது. இலைகள் விழுந்த இடத்தில் இறைவனின் லிங்கத் திருமேனி. அன்றைய இரவு மகாசிவராத்திரி. விடியும் வேளையில் அறியாமல் செய்த வில்வார்ச்சனைக்கு இறைவன், குரங்கை மறுபிறவியில் சக்கரவர்த்தியாகப் பிறக்க அருள் செய்தார். சக்கரவர்த்தியாய் பிறந்தவரே முசுகுந்த சக்கரவர்த்தி.

தனக்கு வாய்த்த வரத்தை அறிந்ததும் முசுகுந்தர் வேண்டிக்கொண்டது என்ன தெரியுமா... அறியாமல் சிவபூஜை செய்த குரங்குக்கே இறைவன் இவ்வளவு பெரிய பதவியை அருள்வார் என்றால், அறிந்தே சிவபூஜை செய்தால் கிடைக்கும் பலன்கள் எவ்வளவு இருக்கும் என்று இந்த உலகம் அறிந்துகொள்ள, "சக்கரவர்த்தியாய் பிறந்தாலும் தன் குரங்குமுகம் மாறக்கூடாது" என்று வேண்டிக்கொண்டார்.

அதனால்தான், நன்மைகளை அறியாமல் செய்தால்கூட நன்மையே உண்டாகும் என்கின்றனர் பெரியோர்கள். சிவராத்திரி நாளை அறியாமல், உயிருக்குப் பயந்து மரத்திலேறிய வேடன், கீழே விழுந்துவிடக்கூடாது என்று இரவெல்லாம் விழித்திருந்து இலைகளைப் பறித்துப் போடுகிறான். அதுவே சிவார்ச்சனை ஆனது. அதன் பலனாக, அவன் மறுபிறவியில் ராமனையே தோழனாகக்கொள்ளும் குகப் பதவியை அடைந்தான்.

**ருத்ர பாராயணமும் சிவ புராணமும்**

சிவராத்திரி இரவில் ருத்ர ஜபம் செய்யவேண்டியது அவசியம். ருத்ர ஜபம் சிவனுக்குரிய பிரத்யேக ஜபம். சிவபெருமானின் கல்யாண குணங்களை விளக்கும் ஸ்லோகம். தினமும் வேத பாராயணம் செய்யும் கடமை உள்ளவர்கள், குறைந்தபட்சம் ருத்ர ஜபமாவது செய்ய வேண்டும் என்பது விதி. வேத பாராயணம் செய்யும் விதி இல்லாதவர்கள், சிவபுராணம் சொல்லலாம். நமசிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க என்று தொடங்கும் சிவபுராணம், வேதத்தின் சுருக்கமாகக் கூறப்படுகிறது.

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல் விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன், எம்பெருமான்
மெய்யே உன் பொன் அடிகள் கண்டு இன்று வீடு உற்றேன்

மற்ற நாட்களின் இரவில் உணவு, உறக்கம், இன்பம் என்று களிக்கும் மனித மனம், இந்த நாளில் சிவ சிந்தனையிலேயே செலவிடும். சிவபெருமானுக்கு நிகழும் அபிஷேகங்களைக் காணும்போது மனம் மகிழ்ச்சியில் துள்ளும். இந்த மகிழ்ச்சி, அடுத்த ஓராண்டு முழுவதும் மனமெல்லாம் நிறைந்திருக்கும். நாலு கால பூஜைகளிலும் கலந்துகொண்டு இறைவனை வணங்க வேண்டும். அப்போது, வேண்டும் வரம் கட்டாயம் கிடைக்கும் என்பது அடியவர்களின் வாக்கு.

கட்டாயம் செய்ய வேண்டியவை: சிவ தரிசனம் செய்ய வேண்டும். குறைந்த பட்சம் வில்வ இலைகளையாவது சிவபெருமானுக்கு சமர்ப்பிக்க வேண்டும். கண்விழித்து சிவ நாம ஜபம் செய்ய வேண்டும். தவறாமல் நான்கு காலமும் சிவபுராணம் படிக்க வேண்டும். இவை நான்கையும் செய்ய, வேண்டிய வரங்கள் கட்டாயம் கிடைக்கும் என்பது நம்பிக்கை. நான்கு கால பூஜைகளுக்குரிய அபிஷேக திரவியங்களைக் கொஞ்சமேனும் வழங்கினால் வறுமை அகலும். வஸ்திரம் வழங்கினால், கேட்கும் வரம் கிடைக்கும். தூப தீப கைங்கரியத்துக்கு உதவினால், சகல விதமான செல்வங்களும் சேரும் என்பது நம்பிக்கை.

## தனது புத்தம் புதிய ஆடை விற்பனை நிலையத்தை ஜோசப் பிரேசர் ஞாபகார்த்த மருத்துவமனையில் திறந்துள்ள வெலோனா








இலங்கையில் பின்னப்பட்ட மற்றும் நெய்யப்பட்ட ஆடைகளின் முன்னோடியான வெலோனா, கொழும்பு 05, ஜோசப் பிரேசர் ஞாபகார்த்த வைத்தியசாலையில் அதன் நவீன ஆடையகத்தை அண்மையில் திறந்துவைத்துள்ளது. நாட்டில் கொவிட் தொற்றுநோய் தொடர்பில் விதிக்கப்பட்டுள்ள அனைத்து சுகாதார மற்றும் பாதுகாப்பு வழிகாட்டல்களுக்கு உட்பட்டு, குறிப்பிட்ட சில விருந்தினர்களுடன் ஒரு எளிய விழாவாக இத்திறப்பு விழா இடம்பெற்றது. Threadworks PVT LTD நிறுவனத் தலைவரும் பிரதான நிறைவேற்று அதிகாரி யுமான கலாநிதி ஜெஹான் டி சொய்ஷா மற்றும் Threadworks PVT LTD நிறுவனத்தின் ஒருசில அதிகாரிகளும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். அத்துடன், ஜோசப் பிரேசர் ஞாபகார்த்த மருத்துவமனை மற்றும் Melsta Health ஆகியவற்றின் சிரேஷ்ட உறுப்பினர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இந்த பிரம்மாண்ட திறப்பு விழா தொடர்பில் Threadworks PVT LTD நிறுவனத் தலைவரும் அதன் பிரதான நிறைவேற்று அதிகாரியுமான கலாநிதி ஜெஹான் டி சொய்ஷா கருத்துத் தெரிவிக்கையில், "பெற்றோர்கள் மற்றும் குழந்தைகளுக்கு நாம் எப்போதும் வசதியையும், சௌகரியத்தையும் வழங்க முயற்சிக்கிறோம். ஜோசப் பிரேசர் ஞாபகார்த்த வைத்தியசாலையானது, ஒரு பிரத்தியேக மகப்பேற்று மருத்துவமனை என்பதுடன், இது பாதுகாப்பான பிரசவத்தை எளிதாக்குகிறது. எனவே, இது எமது புதிய விற்பனை நிலையத்திற்கு சிறந்த இடமாக இருக்குமென நாம் நம்புகிறோம். குறிப்பாக, COVID-19 தொற்று தொடர்பான ஆபத்து தொடர்ந்தும் இருக்கும் நிலையில், எமது வாடிக்கையாளர்களுக்கான அணுகல் மற்றும் வசதியை மேம்படுத்துவதே இவ்விற்பனை நிலையத்தைத் திறப்பதன் முக்கிய நோக்கமாகும். பெற்றோர்கள் பாதுகாப்பான கொள்வனவை விரும்புகின்றனர். எனவே, இவ்விற்பனை நிலையம் மூலம் எமது மதிப்புமிக்க வாடிக்கையாளர்களுக்கு எமது விரிவான தயாரிப்பு வகைகளை பாதுகாப்பாகவும் வசதியான முறையிலும் வழங்க முடியுமென நாம் நம்புகிறோம்" - என்றார்

இந்த புதிய விற்பனை நிலையம் Velona Clothing எனும் வர்த்தக நாமத்தின் கீழ் திறக்கப்படுகின்ற மூன்றாவது விற்பனை நிலையமாகும். Liberty Plaza (கொழும்பு) மற்றும் மொரட்டுவை ஆகிய இடங்களில் ஏனைய இரண்டு விற்பனை நிலையங்களும் அமைந்துள்ளன. பிறந்த குழந்தைகள் முதல் 3 வயது வரையிலான குழந்தைக்குகளுக்கு அவசியமான அனைத்தையும் இவ்விற்பனை நிலையம் வழங்குகிறது. மிக முக்கியமாக, பெற்றோராகவுள்ளவர்களுக்கு மருத்துவமனையினால் பட்டியலிடப்படும் பொருட்களை இங்கு கொள்வனவு செய்யலாம். குழந்தைகளுக்கான கம்பளி, புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்கான ஆடைகள், நப்கின்கள், குழந்தைகளுக்கான விளையாட்டுப் பொருட்கள், கழிவகற்றல் தொடர்பான பொருட்கள் மற்றும் Velona Cuddlesயினது அனைத்து டயபர் தயாரிப்புகளும் இங்கு கிடைக்கின்றன.

பிரத்தியேக உற்பத்தி வகைகளுடன் பெறும தியான கொள்வனவு அனுபவத்தை வழங்கும் Velona Clothing, எதிர்காலத்தில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் தனது ஆடையகங்களை விரிவுபடுத்த திட்டமிட்டுள்ளது.

7 தசாப்தங்களுக்கு மேலான வரலாற்றைக் கொண்ட வெலோனாவின் நப்கின்கள், துவாய் கள், உள்ளாடைகள், குழந்தைகள் ரி-சேட்டுகள் உள்ளிட்ட அனைத்து துணிகளும் குழந்தைகள் மற்றும் சிறுவர்களுக்கு வசதியையும், சுகாதாரத்தையும் உறுதிசெய்யும் சேதன பருத்தியால் தயாரிக்கப்படுகின்றன.

Velona Clothing ஆடையகத்தை, அதன் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.buyvelona.com மூலமாகவும் Facebook மற்றும் Instagram உள்ளிட்ட அதன் சமூக வலைத்தளங்கள் மூலமாகவும் ஒன்லைனில் அணுகலாம்.


திகதி 27.02.2022 ஞாயிற்றுக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4691
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 10,099,720.00
ஆங்கில எழுத்து: Z
வெற்றி இலக்கங்கள்: 8 9 4 3 7 5
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 49,174,869.00

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் : 2986
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 72,783,638.40
ஆங்கில எழுத்து: P
வெற்றி இலக்கங்கள்: 05 21 28 58
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 60,000,000.00

Mega POWER மெகா பவர் கோடி 23+
சீட்டிழுப்பு இலக்கம் 1039
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,961,260.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 238,415,866.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து: E
சுப்பர் இலக்கம்: 07
வெற்றி இலக்கங்கள்: 31 37 47 73

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 721
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,476,120.00
ஆங்கில எழுத்து: L
வெற்றி இலக்கங்கள்: 21 42 60 68
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 99,473,475.20

NLB ஹந்தஹன ராசி சுப பலன்
சீட்டிழுப்பு இலக்கம் : 0032
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,449,320.00
இலக்கினம்: கடகம்
வெற்றி இலக்கங்கள்: 31 50 56 59
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,621,548.60

ஜாதிக சம்பத JATHIKA SAMPATHA
சீட்டிழுப்பு இலக்கம் : 1217
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,881,280.00
வெற்றி இலக்கினம்: கன்னி
வெற்றி இலக்கங்கள்: 6 0 3 8 3 9
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,245,593.20

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416

# பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிராக வவுனியாவில் கையெழுத்துப் போராட்டம்



(வவுனியா நிருபர்)

பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிராக வவுனியாவில் கையெழுத்துப் போராட்டம் இடம்பெற்றது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில் வவுனியா பழைய பஸ் நிலையம் முன்பாக நேற்று (28) குறித்த கையெழுத்துப் போராட்டம் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து வவுனியாவின் இலுப்பையடி, வைரவபுளியங்குளம், குருமன்காடு, கனகராயன்குளம், செட்டிகுளம் ஆகிய பகுதிகளிலும் கையெழுத்துப் பெறும் நடவடிக்கைகள் இடம்பெற்றன. தமிழ், முஸ்லிம் மக்கள் பலரும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கக் கோரி இந்த கையெழுத்துப் போராட்டத்தில் பங்குபற்றினர்.

வவுனியாவில் இடம்பெற்ற ஆரம்ப நிகழ்வில் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சிவஞானம் சிறிதரன், தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளரும், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினருமான ப.சத்தியலிங்கம், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன், தமிழரசுக் கட்சியின் வாலிபன் முன்னணித் தலைவர் கி.சேயோன் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

# பூநகரி விபத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் உயிரிழப்பு; மற்றுமொருவர் படுகாயம்!

(யாழ் நிருபர்)



பூநகரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்த நிலையில், மற்றுமொரு பொலிஸ் உத்தியோகத்தர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

திருகோணமலை காந்திபுரத்தை சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிளான கணேசரட்ணம் ஹரிகரன் (வயது 24) என்பவரே உயிரிழந்துள்ளார். அவருடன் பயணித்த மற்றுமொரு பொலிஸ் உத்தியோகத்தர் படுகாயமடைந்துள்ளார்.

மன்னாரில் பணிபுரியும் இரு பொலிஸ் உத்தியோகத்தர்களும் பணி நிமித்தம் யாழ்ப்பாணம் வந்துவிட்டு மன்னார் நோக்கி திரும்பும்வேளையில், பூநகரி - சங்குப்பிட்டி பாலம் கடந்து சற்றுத் தொலைவில் இராணுவ சோதனைச்சாவடிக்கு அருகில் அவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியோரக் கட்டமைப்புடன் மோதி விபத்துக்குள்ளானது.

அதில் இருவரும் கடலுக்குள் தூக்கி வீசப்பட்ட நிலையில், ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். மற்றவரை வீதியில் சென்றவர்கள் மீட்டு வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் பூநகரி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கான பயிற்சியின் இறுதி நிகழ்வு



(யாழ் நிருபர்)

யாழ். மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் பெண் உறுப்பினர்களுக்கான தேவைகளைக் கண்டறிதல் மற்றும் வளங்களை அடையாளப்படுத்தல் பற்றிய தொடர் பயிற்சியின் இறுதி நிகழ்வு நேற்று இடம்பெற்றது. யாழில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் காலை 9.30 மணியளவில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஒன்பது பிரதேச சபை மற்றும் நகரசபைகளைச் சேர்ந்த பெண் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். பிரதேச சபை மற்றும் நகர சபைத் தவிசாளர்கள் முன்னிலையில் நடைபெற்ற இந்நிகழ்வு "கற்றல் மற்றும் தலைமைத்துவத்தில் பெண்கள்" எனும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் உள்ளூராட்சிப் பெண்களின் இயலுமையை விருத்திசெய்யும் நோக்கத்துடன் முன்னெடுக்கப்பட்டது. உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனம், சேர்ச் போர் கொமன்ட் கிரவுன்ட் நிறுவனம், மகளிர் அபிவிருத்தி நிலையம் ஆகியன இணைந்து இந்நிகழ்வை ஒழுங்கு செய்திருந்தன.



'அல்வாய் மனோகராக் கவிஞர்கள்' கவிதை நூல், பேராசிரியர் மா.கருணாநிதி எழுதிய 'நினைவழியா ஆளுமை', அல்வாய் மார்க்கண்டுவின் சிறுநூல் ஆகியவற்றின் வெளியீட்டுவிழா மற்றும் 'நாங்கள்' பத்திரிகையில் பதிவுசெய்யப்பட்ட வாழும் ஆளுமைகள் கௌரவிப்பு விழா ஆகியன அல்வாய் வரசித்தி விநாயகர் உடனுறை காத்தவராயர் தேவஸ்தானத்தில் கடந்த வாரம் இடம்பெற்றன. இந்நிகழ்வில் ஜீவநதி ஆசிரியர் க.பரணீதரன் தலைமையுரை ஆற்றுவதையும், அந்நூல்களின் வெளியீட்டையும், கௌரவிக்கப்பட்டவர்களையும் படங்களில் காணலாம்.

# கச்சதீவு அந்தோனியார் ஆலய வருடாந்த மகோற்சவ முன்னேற்பாட்டுக் கூட்டம் யாழ். செயலகத்தில்



(யாழ் நிருபர்)

கச்சதீவு அந்தோனியார் ஆலய வருடாந்த மகோற்சவ முன்னேற்பாட்டுக் கூட்டம் யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

வரலாற்றுப் பிரசித்திபெற்ற கச்சதீவு அந்தோனியார் ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் மார்ச் 11ஆம், 12ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ள நிலையில், தற்போதுள்ள கொரோனா இடர்நிலை காரணமாக இலங்கை மற்றும் இந்தியாவிலிருந்து 100 பேரை மாத்திரமே கச்சதீவு அந்தோனியார் ஆலய உற்சவத்திற்கு அனுமதிப்பதென வெளிவிவகார அமைச்சு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ள நிலையில், நேற்று யாழ். மாவட்ட செயலகத்தில் கச்சதீவு அந்தோனியார் ஆலய உற்சவம் தொடர்பில் விசேட கலந்துரையாடல் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் இடம்பெற்றது.

எதிர்வரும் 11ஆம், 12ஆம் திகதிகளில் கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்தில் உற்சவம் இடம்பெறவுள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

அத்துடன், குறித்த உற்சவத்தில் கலந்துகொள்பவர்கள் கொரோனா தடுப்பூசி அட்டைகள் வைத்திருக்கவேண்டியது அவசியம் எனவும், மட்டுப்படுத்தப்பட்ட பக்தர்கள் மாத்திரம் கலந்துகொள்ளும் நிலையில், ஆலய வளாகத்தினுள் எவ்விதமான வர்த்தக நடவடிக்கைகளிலும் ஈடுபட முடியாது எனவும் தீர்மானம் முன்னெடுக்கப்பட்டது.

மேலும், சுகாதார நடைமுறைகள், சமூக இடைவெளிகள் என்பன பின்பற்றப்படும் எனவும் தெரிவித்தார்.

குறித்த கலந்துரையாடலில் கடற்படையின் உயரதிகாரிகள், நெடுந்தீவு பிரதேச செயலர், ஊர்காவற்றுறை பிரதேச சபை, செயலர் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் பணியாளர்கள், இந்தியத் துணை உயர்ஸ்தானிகர் ராம் மகேஷ், யாழ்ப்பாண மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபன், யாழ்ப்பாண மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், யாழ்ப்பாணம் மறைமாவட்ட குருமுதல்வர் ஜோசப் ஜெபரட்ணம் அடிகளார், உதவி மாவட்ட செயலாளர் உள்ளிட்டோர் கலந்துகொண்டிருந்தனர்.

# தெரு விளக்குகளை 80 சதவீதத்தால் குறைக்கவேண்டிய நிலை ஏற்படலாம்

## பிரதேச சபை தவிசாளர் சுட்டிக்காட்டு



(சாவகச்சேரி நிருபர்)

நாட்டில் மின்சார உற்பத்தி பாதிக்கப்பட்டு மின்வெட்டு நடைமுறைக்கு வந்திருப்பதால் தெரு விளக்குகளை 80 சதவீதத்தால் குறைக்கவேண்டிய நிலை ஏற்படக்கூடும் என சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் சாவகச்சேரி பிரதேச சபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வில் தலைமையுரை ஆற்றும்போதே அவர் இதனை சுட்டிக் காட்டியிருந்தார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

பிரதேச சபைக்கு மக்களாலும், சபை உறுப்பினர்களாலும் வீதி விளக்குகள் தொடர்பாக நாளாந்தம் பல கோரிக்கைகள் வருகின்றன. தற்போது நாடளாவிய ரீதியாக மின்வெட்டு நடைமுறைக்கு வந்துள்ளது. அலுவலகங்களில் குளிரூட்டி பாவிப்பதால் மின்னாக்கியை (ஜெனரேட்டர்) பாவிக்கும் நிலைமையை ஏற்படுத்துவது தொடர்பாக மின்சாரத்திற்கு பொறுப்பான அமைச்சு தீர்மானமொன்றை எடுத்துள்ளது.

அத்துடன், வீதி விளக்குகளையும் 80 சதவீதத்தால் குறைத்து 20 சதவீதமான தெருவிளக்குகளை மாத்திரம் பிரதான சந்திகள் மற்றும் வைத்தியசாலைகள் உள்ளிட்ட இடங்களில் ஒளிரச் செய்யத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இருப்பினும் இது தொடர்பான சுற்றுநிருபங்கள் இதுவரை கிடைக்கப்பெறவில்லை.

எமது சபை உறுப்பினர்கள் 2022ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட நிதியை வீதி விளக்குகளுக்காக ஒதுக்கியுள்ளனர். மின்வெட்டு நிலைமை தொடர்ந்தால் சபை உறுப்பினர்கள் வரவு-செலவுத்திட்ட முன்மொழிவுகளை மீள்பரிசீலனை செய்வது பொருத்தமானதாக இருக்கும். இயன்றவரை இந்த நெருக்கடியான காலகட்டத்தில் புதிய தெரு விளக்குகள் பொருத்துவதைத் தவிர்ப்போம் என்றார்.

# "மூதன்னையின் பாடல்" நூல் வெளியீடு



(வவுனியா நிருபர்)

சி.கிருஷ்ணபிரியனின் "மூதன்னையின் பாடல்" கவிதை நூல் வெளியீட்டு விழா நிகழ்வு வவுனியா பூந்தோட்டத்தில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவை அரங்கில் நேற்று இடம்பெற்றது.

வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரியின் ஓய்வுநிலை உபபீடாதிபதி ந.பார்த்தீபன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வரவேற்புரையை முகத்தான்குளம் விக்கினேஸ்வரா வித்தியாலய அதிபர் கி.செல்வராஜா நிகழ்த்த, நூலுக்கான விமர்சன உரையை ஆசிரிய ஆலோசகர் கவிஎழில் த.நிறைமதி நிகழ்த்தினார். கருத்துரையை நிரூஜா கார்த்தீபனும், நன்றியுரையை தேசிய கலை இலக்கியப் பேரவையின் சு.டொன்பொஸ்கோவும் நிகழ்த்தினர்.

இந்நிகழ்வில் நூலின் பிரதிகள் விருந்தினர்களுக்கு வழங்கப்பட்டதுடன், கவிதை வாசிப்பும் இடம்பெற்றது.

# யாழ். சிவகுரு ஆதீனத்தில் இன்று சிவராத்திரி தின நிகழ்வுகள்

(யாழ் நிருபர்)

சிவகுரு ஆதீனமும், இலங்கை முதலுதவிச்சங்க இந்துசமயத் தொண்டர் சபையும் இணைந்து நடத்தும் சிவராத்திரி நிகழ்வு இன்று யாழ்ப் பாணத்தில் இடம்பெறவுள்ளது.

சிவகுரு ஆதீனம், இல 692, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்ற முகவரியில் இன்று மாலை 6 மணிக்கு ஆரம்பமாகும் குறித்த நிகழ்வு மறுநாள் காலை 6 மணிக்கு நிறைவடையும்.

இதன்போது சிவலிங்கப் பெருமானுக்கு அடியார்கள் தங்கள் கைகளினால் அபிஷேகம் செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் சிவலிங்கப்பெருமானுக்கு நான்கு காலப் பூஜைகள், பஜனை, கலை நிகழ்வுகள், ஆன்மீக அருளுரை போன்ற நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. இந்த நிலையில் அடியார்கள் அனைவரும் இச்சிவராத்திரி நிகழ்வில் பங்குபற்றி எல்லாம் வல்ல சிவ பரம்பொருளின் அருளினைப் பெறுமாறு அன்புடன் வேண்டி நிற்கின்றோம் என ஏற்பாட்டுக் குழு தெரிவித்துள்ளது.

# கிளிநொச்சியில் சடலமொன்று மீட்பு

(கிளிநொச்சி நிருபர்)




கிளிநொச்சி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கரடிபோக்கு பகுதியில் இனந்தெரியாத ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

கரடிப்போக்கு சந்தியிலிருந்து சுமார் 5 மீற்றர் தொலைவிலுள்ள கால்வாயில் குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இனந்தெரியாத இந்த நபர் விபத்து ஒன்றினால் உயிரிழந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகப்படுகின்றனர். அதற்கான தடயங்கள் வீதியில் காணப்படுகின்றன.

மேலும், இது ஆணொருவரின் சடலமாக காணப்படுகிறது. மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பதுளையில் பெருந்தோட்டக் காணிகளை அபகரிக்க வெளியார் தீவிர முயற்சி



- •102 தொழிலாளர் குடும்பங்கள் பாதிப்பு
- •நீட்வூட் பாடசாலையையும் அகற்றுமாறு எச்சரிக்கை

(எம். செல்வராஜா)

பதுளை மாவட்டத்தில் பசறை, தெமோதரை, ஹப்புத்தளை ஆகிய மூன்று இடங்களில் பெருந்தோட்டக் காணிகளை அபகரிக்கும் செயற்பாடுகள், துரிதமாக இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. இச்செயற்பாடுகளினால் சுமார் 102 தோட்டத் தொழிலாளர் குடும்பங்கள் செய்வதறியாத நிலையினை எதிர்நோக்கியுள்ளனர். மேலும், ஹப்புத்தளை நீட்வூட் தோட்ட அரச பாடசாலையையும் அகற்ற கோரப்பட்டுள்ளது. அகற்ற மறுப்பின் பாடசாலை அமைந்துள்ள காணிக்கு பணம் செலுத்தவேண்டுமென்றும் அறியிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் குறித்து, பெருந்தோட்ட மக்கள், ஊவா மக்கள் ஒன்றியம் ஊடாக பெருந்தோட்ட மக்களின் காணி உரிமை அமைப்பிடம் நேற்றுமுன்தினம் புகார் செய்துள்ளனர்.

**பசறை – கோணக்கலை பெருந்தோட்டம்**

கோணக்கலை பெருந்தோட்டப் பசறை பிரியில் இரு தொழிலாளர் குடும்பங்கள் குடியிருக்கும் தனிவீடுகளிலிருந்து, அவர்களை வெளியேறுமாறு, பசறை பிரதேச செயலகம் ஊடாக உத்தரவிடப்பட்டிருக்கின்றது. அதற்கான அறிவுறுத்தல் பதாகைகளும் குறிப்பிட்ட வீட்டுச் சுவர்களில் ஒட்டப்பட்டுள்ளன. அரசின் ஒரு இலட்சம் வேலைத்திட்டத்திற்கமைய சேவா பியச என்ற சேவை நிலையம் அப்பகுதியில் அமையயிருப்பதனால், குறிப்பிட்ட இரு வீடுகளிலிருந்தும் தொழிலாளர்களை அகற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பிட்ட இரு வீடுகளும் பெருந்தோட்ட கூட்டுறவு வீடமைப்புத் திட்டத்தின் மூலம் நிர்மாணிக்கப்பட்டதாகும். இவ்வீடுகளிலுள்ள தொழிலாளர்களை வெளியேற்றும் பட்சத்தில், அவர்களுக்கு குடியிருப்பதற்கு வேறு வீடுகளோ, லயக் குடியிருப்புகளோ இல்லாதுள்ளன. இவ்விரு குடும்பங்களிலும் 10 குடும்ப உறுப்பினர்கள் இருந்து வருகின்றனர்.

**பசறை – கோணக்கலை பெருந்தோட்டக் கீழ்ப்பிரிவு**

பசறை – கோணக்கலை பெருந்தோட்ட கீழ்ப்பிரியிலுள்ள 3ஆம் இலக்கக் காணியை அதே தோட்டத்தைச் சேர்ந்த ஐவர் கையகப்படுத்தியுள்ளனர்.

இது குறித்து தோட்ட நிர்வாகம், பசறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளது. இம் முறைப்பாட்டை விசாரணைசெய்த பசறை பொலிஸாரிடம் தாம் ஏற்கனவே இருந்த இடம் மண்சரிவு அபாயம் எதிர்நோக்கப்பட்டதினால், செய்வதறியாத நிலையில் குறிப்பிட்ட இடத்தை கையகப்படுத்தியிருக்கின்றோமென்று 3ஆம் இலக்கம் காணியை கையகப்படுத்திய ஐந்து பேரும் பொலிஸாரிடம் தெரியித்தனர். பொலிஸார் இதனை ஏற்றுக்கொண்டு, பசறை பிரதேச செயலாளருக்கு பசறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்ட ஐவரும் குடியேறுவதற்கு இடமொன்றினை உடன் ஒதுக்கிக் கொடுக்கும்படியும் கேட்டுள்ளார்.

**தெமோதரை மீறியகல பெருந்தோட்டப் பிரிவு**

தெமோதரை குதியில் மீறியகலை பெருந்தோட்டப் பிரிவில் இரு லயக் குடியிருப்புக்களை அகற்றி, அவ்வழியாக பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த ஒரு குடும்பத்திற்கு பாதையமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எல்ல பிரதேச செயலாளரே மேற்படி செயற்பாட்டினை மேற்கொண்டுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

**ஹப்புத்தளை நீட்வூட் தோட்டம்**

ஹப்புத்தளை பகுதியின் நீட்வூட் பெருந்தோட்டம் சொய்சா என்பவருக்குரிய தனியார் தோட்டமாகும். 1972இல் பெருந்தோட்டப் பாடசாலைகளை அரசு கையேற்கும் திட்டத்தில், இப்பாடசாலையும் உள்ளடங்கியுள்ளது. அரசு பொறுப்பேற்ற இப்பாடசாலைக்கு 60×20, 20×20, 47×57 ஆகிய அளவுகளைக்கொண்ட மூன்று கட்டிடங்களும் அமைந்துள்ளன. ஆண்டு 1 முதல் ஆண்டு 5 வரையில் வகுப்புகள், இப்பாடசாலையில் உள்ளன. முக்கால் ஏக்கர் காணியில் இப்பாடசாலைக் கட்டடங்கள், விளையாட்டு மைதானம் ஆகியனவும் அமைந்துள்ளன. குறிப்பிட்ட பாடசாலை அகற்றப்படல் வேண்டும். அல்லது அக்காணிக்கு பெறுமதியை வழங்கவேண்டுமென்றும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பாடசாலைக்கு ஏற்பட்டிருக்கும் நிலை குறித்து, ஊவா மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு, பாடசாலை அதிபர் எஸ். ஜெகன் அறிவித்துள்ளார். மேலும் இத்தோட்டத்தில் வாழ்ந்துவரும் 75 குடும்பங்களுக்குமான எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது.

# எங்களை நாங்களே ஆளக்கூடிய பொறிமுறையுடன் வடக்கு, கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு வேண்டும்

## சுமந்திரன் எம்.பி. துறைநீலாவணையில் தெரிவிப்பு

(துறைநீலாவணை நிருபர்)

தாய் நாட்டினை இரண்டாகப் பிரிக்காது ஒரே நாட்டினுள் சுயநிர்ணய உரிமையோடு எங்களை நாங்களே ஆளக்கூடிய பொறிமுறையுடன் கூடிய அதிகாரப்பகிர்வு மூலமாக வடக்கு, கிழக்கு பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் - என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

துறைநீலாவணையில் ஞாயிற்றுக்கிழமை மாலை இலங்கை தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணியினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மக்கள் சந்திப்பின்போது கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழரசுக் கட்சி தமிழ் மக்களின் உரிமைக்காக போராடுகின்ற கட்சி மட்டுமல்லாது தமிழ் மக்கள் உரிமைகள் மறுக்கப்படுகின்றபோது தட்டிக்கேட்டு உரிமையினை நிலைநாட்டப் போராடுகின்ற கட்சி. இது தமிழ் மக்களின் குருதியில் உறைந்த விடயம். வீரசாகசங்கள் வீரச்செயற்பாடுகள் எங்களுடைய நிலத்தினை பாதுகாப்பதற்கான முயற்சியாகும்.

தமிழ் மக்களின் நில அபகரிப்பானது வடக்கு, கிழக்கில் குறிப்பாக கிழக்கு மாகாணம் மற்றும் முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் மிக மோசமான முறையில் நடைபெற்று வருகின்றது. இதனை தடுத்துநிறுத்துவதற்கு பல முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றோம்.



அதன் ஓர் அங்கமாக அண்மையில் ஜனாதிபதி செயலகத்திற்கு முன்னாள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் பிரதிநிதிகள் ஒன்றுகூடி ஆர்ப்பாட்டத்தினை முன்னெடுத்தோம்.

அதில் நாங்கள் கூறிய யிடயம் தமிழ் மக்களின் நிலங்களை அபகரிப்பினை நிறுத்த வேண்டும்.

வெவ்வேறு சட்டப்போர்வையில் நில அபகரிப்பினை மேற்கொள்ள வேண்டாம் என்ற கோரிக்கையினை முன்வைத்திருந்தோம்.

நாட்டின் தலைவர் கூறிய பதில் உங்களது 70 வருடகால முயற்சியினை 70 நாட்களில் மாற்றுவேன் என்ற கருத்தினை அடிப்படையாகக் கொண்டு மிகப் பொருத்தமான ஆளுநரையும் கிழக்கு மாகாண நில அபகரிப்புக்கு நியமித்திருக்கின்றார்.

ஜனாதிபதி.மேய்ச்சல்தரை, வனப் பாதுகாப்பு, கரையோரப் பாதுகாப்பு, மகாவலி எனும் போர்வையில் நில அபகரிப்பானது தொடர்ந்துகொண்டே செல்கின்றது.

மறுமுனையில் தொல்லியல் திணைக்களத்தின் அட்டகாசமானது சொல்லில் அடங்காது எமது கலை, கலாசார விழுமிய அடையாளங்கள் மாற்றியமைக்கப்பட்டு பௌத்த சின்னங்கள் மாத்திரமே நாட்டில் தொல்லியல் திணைக்களத்தினால் பாதுகாக்கும் நிலைமை உருவெடுத்துள்ளது. நீங்கள் அன்று செய்த வீரச்செயற்பாடுகளை இன்று வடக்கிலும் கொண்டு செல்லவேண்டிய தேவைப்பாடு இருக்கின்றது.

அரசாங்கமானது வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களின் இன அடையாளங்களையும், மொழி அடையாளங்களையும் அழிக்கும் முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றது.

இதனைத் தடுத்து நிறுத்துவதற்கு பல போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். தமிழ் மக்களின் இருப்பிற்காக தேர்தல் காலங்களில் பொய்யான வாக்குறுதி வழங்கியவர்களில் பலர் இன்று காணாமல்போயிருக்கின்றார்கள். இவர்களை மக்கள் அடையாளம் கண்டுள்ளனர்.

இந் நாட்டில் தமிழ் மக்கள் சரித்திரபூர்வமாக வாழ்ந்தவர்கள் எங்களுக்கு சுய நிர்ணய உரிமை உண்டு. வடக்கு, கிழக்கில் பல பிரதேசங்களை இழந்தாலும் இருக்கின்ற நிலங்களை பாதுகாத்து பெரும்பான்மை இனமாக வாழ்ந்து வருகின்றோம்.

எமது உரிமைகள் கிடைக்கும் வரை தமிழ்த்தேசியத்துக்காக குரல் கொடுத்துக்கொண்டு இருப்போம் - என்றார்.

# 'முல்லைத்தீவு முதல் புத்தளம் வரை தீனுடையானின் அனுபவப்பகிர்வு' நூல் வெளியீட்டு விழா புத்தளத்தில்







(ரஸீன் ரஸ்மின்)

முல்லைத்தீவைச் சேர்ந்த சமூக ஆர்வலர் முஸ்தபா மன்ஸூர் எழுதிய "முல்லைத்தீவு முதல் புத்தளம் வரை தீனுடையானின் அனுபவப்பகிர்வு" எனும் நூல் வெளியீட்டு விழா நேற்றுமுன்தினம் (27) புத்தளம் பெருக்குவற்றான் முஸ்லிம் மகா வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது.

பெருக்குவற்றான் இளைஞர் அமைப்பினர் இந்த நூல் வெளியீட்டு விழாவை ஏற்பாடு செய்திருந்தனர்.

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாயின் புத்தளம் கிளை தலைவரும், புத்தளம் காசிமிய்யா அரபுக் கல்லூரி அதிபருமான அஷ்ஷெய்க் அப்துல்லாஹ் மஹ்மூத் ஆலிம் (மதனி) தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் அதிபர்கள், ஆசிரியர்கள், தொழிலதிபர்கள், உலமாக்கள், மஸ்ஜித் நிர்வாகிகள், சமூக ஆர்வலர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது, அஷ்ஷெய்க் எம்.ஐ.கைஸர்கான் (கபூரி) ஆசிரியர் வரவேற்புரையை நிகழ்த்தியதுடன், நூலின் வெளியீட்டு உரையை கவிஞர் முல்லை முஸ்ரிபாவும், வாழ்த்துரையை புத்தளம் மன்பாஉல் ஸாலிஹாத் பெண்கள் அரபுக் கல்லூரி அதிபர் அஷ்ஷெய்க் எம்.எம்.எம்.ரியாஸும் (தேவ்பந்தி), கருத்துரையை சாமஸ்ரீ அஷ்ஷெய்க் அப்துல் சத்தாரும் (மதனி), நூலாய்வுரையை தில்லையடி முஸ்லிம் மகா வித்தியாலய அதிபரும், கவிஞருமான ஹாஜா அலாவுதீனும், ஏற்புரையை நூலாசிரியரும் நிகழ்த்தினார்கள்.

அத்துடன், "நூல் ஆசிரியரின் வாழ்வியல் சுிதம், வரலாற்று சரித்திரம்" எனும் தலைப்பில் கவிஞர் எச்.எம்.சுஹைப் ஆசிரியர் ரசனையுடன் கயிதை வாசித்துக் காட்டினார்.

நூலின் முதல் பிரதியை பிரபல தொழிலதிபர் எம்.ஐ.எம்.நயீம் பெற்றுக்கொண்டதுடன், நூலாசிரியர் பொன்னாடை போர்த்தியும் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கொட்டகலை ஆசிரியர் கலாசாலையில் தேயிலைச் சாயம் புகைப்படக் கண்காட்சி









(க.கிஷாந்தன், மனுர சுதத் செல்லஹேவா)

மலையக மண்வாசனை சொல்லும் மலையக இளைஞர், யுவதிகளின் புகைப்பட கண்காட்சி கொட்டகலை ஆசிரியர் கலாசாலையில் நேற்று (28) நடைபெற்றது.

தேயிலைச் சாயம் எனும் தொனிப்பொருளின் கீழ் நடைபெறும் இக்கண்காட்சியை காலை 8.30 மணி முதல் மாலை 5.30 மணிவரை பார்வையிடமுடியும் என நிகழ்வு ஏற்பாட்டுக்குழு அறியித்துள்ளது.

மலையகத் தமிழர்களின் கலை, கலாசார மற்றும் பண்பாட்டு விழுமியங்களையும், வாழ்வியலையும் பிரதிபலிக்கும் வகையிலான புகைப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. மக்களின் வலி சுமந்த வாழ்க்கையை எடுத்துக்காட்டும் காட்சிகளும் உள்ளன.

மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம், ஊவா சக்தி நிறுவனம், சுயசக்தி நிறுவனம்



என்பன இணைந்து அனுசரணை வழங்குகின்ற இக்கண்காட்சிக்கு ஜேர்மனி, இத்தாலி, நெதர்லாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளின் தூதுவர்கள் என பல முக்கியஸ்தர்கள், பொது மக்கள் என பலரும் கண்காட்சியை பார்வையிட்டனர்.

# வட்டகொடையில் தொழிலாளர்களுக்கு பச்சைக் கொழுந்து பறிக்கும் போட்டி

## 15 நிமிடங்களில் 08 கிலோ பறித்து கலையரசி முதலிடம்













(எம்.கிருஸ்ணா)

தலவாக்கலை பெருந்தோட்ட நிறுவனத்தின் கீழ் இயங்கும் தலவாக்கலை வட்டகொட தோட்டத்தில் தேயிலை கொழுந்து பறிக்கும் போட்டி நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை தோட்ட முகாமையாளர் எஸ்.ஜி.என். நலின்குமார தலைமையில் இடம்பெற்றது.

தோட்ட முகாமைத்துவத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தப் போட்டிக்கு வட்டகொட கீழ் பிரிவு, மேல் பிரிவு, யோக்ஸ்போட் ஆகிய தோட்டப் பகுதிகளிலிருந்து 09 போட்டியாளர்கள் கலந்துகொண்டனர்.

குறித்த போட்டியில் கலந்துகொண்ட தொழிலாளர்களுக்கு தேயிலை கொழுந்து பறிக்க 15 நிமிடங்கள் வழங்கப்பட்டதில் வட்டகொட மேல் பிரிவு தோட்டத்தைச் சேர்ந்த ஆறுமுகம் கலையரசி 08 கிலோ 80 கிராம் பச்சைத்தேயிலை கொழுந்தினை பறித்து முதலாமிடத்தையும், வட்டகொட மேல் பிரிவு தோட்டத்தைச் சேர்ந்த நிலானி 07 கிலோ 70 கிராம் பச்சைத்தேயிலை கொழுந்தினை பறித்து இரண்டாம் இடத்தையும், கீழ்பிரிவு தோட்டத்தைச் சேர்ந்த யோகராணி 06 கிலோ 920 கிராம் பச்சைத்தேயிலை கொழுந்தினை பறித்து மூன்றாவது இடத்தைப் பெற்றுகொண்டனர்.

இந்தப் போட்டியில் கலந்துகொண்ட போட்டியாளர்களுக்கு அமோக வரவேற்பளிக்கப்பட்டது.

இதேவேளை வெற்றிபெற்ற மூவருக்கும் சான்றிதழ், பணப்பரிசு மற்றும் கேடயங்களும் வழங்கப்பட்டன.

ஒரு தோட்டப் பகுதியில் ஒரு போட்டியாளர்கள் தெரிவுசெய்யப்பட்ட ஏழுபது தோட்டப் பகுதியிலிருந்து ஏழுபது போட்டியாளர்கள் கலந்துகொள்ளும் மாபெரும் இறுதிப் போட்டி எதிர்வரும் ஏப்ரல் மாதம் 23 ஆம் திகதி ரதல்ல யிளையாட்டு மைதானத்தில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த இறுதிப் போட்டியில் வெற்றிபெறும் முதல் போட்டியாளருக்கு தமது குடும்பத்தோடு இந்தியாயிற்கு சுற்றுலா பயணம் சென்றுவர வாய்ப்புகள் வழங்கப்படும் என அதிகாரிகள் தெரியித்தனர்.

வட்டகொட தோட்டத்தில் இடம் +பெற்ற இந்த போட்டியில் தோட்ட உதயி முகாமையாளர் நிமேஸ், தோட்ட வைத்தியசாலையின் வைத்தியர் தர்மசேகர யாப்பா மற்றும் தோட்ட உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# அதிகாரங்கள் இருந்தபோதிலும் நாட்டை கட்டியெழுப்பும் திறன் அரசிடம் இல்லை

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குற்றச்சாட்டு



அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளபோதிலும் இந்த நாட்டை கட்டியெழுப்பவோ அபிவிருத்தி செய்யவோ தற்போதைய அரசாங்கத்திற்கு எந்த திறமையும் இல்லை - என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச காலியில் தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள டொலர் நெருக்கடிக்கு பொதுஜன பெரமுன கட்சியோ அல்லது அரசாங்கமோ காரணமல்ல என ஜனாதிபதியும் பிரதமரும் தெரிவித்துள்ளதாக கூறிய எதிர்க்கட்சித் தலைவர், அப்படியானால் நாட்டில் ஏற்பட்டுள்ள டொலர் நெருக்கடிக்கு ஐக்கிய மக்கள் சக்தியும் சஜித் பிரேமதாசவுமா காரணம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அரசாங்கத்திடம் கேள்வி எழுப்பினார்.

இளைஞர், யுவதிகள் நாட்டைவிட்டு வெளியேறுவதும், நாட்டில் தொழிற்சாலைகள் மூடப்படுவதும், நாடு இவ்வளவு பேரழிவிற்குள் விழுந்திருப்பதற்கு அரசாங்கத்தின் தவறு இல்லையென்றால், இதற்குக் காரணம் ஐக்கிய மக்கள் சக்தியும் சஜித் பிரேமதாசவுமா என கேள்வி எழுப்பிய அவர், இந்த நாட்டு மக்களை யார் என அரசாங்கம் நினைத்துக் கொண்டிருக்கிறது எனவும் வினவினார்.

நாடு முழுவதும் ஒவ்வொன்றிற்கும் வரிசைகள் உள்ளன என்பதோடு, மக்களை வாட்டும் இந்த துன்பங்களுக்கு மக்கள் வாக்குச் சாவடிகளில் பதில் சொல்வார்கள் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் கூறினார்.

காலி, கல்பொக்க, கொஸ்கொடவில் அமைந்துள்ள ஆமைகள் பாதுகாப்பு நிலையத்திற்கு நேற்றுமுன்தினம் (27) விஜயம்செய்த எதிர்க்கட்சித் தலைவர், ஆமைக் குட்டிகளை கடலில் விடுவதிலும் ஈடுபட்டார்.

ஒரு நாட்டை ஆளத் தேவையான அனைத்து அதிகாரங்களையும், தேவையான ஒவ்வொரு பதவியையும் இந்த நாட்டு மக்கள் இந்த அரசாங்கத்திற்கு வழங்கியுள்ளதாகவும், இவ்வாறான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ள போதிலும் இந்த நாட்டை கட்டியெழுப்பவோ அபிவிருத்திசெய்யவோ தற்போதைய அரசாங்கத்திற்கு எந்த திறமையும் இல்லை எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இன்று நாடு முழுவதும் வரிசைகள் காணப்படுவதாகவும், இந்த அனர்த்தத்தில் இருந்து மீள்வதற்கான சாத்தியமும் திட்டமும் உள்ளதா என சிலர் கேட்கின்றனர் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். நிலைபேறான ஒழுங்கமைக்கப்பட்ட வேலைத்திட்டமும் அதற்கான திறனும் ஐக்கிய மக்கள் சக்தியிடம் உள்ளதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், பல்வேறு பேரணிகளில் சிக்கிக்கொள்ளாமல், மீண்டும் 2019ஆம் ஆண்டு பரீட்சாத்த பரிசோதனையை செய்ய வேண்டாம் என்றும் கூறினார்.

எக்ஸ்பிரஸ் பேர்ல் அனர்த்தம் காரணமாக நாட்டுக்கு வழங்கப்படவேண்டிய இழப்பீட்டினை துல்லியமாக மதிப்பீடு செய்து, அதனை பெற்றுக்கொள்வதற்கு தற்போதைய அரசாங்கத்தினால் இன்னும் முடியவில்லை என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இது தொடர்பில் சரியான பகுப்பாய்வை மேற்கொள்ளும் திறன் கூட அரசாங்கத்தின் பல அமைச்சர்களுக்கும் இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

எக்ஸ்பிரஸ் பேர்ல் துயரச் சம்பவத்தை இன்று பலர் மறந்துவிட்டதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இந்த அவலத்தால் நாட்டின் மீன் வளம் சார்ந்த இழப்பு குறித்து, நாட்டில் அழிந்துள்ள இயற்கை வளங்கள் குறித்தும்அரசாங்கம் எவ்விதத்திலும் பொறுப்படுத்தவே இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

## இசைக் கச்சேரிக்கு வந்தவரின் மோட்டார்சைக்கிள் திருட்டு

(ஜூட் சமந்த)

இசைக் கச்சேரிக்கு வந்தவரின் மோட்டார்சைக்கிள் திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் விரிவான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக மாதம்பை பொலிஸார் தெரிவித்தனர்.

மாதம்பையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இசைக் கச்சேரிக்கு வருகைதந்தவரின் மோட்டார் சைக்கிளே திருடப்பட்டுள்ளது. இது தொடர்பில் மாதம்பை கருக்குவ பகுதியைச் சேர்ந்தவர் முறைப்பாடு பதிவுசெய்துள்ளார்.

இசைக் கச்சேரி நிறைவடைந்த பின்னர் மோட்டார்சைக்கிள் நிறுத்திவைக்கப் பட்டிருந்த இடத்தில் சென்று பார்த்தபோது அது அங்கிருக்கவில்லையென அவர் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

# உலக சைவப் பேரவையின் கொடி தின நிகழ்வுகள் இன்று

சிவராத்திரி தினத்தை முன்னிட்டு உலக சைவப் பேரவையின் இலங்கைக் கிளை நாடளாவிய ரீதியில் ஏற்பாடுசெய்திருந்த கொடி தின வைபவம் இன்று நடைபெறவுள்ளது.

உலக சைவப் பேரவையின் இலங்கைக் கிளைத் தலைவர் கா. துயாபரன் தலைமையில் கொழும்பு பம்பலப்பிட்டி ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலயத்தில் காலை 08 மணிமுதல் இந்நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்திரனராக கலந்துகொண்டு கொடி விநியோகத்தை ஆரம்பித்துவைக்கவுள்ளார். கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி அக்ஷராத்மானந்தா, பிரதமரின் இந்து மத விவகாரங்களுக்குப் பொறுப்பான இணைப்பாளர் ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா, இந்து சமய அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ. உமாமகேஸ்வரன், மாணிக்கப் பிள்ளையார் ஆலய அறங்காவல் சபைத் தலைவர் அ. மாணிக்கவாசகர், உலக சைவப் பேரவையின் செயலாளர் வீ. சிவஜெயராஜா, பொருளாளர் ஆர். வைத்தியமானிதி உள்ளிட்ட அங்கத்தவர்களும் நலன்விரும்பிகளும் கலந்துகொள்ளவுள்ளனர்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் கொடி விற்பனை மூலம் கிடைக்கும் நிதியானது அவ்வந்த மாவட்டங்களிலுள்ள அறநெறிப் பாடசாலைகளின் வளர்ச்சிக்கும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கும் பயன்படுத்தப்படுகிறது.

# மதுரங்குளியில் அந்நஜ்வா பாலர் பாடசாலை கட்டடத் திறப்பு விழா








(ரஸீன் ரஸ்மின்)

மதுரங்குளி விருதோடை கஜுவத்தையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட அந்நஜ்வா பாலர் பாடசாலைக் கட்டடத் திறப்பு விழா நேற்று இடம்பெற்றது.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ரெட்பானா கிளை உறுப்பினர்கள் கற்பிட்டி பிரதேச சபை உறுப்பினர் (அ.இ.ம.கா.) எம்.ஐ.எம். ஆஷிக்கிடம் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க, தனது சொந்த நிதியிலிருந்து தனது பெற்றோர்களது ஞாபகார்த்தமாக குறித்த பாலர் பாடசாலைக் கட்டடத்தை நிர்மாணித்துக் கொடுத்துள்ளார்.

அந்நஜ்வா பாலர் பாடசாலை நிர்வாகத்தினரோடு இணைந்து அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ரெட்பானா கிளை உறுப்பினர்கள் ஏற்பாடுசெய்த இந்த நிகழ்வில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கற்பிட்டி பிரதேச சபை உறுப்பினர் எம்.ஐ.எம்.ஆஷிக் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

அத்துடன், கற்பிட்டி பிரதேச சபைத் தலைவர் ஏ.எம்.இன்பாஸ், கற்பிட்டி பிரதேச சபை உறுப்பினர்களான பைசர் மரிக்கார், முஹம்மது பௌசான் தொழிலதிபர் எம்.ஐ.முஹம்மது நயீம் உட்பட மஸ்ஜித் நிர்வாகிகள், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ரெட்பானா கிளை உறுப்பினர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது பாலர் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றதுடன், மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

# ‘முரண்பாட்டு நிலைமாற்றத்திற்கான பன்மைத்துவ செயற்பாடு’ எனும் தொனிப்பொருளில் விசேட செயலமர்வு புத்தளத்தில்









(ரஸீன் ரஸ்மின்)

புத்தளத்தில் தெரிவுசெய்யப்பட்ட இளைஞர், யுவதிகளுக்கான "முரண்பாட்டு நிலைமாற்றத்திற்கான பன்மைத்துவ செயற்பாடு" எனும் கருப்பொருளில் விசேட ஒருநாள் செயலமர்வொன்று கடந்த சனிக்கிழமை (26) புத்தளம் - மன்னார் வீதியில் வில்பத்து கேட் மண்டபத்தில் இடம்பெற்றது.

தேசிய சமாதான பேரவையின் நிதி பங்களிப்பில் புத்தளம் பாலாவியிலுள்ள Wodept நிறுவனமும், புத்தளம் மாவட்ட சர்வமதக் குழுவும் இணைந்து குறித்த செயலமர்வை ஏற்பாடு செய்தன.

புத்தளம் மாவட்ட சர்வமதக் குழுவின் இணைப்பாளரும், Wodept நிறுவனத்தின் நிகழ்ச்சி உத்தியோகத்தருமான உவைஸ் முஸ்னியாவின் தலைமையில் இடம்பெற்ற இந்த செயலமர்வில் முந்தல், புத்தளம், ஆனமடுவ மற்றும் வன்னாத்தவில்லு ஆகிய நான்கு பிரதேச செயலகங்களைச் சேர்ந்த தெரிவுசெய்யப்பட்ட இளைஞர், யுவதிகள் கலந்துகொண்டனர்.

இதன்போது, "தகாத வார்த்தைகள் பாவித்தல்", "தொடர்பாடல்", "தீவிர வன்முறைகளை எவ்வாறு தவிர்த்துக்கொள்ளல்" போன்ற தலைப்புகளில் அனுபவம்பெற்ற வளவாளர்களால் குழுச் செயற்பாடுகள் மூலம் செயலமர்வு முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பொலிஸ் கான்ஸ்டபிளை தாக்கிய மூவருக்கு மார்ச் 08 வரை விளக்கமறியல்

(ஜூட் சமந்த)

பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரை தாக்கிய குற்றச்சாட்டில் புத்தளத்தில் கைதுசெய்யப்பட்ட மூவரை இம்மாதம் 08ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சிலாபம், மல்வத்த பகுதியில் நேற்றுமுன்தினம் (27) பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் தாக்கப்பட்டார்.

கொம்பனித்தெரு பொலிஸ் நிலையத்தில் குற்ற விசாரணைப் பிரிவில் கடமையாற்றும் காமினி பிரியரத்ன என்ற பொலிஸ் கான்ஸ்டபிள் தனது உறவினர் ஒருவரின் வீட்டுக்கு மோட்டார்சைக்கிளில் சென்று வரும்போது வழிமறிக்கப்பட்டு தாக்கப்பட்டுள்ளார்.

இந்த கான்ஸ்டபிள் சிலாபம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும்போது விசாரணையொன்று தொடர்பில் வேறொரு தரப்பினருடன் ஏற்பட்ட முரண்பாடே இந்தத் தாக்குதலுக்குக் காரணமென பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட கான்ஸ்டபிள், சிலாபம் பொலிஸ் நிலையத்தில் அளித்த முறைப்பாட்டுக்கமைய சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் சிலாபம் பதில் நீதவான் பிரதீப் சமிந்த முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் எதிர்வரும் 08ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

# டெலன்ட் ஹப் அகடமியில் பயிற்சிபெற்றோருக்கு பட்டமளிப்பு விழா













(ஏ.எஸ்.எம். ஜாவித்)

கல்வியை முடித்துவிட்டிருக்கும் மாணவிகள் உட்பட சுய தொழிலில் ஆர்வமுள்ளவர்களுக்கான தொழிற்பயிற்சிகளை வழங்கிவரும் டெலண்ட் ஹப் அகடமிக் அண்மையில் பயிற்சிகளை முடித்துக் கொண்டவர்களுக்கான பட்டமளிப்பு விழா நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அக்டமியின் பணிப்பாளர் பஸ்லியா ரமீஸ் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்விற்கு பிரதம அதிதியாக நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் கலந்துகொண்டிருந்தார். கௌரவ அதிதிகளாக இலங்கைக்கான ஈரான் தூதுவராலயத்தின் கலாசாரப் பிரவின் கவுன்சிலர் கலாநிதி பி.முஸாமி குதர்சி கொழும்பு ரைம்ஸ் இணையத்தளத்தின் பணிப்பாளர் எம்.சி.றசூல்தீன் உள்ளிட்ட பல முக்கியஸ்தர்களும் அனுசரணையாளர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது கேக் ஏனைய உணவு வகைகள் மற்றும் ஆடைத் தயாரிப்புகளில் தொழிற்பயிற்சியைப் பெற்றுக் கொண்ட சுமார் 200இற்கும் மேற்பட்டோருக்கு சான்றிதழ்கள், நினைவுச்சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன், சிறந்த தயாரிப்புப் பொருட்கள் கண்காட்சிக்காக தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கும் அதிக திறமைகளைக் காட்டியவர்களுக்கும் விசேட பரிசில்கள் நினைவுச்சின்னங்கள் மற்றும் பணப்பரிசில்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

# முட்டை மற்றும் இறைச்சிக் கோழிகளுக்கான விலைகள் மேலும் அதிகரிக்கப்படமாட்டாது

## இராஜாங்க அமைச்சர் ஹேரத் திருமலையில் தெரிவிப்பு






(ரவ்பீக் பாயிஸ்)

நாட்டில் முட்டை மற்றும் இறைச்சிக் கோழிகளுக்கான விலைகள் மேலும் அதிகரிக்கப்படமாட்டாது - என கால்நடை வளர்ப்பு பண்ணை மேம்பாட்டு மற்றும் பால் பண்ணை முட்டை தொடர்பான இராஜாங்க அமைச்சர் டி.பி.ஹேரத் தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ஷவின் எண்ணகருவில் உருவான சுவிசேஷத்தின் நோக்கு வேலைத்திட்டத்தின்கீழ் பால் உற்பத்தியினை ஊக்குவிப்பது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று (28) திருகோணமலை கால்நடை திணைக்களத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டில் நாளுக்கு நாள் கோழி இறைச்சியின் விலை அதிகரித்தவண்ணம் உள்ளது. அரசாங்கம் என்றவகையில் இதற்கான மாற்றுத்திட்டம் உள்ளதா என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு இவ்வாறு பதிலளித்தார்.

இலங்கை நாட்டில் மட்டுமல்லாது, முழு உலகிலும் நுகர்வுப் பொருட்களுக்கான விலை அதிகரித்தவண்ணமே உள்ளது. காரணம், உலகில் ஏற்பட்ட தொற்று நோய் காரணமாக பெரும்பாலான உற்பத்திகள் குறைவடைந்து காணப்படுவதேயாகும்.

அந்தவகையில் கோழி இறைச்சியின் விலை அதிகரித்தது ஒரு சாதாரண விடயமேயாகும். நாட்டில் கோழி வளர்ப்பிற்கான தீவனங்கள் இறக்குமதிக்காக வரி நிவாரணம் பெறப்பட்டு போதியளவு கால்நடை தீவனங்கள் இறக்குமதி செய்வதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் இவ்வாறு வழங்கப்பட்ட நிவாரணத்தினூடாக தீவனங்கள் இறக்குமதி செய்யப்படும் பட்சத்தில் கோழி இறைச்சி மற்றும் முட்டைகளுக்கான விலைகள் மேலும் அதிகரிக்காமல் தடுக்கமுடியும் எனவும் அரசாங்கம் என்ற வகையில் அதனை நாங்கள் பொறுப்புடன் செயல்படுத்துவோம் எனவும் கால்நடை வளர்ப்புப் பண்ணை மேம்பாட்டு மற்றும் பால்பண்ணை முட்டை தொடர்பான இராஜாங்க அமைச்சர் டி.பி.ஹேரத் தெரிவித்தார்.

மேலும் நாட்டில் பால் உற்பத்தியின் 40 சதவீதம் மாத்திரமே உற்பத்திசெய்யப்படுவதாகவும் அவற்றில் மிகுதி 60 வீதமான பால் உற்பத்தியினை மேம்படுத்துவதற்காக ஜனாதிபதியின் சுவிசேஷத்தின் நோக்கு வேலைத்திட்டத்தின் கீழ் 1000 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு அவற்றில் 11 மில்லியன் ரூபா கிழக்கு மாகாணத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அதன் வேலைத்திட்டங்கள் சிறப்பான முறையில் கிழக்கு மாகாணத்தில் முன்னெடுத்து செல்லப்படுவதாகவும் இதன்போது தெரிவித்தார்.

மேலும் பால் பண்ணையாளர்களை ஊக்குவிக்கும் பல திட்டங்கள் முன்னெடுக்கப் பட்டு வருகின்றபோதிலும் கோழி பண்ணையாளர் களுக்கான சரியான ஒரு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றதா என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு...

கோழி இறைச்சி மற்றும் முட்டை உற்பத்திக்கு மாற்றுமல்லாது நாட்டில் ஏனைய இறைச்சி உற்பத்திக்கான அனைத்து வேலைத் திட்டங்களும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவ்வாறான வேலைத்திட்டத்தின் கீழ் எமது கால்நடை திணைக்களத்தின் ஊடாக தேவையான திட்டங்கள் வகுக்கப்பட்டு அதற்கான நிதி ஒதுக்கப்பட்டு அதன் வேலைத்திட்டங்கள் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் இதன்போது தெரிவித்தார்.

மேலும் இந்நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் மற்றும் திணைக்களத்தின் உயர் அதிகாரிகள் என பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஐஸ் போதைப்பொருளுடன் காத்தான்குடியில் இளைஞர் கைது

(கனகராசா சரவணன்)

காத்தான்குடியிலிருந்து வியாபாரத்துக்காக மோட்டார்சைக்கிள் ஒன்றில் ஐஸ் போதைப்பொருளை வாங்கி கொண்டுசென்ற ஊறணி பிரதேசத்தைச் சோந்த ஒருவரை காத்தான்குடியில் வைத்து நேற்று முன்தினம் (27) இரவு கைதுசெய்துள்ளதாக மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி.பண்டார தெரிவித்தார்.

கடற்படை புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றிற்கமைய மாவட்ட குற்ற விசாணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி.பண்டார தலைமையிலான பொலிஸார் கடற்படை புலனாய்வுப் பிரிவினர் சம்பவதினமான நேற்று முன்தினம் இரவு காத்தான்குடி பிரதேசத்தில் வீதியில் கண்காணிப்பில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.

இதன்போது மோட்டார்சைக்கிளில் பயணித்த இளைஞனை நிறுத்தி சோதனையிட்டபோது, அவர் தனது உடலில் மறைத்து வைத்து எடுத்துச் சென்ற 5 கிராம் 110 மில்லிகிராம் கொண்ட ஐஸ் போதைப்பொருளையும் மோட்டார்சைக்கிள் ஒன்றையும் மீட்டதுடன், அவரை கைதுசெய்தனர்.

இதில் கைதுசெய்யப்பட்டவர் மட்டக்களப்பு பொலிஸ் பிரிவிலுள்ள ஊறணி பிரதேசத்தைச் சேர்ந்த போதைப்பொருள் வியாபாரி எனவும் இவரை காத்தான்குடி பொலிஸாரிடம் ஒப்படைத்து இவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

## பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கக்கோரி கல்முனை மாநகர சபையில் பிரேரணை நிறைவேற்றம்

(சாய்ந்தமருது, அம்பாறை நிருபர்கள்)

இலங்கையில் கடந்த 40 வருடங்களுக்கு மேலாக அமுலிலுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கக் கோரி கல்முனை மாநகர சபையில் பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளது.

கல்முனை மாநகர சபையின் 47ஆவது மாதாந்த பொதுச் சபை அமர்வு மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தலைமையில் நேற்று (28) பிற்பகல் இடம்பெற்றபோதே இப்பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

இப்பிரேரணையை மாநகர சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினரான ஹென்றி மகேந்திரன் சமர்ப்பித்திருந்தார்.

இதனை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினரான சட்டத்தரணி ஆரிகா காரியப்பர் வழிமொழிந்தார். இதையடுத்து உறுப்பினர்கள் பலரும் பயங்கரவாதத் தடைச்சட்டம் இரத்து செய்யப்பட வேண்டும் என வலியுறுத்தி கருத்துரைத்தனர்.

இதனைத் தொடர்ந்து ஓர் உறுப்பினரின் எதிர்ப்புக்கு மத்தியில் சபைக்கு சமுகமளித்திருந்த ஏனைய அனைத்து உறுப்பினர்களினதும் ஆதரவுடன் இப்பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## மட்டக்களப்பு மண்முனை மேற்கில் தாய்மார்களுக்கு உதவி

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கிராமப் பகுதி பாடசாலைகளில் மாணவர்களின் எண்ணிக்கை குறைவால் மூடப்படும் நிலையினை கருத்திற் கொண்டு இரண்டு பிள்ளைகளுக்கு மேல் மூன்றாவது குழந்தையினை பெற்றெடுத்த 17 தாய்மார்களுக்கு உதவி வழங்கும் நிகழ்வு நேற்று (28) நரிப்புல்தோட்டம் கிராமத்தில் இடம்பெற்றது.

சுவிஸ் அறம் தன்னார்வத் தொண்டு அமைப்பினால் மேற்படி தாய்மாருக்கு தலா ரூபா 10,000 வழங்கப்பட்டதுடன், பிள்ளைகளின் 18 வயதுவரை மாதம் ஒன்றிற்கு ரூபா 1000 வங்கியில் வைப்புச்செய்யப்பட்டது. 2016இல் சிறுவர்கள் தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு நரிப்புல்தோட்டம் என்னும் கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டம் 6ஆவது வருடமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

நரிப்புல் தோட்டம், மகிழவட்டவான், பங்குடாவெளி, விளாவட்டவான், நெல்லூர், சொறுவாமுனை, மணிபுரம் ஆகிய கிராமங்கள் இதில் உள்வாங்கப்பட்டு 133 தாய்மார் உதவியினை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



இத்திட்டத்தின் கீழ் உதவித்தொகை பெற்றுவரும் அனைத்து தாய்மாருக்கும் பிள்ளைகளுக்கும் நாட்டின் அசாதாரண நிலைமையை கருத்திற் கொண்டு உடுதுணிகளும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் பிரதி கல்விப் பணிப்பாளர்களான மகேந்திரகுமார், ஹரிகரராஜ், சுவிஸ் வாழ் சிவசாந்தி அமிர்தலிங்கம், ஆசிரியர் வே.சசிகரன் கிராம அபிவிருத்தித் தலைவர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## பெரும்போக வேளாண்மை செய்கையில் பாதிக்கப்பட்ட 217 விவசாயிகளுக்கான இழப்பீடு மட்டக்களப்பில் கையளிப்பு

(மட்டக்களப்பு நிருபர்)

கடந்த 2020 மற்றும் 2021 பெரும்போக வேளாண்மைச் செய்கையின்போது வரட்சி, வெள்ளம் மற்றும் காட்டுயானைகளால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான காப்புறுதி வழங்கும் ஆரம்பகட்ட நிகழ்வானது நேற்று (28) மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் தலைமையில் வவுணதீவு மண்டபத்தடி கமநல சேவை நிலையத்தின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றுள்ளது.

விவசாயிகளின் நலன் நோன்புகை தொடர்பாக அரசாங்கம் கூடுதலான கவனத்தை செலுத்தி வருகின்ற நிலையில் "விவசாயிகளுக்கு வளமான நாளை" எனும் தொனிப்பொருளிற்கு அமைவாக மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த பெரும்போக செய்கையின்போது பாதிக்கப்பட்ட சுமார் 9736 விவசாயிகளுக்கு கமத்தொழில் அமைச்சின் வழிகாட்டுதலில், கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதி சபையினால் சுமார் 36 கோடியே 19 இலட்சம் ரூபா நட்டஈட்டுக் கொடுப்பனவாக வழங்கப்படவுள்ளன.



இதற்கமைவாக மட்டக்களப்பு மண்டபத்தடி கமநல சேவை பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் பாதிக்கப்பட்ட சுமார் 217 விவசாயிகளுக்கான கொடுப்பனவிற்கான காசோலைகள் நேற்று காலை 10.30 மணியளவில் வழங்கப்பட்டுள்ளன.

பின்தங்கிய கிராம பிரதேச அபிவிருத்தி, வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறுபொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் பிரதம அதிதியாக கலந்துகொண்டு பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான காசோலையினை வழங்கியிருந்தார்.

இதன்போது மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகளுக்கு இழப்பீட்டிற்கான காப்புறுதியாக முற்றாக பாதிக்கப்பட்ட வயல்களுக்கு ஏக்கரிற்கு நாற்பதாயிரம் தொடக்கம் இழப்பீட்டினையும், ஏனைய பகுதியளவில் பாதிக்கப்பட்ட வயல்களுக்கு பாதிப்பின் வகைக்கேற்ப இழப்பீட்டு காப்புறுதிக்கான காசோலைகள் வழங்கப்பட்டதுடன், காசோலைகளை பெற்றுக்கொண்ட விவசாயிகள் தமக்கான நட்டஈட்டுக் காப்புறுதியினை மிக விரைவாக பெற்றுக்கொடுத்தமைக்காக இராஜாங்க அமைச்சருக்கும், அரசாங்கத்திற்கும் தமது நன்றியினை தெரிவித்திருந்தனர்.

## கல்முனையில் விலங்குகளின் தாக்கத்திலிருந்து பாதுகாப்பு பெறுவது தொடர்பான செயலமர்வு





(றாசிக் நபாயிஸ்)

யானை மற்றும் ஏனைய விலங்குகளின் தாக்கத்திலிருந்து மனிதர்களையும், பயிர்களையும் எவ்வாறு பாதுகாத்தல், பாதிப்பு ஏற்பட்டால் இழப்பீடுகளை எவ்வாறு பெற்றுக்கொள்தல் தொடர்பாக கல்முனை பிரதேச செயலக கிராம உத்தியோகத்தர்களுக்கான செயலமர்வு கிராம நிர்வாக உத்தியோகத்தர் யூ.எல்.பதியுதீனின் தலைமையில் பிரதேச செயலக ஸ்மார்ட் மண்டபத்தில் நேற்று (28) இடம்பெற்றது.

பிரதேச செயலக அனர்த்த நிவாரண சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர் அப்துல் றாசிக் அஹமட் நபாயிஸின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற இந்நிகழ்வு அம்பாறை மாவட்ட வனஜீவராசிகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் அம்பாறை மாவட்ட வனஜீவராசிகள் திணைக்கள வளத்தாப்பிட்டி காரியாலய நிலைய பொறுப்பதிகாரி ரி.ஜெகதீஸன் கலந்துகொண்டு கருத்துகள் தெரிவித்தார்.

மேலும் கருத்து தெரிவிக்கையில், காட்டு யானைகள் எமது நாட்டின் சொத்து, அதன் மூலம் எமது நாட்டுக்கு அந்நிய செலாவணிகள் கிடைக்கின்றன. இருந்தாலும் இவைகளின் மூலம் வீடுகளுக்கு, சுற்று பதில்களுக்கு, கட்டிடங்களுக்கு சேதம் ஏற்படுவதுடன், காயங்களும் ஏற்பட்டு மரணங்களும் நிகழ்கின்றன. அத்துடன் பயிர்ச் சேதங்களும் நிகழ்கின்றன.


காயங்கள் ஏற்படும்போது அதற்குரிய வைத்திய அறிக்கையை சமர்ப்பித்து நிதியைப் பெற்றுக்கொள்வதுடன் மரணங்கள் நிகழும்போது உரிய ஆவணங்களை முழுமையாக சமர்ப்பித்து ஐந்து இலட்சம் இழப்பீடுகளையும் பெறமுடியும்.

ஆனால் தேசிய வன சரணாலயம், வன பரிபாலன காடு, தேசிய வனப்பூங்கா போன்ற பகுதிகளில் இடம்பெறும் மரணங்களுக்கு இழப்பீடுகள் வழங்கப்படமாட்டாது. யானைத் தாக்கம் மற்றும் மரணங்கள் ஏற்படும்போது மற்றும் கிராம சேவகர் பிரிவுகளில் யானைகள் இறந்துகிடந்தால் உடனடியாக உரிய அலுவலகத்திற்கு அறிவிக்கவேண்டும் எனவும் வேண்டிக்கொண்டனர்.

அத்துடன் மக்கள் வசிக்கும் பகுதிகளுக்கு யானைகள் வருகின்ற நிலையில் அவைகளை விரட்ட சிக்னல் வெடி, எறி வெடிகளை எவ்வாறு பயன்படுத்துவது என செய்முறைப் பயிற்சியும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சுற்றுச்சூழல் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

## போடியார் புலம்பல்!



தமிழ் எம் பீ மார் ஜனாதிபதிட கந்தோருக்கு முன் நடத்தின போராட்டத்த அரசியல் இருப்புக்கான போராட்டமாம் எண்டு யாழ்ப்பாணத்து ஆளும்கட்சி எம் பி அங்கயன் கிண்டல் அடிக்கிறாரு எலுவா.. அப்படியண்டா நீயும், டக்லசும், பிள்ளையானும், அமலும் சேர்ந்து வடக்கு கிழக்கில இடம்பெறும் காணி அபகரிப்ப தடுங்களன் பார்பம் உங்களால அதுக்கும் வழங்கா.. எதுக்கும் வழங்கா தலையை ஆட்டித்து கூலிக்கு மாரடிக்க மட்டும்தான் நீங்க நாலுபேரும் லாயக்கு..!

## நிந்தவூர் பிரதேச சபையின் 47ஆவது கூட்டமர்வு



(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பிரதேச சபையின் 2022 பெப்ரவரி மாதத்திற்கான 04வது சபையின் 47ஆவது கூட்டமர்வு நேற்று (28) முற்பகல் நடைபெற்றது.

நிந்தவூர் பிரதேச சபை தவிசாளர் எம்.ஏ.எம்.தாஹீர் தலைமையில் பிரதேச சபையின் சபா மண்டபத்தில் நடைபெற்ற கூட்டமர்வின்போது மத அனுஸ்டானம் இடம்பெற்ற பின்னர் 2022 ஜனவரி மாதத்திற்கான கூட்டறிக்கை உறுதிப்படுத்தல் 2022 ஜனவரி மாதத்திற்கான கணக்கறிக்கை உறுதிப்படுத்தல் தவிசாளர் எம்.எ.எம்.தாஹிர் உரை என்பன தொடர்ச்சியாக இடம்பெற்றன.

பின்னர் நிந்தவூர் பகுதியில் எல்.டி.எஸ்.பி வேலைத்திட்டம் தொடர்பில் உறுப்பினர்களின் கருத்துக்கள் சபையில் தவிசாளரினால் கேட்கப்பட்டது. அத்துடன் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் கடிதங்கள் தொடர்பில் ஆராயப்பட்டு, இறுதியாக சபை நடவடிக்கை கொரோனா விதிமுறைக்கமைய சிறப்பாக நிறைவடைந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# விரைவாகவும் இலகுவாகவும் சேவைகளை வழங்க மக்களை நோக்கி நாம் வேலைத்திட்டத்தின் களவிஜயம்





(நூருல் ஹுதா உமர்)

பிரதேச செயலகமானது மக்களுக்கான சேவைகளை வழங்கும் மிக முக்கியமான பொறுப்புவாய்ந்த அரச நிறுவனம் என்றவகையில் அதனூடாக வழங்கப்படும் சேவைகளை இலகுவாகவும் விரைவாகவும் மற்றும் சிரமங்கள், போக்குவரத்து அசௌகரியங்கள், நேர வீண்விரயமின்றி மக்கள் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் அவர்களது காலடிக்குச் சென்று சேவைகளை வழங்கும் விசேட வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

அதனடிப்படையில் இறக்காமம் பிரதேச செயலகத்தினால் மக்களுக்கான சேவைகளை அவர்களது காலடிக்குச் சென்று வழங்கும் நோக்குடன் மக்களை நோக்கி நாம் வேலைத்திட்டத்தின் கீழ் பொது கள விஜயம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாதமும் ஒரு கிராமசேவகர் பிரிவு என்ற ரீதியில் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட அனைத்து கிராமசேவகர் பிரிவுகளிலும் இவ்வேலைத்திட்டம் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வேலைத்திட்டத்தின் முதலாவது நிகழ்வு பிரதேச செயலாளர் எம்.எஸ்.எம்.ரஷ்ஷான் (நளீமி) தலைமையில் இடம்பெற்றது. பொது கள விஜயம் வேலைத்திட்டம் ஊடாகமக்களுக்கான சேவைகள், வழிகாட்டலகள் ஆலோசனைகள் மற்றும் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் என்பன வழங்கப்பட்டன.

அதில் முதியோர் அடையாள அட்டை, முதியோர் கொடுப்பனவு தொடர்பான வழிகாட்டல், விசேட தேவை உடையவர்களுக்கான சேவை, சுய தொழில் ஊக்குவிப்பு, பொதுசன மாதாந்தக் கொடுப்பனவு, காணி தொடர்பான பிரச்சினை, உளவளத்துணை சேவை, பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்திப் பிரிவின் சேவைகள், உற்பத்தித் திறன் மேம்பாடு, சிறுகைத்தொழில் ஊக்குவிப்பு வழிகாட்டல்கள், விளையாட்டு, திறன்மேன்பாடு மற்றும் இளைஞர் விவகாரம், டெங்கு தொடர்பான விழிப்புணர்வு மற்றும் கட்டுப்படுத்தலுக்கான நடவடிக்கைகள், சமுர்த்தி திணைக்களத்தின் சேவைகள், ஆயுர்வேத மருத்துவ வழிகாட்டல் சேவைகள், அனர்த்த சேவைகள், விவசாய விரிவாக்கல் சேவைகள், ஆட்பதிவுத் திணைக்களம் மற்றும் மோட்டார் வாகன போக்குவரத்து சேவை, சிறுவர் கழகங்களுக்கான சேவைகள் வாழ்வாதர உதவிகள் வழங்கப்பட்ட இடங்களுக்கான மேற்பார்வை என்பன இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அஹமட் நஸீல், இறக்காமம் பிரதேச சபை உறுப்பினர் என்.எம்.ஆசிக் உட்பட பதவி நிலை உத்தியோகத்தர்கள், பிரிவுகளுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள், பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர்கள், வெளிக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம மட்ட தலைவர்கள் ஆகியோர் கலந்துகொண்டதோடு மக்களின் பிரச்சினைகள் அடையாளம் காணப்பட்டு உடனடித் தீர்வுகளும் தேவையான ஆலோசனை வழிகாட்டல்களும் வழங்கப்பட்டன.

# திருமலை - மல்லிகைத்தீவு திருமங்களேஸ்வரர் ஆலயத்தில் சிவராத்திரி விசேட பூஜைகள்

(மூதூர் நிருபர்)

மகா சிவராத்திரி தினத்தன்று திருகோணமலை, மல்லிகைத்தீவு திருமங்களேஸ்வரர் ஆலயத்துக்கு ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தருவார்கள். அதன்படி இன்றைய தினம் அனுஷ்டிக்கப்படும் மகா சிவராத்திரியையொட்டி மல்லிகைத்தீவு திருமங்களேஸ்வரர் ஆலயத்துக்கு பெருந்திரளான பக்தர்கள் வருவார்கள் என இவ்வருடமும் எதிர்பார்க்கப்படுகிறது.

மல்லிகைத்தீவு திருமங்களேஸ்வரர் ஆதிலிங்க சுவாமிக்கு இன்று இரவு முழுவதும் சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜாம பூஜை, பால், தயிர், நெய், கோமியம் உள்ளிட்ட பஞ்ச கவ்ய அபிஷேகம், சந்தனக்காப்பு செந்நிற பட்டு, வில்வமாலையுடன் சுவாமிக்கு சிறப்பு அலங்காரம் நடக்கவிருக்கிறது.

இரவு 9 மணிக்கு இரண்டாம் ஜாம பூஜையில் பஞ்சாமிர்த அபிஷேகம், அகில் காப்பு, வெண் மஞ்சள் பட்டு, தாமரைப்பூ மாலை என சிறப்பு அலங்காரம் நடக்கிறது.

இரவு 12 மணிக்கு 3ஆம் ஜாம பூஜை, கொம்புத்தேன் அபிஷேகம், பச்சைக்கற்பூர காப்பு, வெண்பட்டு, ஜாதிப்பூ மாலை அலங்காரம் நடக்கிறது.

3 மணிக்கு, 4ஆம் ஜாம பூஜை, கரும்புச்சாறு அபிஷேகம், ஜவ்வாது காப்பு, பச்சைப்பட்டு, நந்தியாவட்டை பூ மாலை அலங்காரம் என 4 ஜாம பூஜைகளிலும் சிறப்பு அபிஷேகம், அலங்காரம், தீபாராதனை நடக்கிறது.

மேலும், மக்களை இரவு முழுவதும் விழிப்பாகவும், விழிப்புணர்வாகவும் வைத்து இருக்க இசை மற்றும் நடன நிகழ்ச்சிகளும் கோலாகலமாக நடைபெறவுள்ளன.

கொரோனா தடுப்பு வழிமுறைகளை பின்பற்றி மகா சிவராத்திரி விழாவில் பக்தர்கள் பங்கேற்குமாறு மல்லிகைத்தீவு ஆலய நிர்வாகத்தினர் அறிவுறுத்தியுள்ளனர்.

# வாழைச்சேனையில் வயோதிபப் பெண்ணின் வீட்டுக்குள் புகுந்த திருடன் கொலைமுயற்சி

## உறவினரின் சத்தம் கேட்டதும் தப்பியோட்டம்

(கல்குடா நிருபர்)

வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் நேற்று (28) அதிகாலை வயோதிபப் பெண்ணொருவரின் வீட்டினுள் புகுந்த திருடன் நகைகளை திருட முயற்சிசெய்துள்ள நிலையில், வயோதிபப் பெண் தெய்வாதீனமாக உயிர்த் தப்பியுள்ளதாக வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி லசந்த பண்டார தெரிவித்தார்.

வாழைச்சேனை எஸ்.எல்.ஹாஜியார் வீதியில் வசித்துவந்த ஓய்வூதியம் பெறும் 70 வயதுடைய வயோதிபப் பெண் ஒருவரின் வீட்டுக்குள் புகுந்த திருடன் அத்தாயின் காதை அறுத்ததுடன், கழுத்திலுள்ள மாலையைக் கழற்றுவதற்காக கழுத்தினை நெறுக்கியதுடன், சத்தம் போட்டபோது வாயில் அடித்து பல்லினை உடைத்துள்ளார். இச்சந்தர்ப்பத்தில் பக்கத்து அறையில் உறங்கிக்கொண்டிருந்த அத்தாயின் சகோதரியின் மகன் அழுகுரல் சத்தம் கேட்டு சாச்சி என்று சத்தம் எழுப்பியபோது திருடன் தப்பிச் சென்றுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக திருடனின் அடையாளங்களை உறவினர்கள் தெரிவித்ததற்கமைய வாழைச்சேனை கடதாசி ஆலை இராணுவ புலனாய்வுப் பிரிவினர் மற்றும் வாழைச்சேனை பொலிஸாரின் உதவியுடன் அப்பகுதியிலுள்ள 21 வயதுடைய இளைஞர் ஒருவர் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் காயமுற்ற வயோதிபப் பெண் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சைபெற்று வருவதுடன், குறித்த தாயிடம் இருந்து திருடப்பட்ட நகைகள் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அத்தோடு வாழைச்சேனை தபால் நிலைய வீதியில் தூக்கத்தில் இருந்த பெண்ணின் கை பட்டியை அறுத்து திருடிச் சென்றுள்ள சம்பவமும் நேற்று திங்கட்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது. வாழைச்சேனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் திருட்டுச் சம்பவமும், அதனுடன் இணைந்து கொலை முயற்சியும் இடம்பெற்று வருவதால் பிரதேச மக்கள் அச்சத்துடன் காணப்படுகின்றனர்.

இவ்வாறான திருடர்கள் மீண்டும் தங்களின் பிரதேசத்தில் திருடாமலும், கொலை முயற்சி செய்யாமலும் இருப்பதற்கு வாழைச்சேனை பொலிஸ் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

பிரதேசத்தில் அதிகரித்துள்ள போதைப் பொருள் பாவனையால் இவ்வாறான கொலையுடன் கூடிய திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்று வருவதுடன், கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் போதைப்பொருள் பாவனையால் பலமுறை சிறைச்சாலைக்குச் சென்று வந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# கல்முனை ஸ்ரீ சந்தான ஈஸ்வர் ஆலய சூழலில் மாணவர்களால் சிரமதானப்பணி



(பாண்டிருப்பு நிருபர்)

கல்முனை பிரதேசத்தில் இயங்கிவரும் இன, மத பேதமற்ற மாணவர் சுற்றாடல் முன்னோடிக் கழகத்தினால் கல்முனை ஸ்ரீ சந்தான ஈஸ்வர் ஆலய சூழலில் சிரமதானப்பணி முன்னெடுக்கப்பட்டது.

கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய பாடசாலையின் சுற்றாடல் முன்னோடிக் கழகத்தின் தங்கவர்ண பதக்கம் பெற்ற மாணவன் தேசிகன் செவ்வேள்குமரனின் ஒழுங்கமைப்பில், 'இன, மத பேதமற்ற சுற்றாடல் முன்னோடிகள்' எனும் தொனிப்பொருளில் நடைபெற்ற இச் சிரமதானப்பணியில் கல்முனை தமிழ் கல்வி கோட்டத்திற்குட்பட்ட கார்மேல் பற்றிமா தேசிய பாடசாலை, உவெஸ்லி உயர்தர தேசிய பாடசாலை, இராமகிருஷ்ண மகா வித்தியாலம், விவேகானந்தா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கல்வி கற்கும் தமிழ், முஸ்லிம் சுற்றாடல் முன்னோடிக் கழக மாணவர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

அத்துடன் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பிரதேச உத்தியோகத்தர் எஸ்.புஸ்பராஜினி கலந்து கொண்டிருந்தார். இங்கு மாணவர் சுற்றாடல் கழகங்கள் மூலம் இனங்களுக்கிடையில் புரிந்துணர்வையும், ஐக்கியத்தையும் ஏற்படுத்தும் வகையில் மதஸ்தலங்கள், மற்றும் பொது இடங்களில் சுற்றாடல் மேம்பாட்டு திட்டங்கள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# திருமலையில் ஆணொருவரின் சடலம் மீட்பு



(பதுர்தீன் சியானா)

திருகோணமலை குச்சவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஆணொருவரின் சடலமொன்று நேற்று (28) காலை மீட்கப்பட்டுள்ளதாக குச்சவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

கும்புறுபிட்டி தெற்கு பழைய ஆர்.டி.எஸ்.அலுவலக வீதிக்கு அருகில் சடலமொன்று காணப்பட்டதையடுத்து உறவினர்கள் பொலிஸாருக்கு தெரியப்படுத்தியுள்ளனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட சடலம் குச்சவெளி கும்புறுபிட்டி பகுதியைச் சேர்ந்த பாக்கியராசா பாலகுமார் (46வயது) எனவும் தெரியவருகின்றது.

இவர் நான்கு பிள்ளைகளின் தந்தை எனவும் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருவதாகவும் மரணத்துக்கான காரணம் இதுவரை தெரியவில்லை எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

குறித்த சடலம் சம்பவ இடத்தில் இருப்பதாகவும் திருகோணமலை நீதிமன்ற நீதவான் சம்பவ இடத்திற்கு வருகை தந்து பார்வையிட உள்ளதாகவும் மரணம் தொடர்பிலான விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் குச்சவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

# திருக்கோவில், பொத்துவில் வைத்தியசாலைகளுக்கு சுகாதார அமைச்சினால் அம்பியூலன்ஸ்கள் கையளிப்பு




(நூருல் ஹுதா உமர், எம்.என்.எம்.அப்ராஸ்)

திருக்கோவில் மற்றும் பொத்துவில் வைத்தியசாலைகளுக்கு அவசர தேவையாக இருந்த அம்பியூலன்ஸ்கள் நேற்று (28) கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர்களிடம் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஐ.எல்.எம்.றிபாஸ் கையளித்தார்.

மிக நீண்டதூரம் பயணம் செய்து நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்கும் இந்த வைத்தியசாலைகளில் நீண்டகாலமாக நிலவிவந்த இந்தப் பிரச்சினைக்கு தீர்வு வழங்கும் நோக்கில் சுகாதார அமைச்சு இந்த அம்பியூலன்ஸ்களை வழங்கியது.

இந்நிகழ்வில் திருக்கோவில் வைத்தியசாலை பொறுப்பு வைத்திய அதிகாரி ஏ.பி.மஸ்கூத், பொத்துவில் வைத்தியசாலை பொறுப்பு வைத்திய அதிகாரி டீ.எஸ்.ஆர்.டீ.ஆர்.றஜாப் ஆகியோர் கலந்துகொண்டு, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஐ.எல்.எம்.றிபாஸிடமிருந்து அம்பியூலன்ஸ்களை உத்தியோகபூர்வமாக பெற்றுக்கொண்டனர்.

இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையை சேர்ந்த முக்கிய நிர்வாகிகள், உயர் அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

கிழக்கு
செய்திகள்
eastthamilan@gmail.com

# கிண்ணியாவின் புதிய பிரதேச செயலாளராக கனி நியமனம்




(கிண்ணியா நிருபர்)

கிண்ணியாவின் புதிய பிரதேச செயலராக எம்.எச்.எம்.கனி நியமிக்கப்பட்டுள்ளார். கிண்ணியா பிரதேச செயலாளராக கடமையாற்றிய இலங்கை நிர்வாக சேவையைச் சேர்ந்த எம்.ஏ.அனஸ் வெருகல் பிரதேச செயலகத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

திருகோணமலை மாவட்டம் கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவின் கிண்ணியா பிரதேச செயலாளராக கடமைபுரிந்த இலங்கை நிர்வாக சேவையை சேர்ந்த எம்.எச்.எம்.கனி 27.07.2021 அன்று திடீரென வெருகல் பிரதேச செயலகத்திற்கு இடமாற்றப்பட்டு, சுமார் 7 மாதங்களாக கடமைபுரிந்த நிலையில், மீண்டும் கடந்த 26.02.2022ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் கிண்ணியா பிரதேச செயலாளராக நேற்று (28) தனது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

முன்னர் கிண்ணியா பிரதேச செயலாளராக கடமையாற்றிய இலங்கை நிர்வாக சேவையைச் சேர்ந்த எம்.ஏ.அனஸ் வெருகல் பிரதேச செயலகத்துக்குஇடமாற்றம் செய்யப்பட்டுள்ளதுடன், நேற்று (28) கடமைகளைப் பொறுப்பேற்றார்.

எம்.ஏ.அனஸ் திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி), கிண்ணியா பிரதேச செயலகத்தில் இரு தடவைகள் பிரதேச செயலாளராகவும் கடமையாற்றியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# பெண்களின் டிஜிட்டல் அறிவை மேம்படுத்தும் 'ஜனனி' வேலைத்திட்டம் கல்முனையில் முன்னெடுப்பு!




(கல்முனை நிருபர்)

பிரதேச மட்ட அரசியலில் ஈடுபடும் பெண் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் மற்றும் பெண் சிவில் சமூக செயற்பாட்டாளர்களின் டிஜிட்டல் அறிவினை மேம்படுத்துவதற்கான 'ஜனனி' திட்டத்தினை சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்குமான மக்கள் இயக்கம் (கபே அமைப்பு) தேர்ந்தெடுக்கப்பட்ட சில மாவட்டங்களில் முன்னெடுத்து வருகின்றது.

இந்நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் அம்பாறை மாவட்டத்திற்கான முதலாம் கட்ட நிகழ்வு சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கத்தின் (கபே) தேசிய நிறைவேற்றுப் பணிப்பாளர் அஹமட் மனாஸ் மக்கீன் தலைமையில் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் எஸ்.எல்.அஸீஸின் இணைப்பில் கல்முனையில் கடந்த சனிக்கிழமை (26) இடம்பெற்றது.

இந்நிகழ்வில் டிஜிட்டல் கல்வியறிவினை மேம்படுத்தும் வகையில் சமூக ஊடகங்களின் முக்கியத்துவம், தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு சமூக ஊடகங்களை எவ்வாறு பயன்படுத்துவது மற்றும் ஊடக கோட்பாடுகள், ஊடக சந்திப்புகளில் உரையாற்றுகின்ற விதம் மற்றும் தகவல் அறியும் சட்டம், இணையவழி வன்முறைகளை தொழில்நுட்ப ரீதியாக எவ்வாறு முகம் கொடுப்பது என்பது பற்றியும், இணையவழி வன்முறைகளுக்கு முகம் கொடுக்கின்றபோது, அவற்றுக்கு சட்ட ரீதியாக எவ்வாறு நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பில் வளவாளர்களினால் நிகழ்வில் கலந்து கொண்ட பிரதேச மட்ட அரசியலில் ஈடுபடும் பெண் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் மற்றும் பெண் சிவில் சமூக செயற்பாட்டாளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இதன்போது வளவாளராக அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் எம்.பி.எம்.சுபியான், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் ஊடக செயலாளர் சிரேஷ்ட ஊடகவியலாளர் ஜெ.யோகராஜ், ஊடகவியலாளர் ரிப்தி அலி ஆகியோர் கலந்துகொண்டனர்.

# சங்கத்திற்கு ஒரு வேலைத்திட்டம் அறிமுக நிகழ்வு




(பொத்துவில் நிருபர்)

அரசாங்கத்தின் கிராமத்திற்கு ஒரு வேலைத்திட்டத்திற்கு இணைவாக கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் பல்நோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு ஒரு வேலைத்திட்டத்தை அறிமுகம்செய்துள்ளது.

2022 அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் ஊடாக சங்கத்திற்கு ஒரு வேலை செயற்றிட்டத்தினை அறிமுகம் செய்துவைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (27) சாய்ந்தமருதில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருமான ஏ.எல்.எம்.அஸ்மி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அம்பாறை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பல்நோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

சுபீட்சத்தின் நோக்கு விசேட வேலைத் திட்டத்திற்கமைவாக அரச கட்டுப்பாட்டு விலையில் மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை வழங்குதல், கூட்டுறவுச் சங்கங்களின் நுகர்ச்சி பிரிவுகளை பலப்படுத்தும் அங்கமாக மத்திய அரசாங்கத்தின் கொள்வனவுத் திட்டத்தின் நடைமுறைகள் மற்றும் முகவராண்மையின் ஊடாக மக்களுக்கு நியாய விலையில் பொருட்களை வழங்குவது தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் முஸ்லிம் புத்திஜீவிகளுக்கும் இடையில் முக்கிய சந்திப்பு





(பாறுக் ஷிஹான்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் முஸ்லிம் புத்திஜீவிகளுக்கும் இடையிலான முக்கிய சந்திப்பு சுகாதார முன்னாள் இராஜாங்க அமைச்சர் எம்.ரி.ஹசன் அலியின் நிந்தவூர் இல்லத்தில் நேற்று முன்தினம் (27) மாலை இடம்பெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி, மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன், தேசிய பட்டியல் எம்.பி. த.கலையரசன் ஆகியோர் கூட்டமைப்பு சார்பாக பங்கெடுத்தனர்.

முஸ்லிம் புத்திஜீவிகள் சார்பாக பேராதனை பல்கலைக்கழக பேராசிரியர் ஏ.சர்ஜூன், தென்கிழக்குப் பல்கலைக்கழக பேராசிரியர்களான ரமீஸ் அப்துல்லா மற்றும் பௌசர் ஆகியோர் பங்கெடுத்தனர்.

மாலை 5.00 மணிமுதல் மாலை 6.30 மணிவரை இடம்பெற்ற இச்சந்திப்பில் தமிழ் - முஸ்லிம் உறவை பலப்படுத்துவது, இரு இனங்களுக்கும் இடையிலான பிரச்சினைகளுக்கு இணக்க தீர்வு எட்டுவது ஆகியன குறித்து ஆராயப்பட்டது. விரைவில் மீண்டும் சந்தித்து பேசுவது என தீர்மானித்து விடைபெற்றனர்.

# கிழக்கு மாகாணத்தில் 4000 ஆசிரியர் வெற்றிடங்கள்; அபிவிருத்தி உத்தியோகத்தர்களை நியமிக்க நடவடிக்கை

## கல்வியமைச்சின் செயலாளர் திஸாநாயக்க தெரிவிப்பு

(சர்ஜுன் லாபீர்)

கிழக்கில் ஆளணியின்படி சுமார் 24 ஆயிரம் ஆசிரியர்கள் தேவை. எனினும், தற்போது 20 ஆயிரம் ஆசிரியர்களே இருக்கின்றனர். சுமார் 4,000 ஆசிரியருக்கு தட்டுப்பாடு நிலவுகின்றதென கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யூ.ஜி.திஸாநாயக்க தெரிவித்தார்.

எனினும், அண்மையில் 3 ஆயிரம் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டனர். கிழக்குப் பாடசாலைகளில் பணியாற்றும் அனைத்து அபிவிருத்தி உத்தியோகத்தர்களையும் ஆசிரியர்களாக நியமிக்கவுள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சம்மாந்துறை வலயக்கல்விப் பணிமனையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மாகாண கல்விச் செயலாளர் மேலும் உரையாற்றுகையில், கல்விப் புலத்தில்



பல பிரச்சினைகள் உள்ளன. அவற்றுக்கு இன்னும் தீர்வு காணப்படவில்லை. சரியான ஆராய்ச்சிகள் இல்லாமையே அதற்குக் காரணம். பிரச்சினைகள் ஆராய்ச்சி செய்யப்பட வேண்டும். ஒரு பாடசாலையைத் திறந்தால் ஆயிரம் சிறைச்சாலைகளை மூடிவிடலாம் என்பார்கள். சுகாதாரத்துக்கு அடுத்தபடியாக கல்விக்கு பில்லியன் கணக்கில் செலவுசெய்கிறார்கள். ஆனால், கல்விக்காக செலவழிக்கும் பில்லியனுக்கு கைமாறாக நாம் என்ன உற்பத்தி செய்திருக்கிறோம்.

துரதிர்ஷ்டவசமாக கிழக்கு தொடர்ந்து 9ஆவது இடத்தில் இருந்துவருகிறது. கல்வியில் நல்லதொரு மாற்றத்தைக் கொண்டுவர அனைவரும் சிந்திக்கவேண்டும். திட்டங்கள் வகுத்து அதன்படி உழைக்கவேண்டும். அனைவருக்கும் கல்வி என்பது யுனிசெவ் தொடக்கம் பல நாடுகளுக்கும் பொதுவான வாசகமாகவுள்ளது. சிறந்த எதிர்காலத்திற்கான கல்வி என்பதே எனது வாசகம்.

கிழக்கில் பல மாணவர்கள் பாடசாலைக்கு செல்லாதுள்ளனர். மேசன், தச்சு போன்ற வேலைகளை செய்கின்றனர். அப்படியெனின், எங்கோ ஒரு தவறு நடந்திருக்கிறது. அதனை ஆராயவேண்டும். கிழக்கு மாகாணம் இன்னும் 3 வருடங்களில் 5ஆவது இடத்தை அடையவேண்டும் என்பதே எனது இலக்கு. அதற்காக நீங்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் - என்றார்.

# மட்டு. மண்ணை நேசித்து மறைந்தபின் உடலைத் தானம்செய்த பெருந்தகை

## அமரர் சாமித்தம்பி ஜெயராமின் 29ஆவது நினைவுநாள்



(கல்லடி நிருபர்)

வாழும்வரை மட்டக்களப்பு மண்ணை நேசித்தவரும், மரணித்த பின் உடலத்தை மட்டக்களப்பு மருத்துவக் கல்லூரி மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு ஈகம் செய்தவருமான அமரர் சாமித்தம்பி ஜெயராமின் 29ஆவது நினைவுநாள் கடந்த சனிக்கிழமை (26) மட்டக்களப்பு பொதுநூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் திட்டமிடல் பணிப்பாளராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற ஜெயராமின் நினைவஞ்சலிக் கூட்டம் மட்டக்களப்பு சிவில் சமூகத்தின் தலைவரும், கிழக்கு மாகாண சபையின் முன்னாள் செயலாளருமான எஸ்.மாமாங்கராஜா தலைமையில் இடம்பெற்றது.

குருமண்வெளியைப் பிறப்பிடமாகவும், மட்டக்களப்பு பார்வீதியை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த ஜெயராம் சேவையில் கொண்டிருந்த நேர்மை, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, சமூகசேவை, பிரம்மகுமாரிகள் அமைப்பின் ஆன்மீக ஈடுபாடு, கிழக்குப் பல்கலைக்கழகக் கவுன்சிலின் கடமைப்பாடு மற்றும் அனர்த்த காலங்களில் மக்களின் மீட்புக்காக அவர் கொண்டிருந்த முயற்சிகள் பற்றி நினைவுரையாற்றியோர் மீட்டனர்.

இதன்போது அமரர் ஜெயராமின் திருவுருவப் படத்திற்கு மட்டக்களப்பு மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் சசிகலா புண்ணியமூர்த்தி மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தியதுடன், ராஜினி புண்ணியமூர்த்தி மற்றும் ரஞ்சனி சிவஞானம் ஆகியோர் நினைவுச்சுடரினை ஏற்றிவைத்தனர்.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாநகர நகரபிதா தியாகராஜா சரவணபவன், மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரன், முன்னாள் அரசாங்க அதிபர்களான எஸ்.புண்ணியமூர்த்தி, மா.உதயகுமார், முன்னாள் ஓய்வுநிலைக் கணக்காளர் தேவகாந்தன், விவசாயக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் மாவட்ட பணிப்பாளர் ஆர்.விநாயகமூர்த்தி, நன்னீர் உயிரினவியல் திணைக்களத்தின் முன்னாள் உதவிப் பணிப்பாளர் எஸ்.தவபாலன், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மாவட்ட தலைவர் ரி.வசந்தராஜா ஆகியோர் கலந்துகொண்டனர்.

கிழக்கு
செய்திகள்
eastthamilan@gmail.com



அக்கரைப்பற்று - மட்டக்களப்பை இணைக்கும் காரைதீவு வீதியில் ஈரமான நெல் காயவைக்கப்படுவதை படத்தில் காணலாம். (நற்பிட்டிமுனை நிருபர்)

# சிரேஷ்ட ஊடகவியலாளர் கலாபூஷணம் மருதமுனை காதரின் 34 வருட சேவைக்காக பொற்கிழி கௌரவம்



(மருதமுனை மேலதிக நிருபர்)

அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனத்தின் தலைவரும், சிரேஷ்ட ஊடக வியலாளரும், ஊடக வித்தகருமான கவிஞர் கலாபூஷணம் பி.எம்.எம்.ஏ.காதர் கடந்த 34 வருடங்களாக ஊடகத்துறைக்கு ஆற்றிவரும் சேவையைப் பாராட்டி மருதமுனையில் பொன்னாடை போர்த்தி பொற்கிழி வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

மர்ஹூம் பழீல் மௌலானாவின் 9ஆவது ஆண்டு நிறைவையொட்டி பழீல் மௌலானா பவுண்டேஷன் ஏற்பாட்டு செய்திருந்த கௌரவிப்பு நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை (25) மருதமுனையில் பவுண்டேஷனின் தலைவரும், சிரேஷ்ட சட்டத்தரணியுமான எப்.எம்.அமீறுல் அன்ஸார் மௌலானாவின் இல்லத்தில் நடைபெற்றது.

பவுண்டேஷனின் தவிசாளரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான அஷ்ஷெய்க் எப்.எம். அஹமட் அன்ஸார் மௌலானா (நழீமி) தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி கலந்துகொண்டு கலாபூஷணம் பி.எம்.எம்.ஏ.காதருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். அத்துடன், அஷ்ஷெய்க் எப்.எம்.அஹமட் அன்ஸார் மௌலானா பொற்கிளி வழங்கி கௌரவித்தார்.

பழீல் மௌலானா பவுண்டேஷனின் செயலாளரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான எம்.எல்.எம்.ஜமால்தீன் நிகழ்வை நெறிப்படுத்தினார். இங்கு வர்த்தகர் ஏ.கே.எம்.நழீர், கல்முனை தபாலதிபர், பி.எம்.அஸ்கர், பவுண்டேஷனின் பொருளாளரும், ஆசிரிய ஆலோசகருமான கபீல் முஸ்தபா உள்ளிட்ட உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

# சாய்ந்தமருது ஸபா பள்ளிக்கு உபகரணங்கள் கையளிப்பு





(சாய்ந்தமருது நிருபர்)

கல்முனை ரஹ்மத் பவுண்டேஷன் ஏற்பாட்டில் சாய்ந்தமருது மஸ்ஜிதுஸ் ஸபா பள்ளிவாசலுக்கு ஜனாஸாக்களை குளிப்பாட்டும் கட்டில் மற்றும் ஒரு தொகுதி கோப்ரா மின் விளக்குகள் வழங்கப்பட்டுள்ளன.

பவுண்டேஷன் ஸ்தாபகத் தலைவரும் கல்முனை மாநகர சபையின் பிரதி முதல்வருமான ரஹ்மத் மன்சூரிடமிடம் விடுக்கப்பட்ட வேண்டுகோளையேற்று குறுகிய காலத்திற்குள் இவற்றை வழங்குவதற்கான நடவடிக்கையை அவர் மேற்கொண்டிருந்தார்.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை (27) மாலை, இப்பள்ளிவாசலுக்கு அவர் நேரடியாக விஜயம் செய்து பள்ளி நிர்வாகிகளிடம் இவற்றைக் கையளித்தார். இந்நிகழ்வில் பள்ளிவாசல் நிர்வாகத் தலைவர் அல்ஹாஜ் அப்துல் அஜீஸ் உள்ளிட்ட நிர்வாகிகளும் பவுண்டேஷன் பிரதிநிதிகளும் மற்றும் பல பிரமுகர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது ரஹ்மத் மன்சூரின் இவ்வாறான மனித நேயமிக்க உயரிய சேவைகளுக்காக குறித்த பள்ளிவாசல்களின் நிர்வாகிகளினால் நன்றி தெரிவிக்கப்பட்டது.

தமது பவுண்டேஷனின் இவ்வாறான சமூக சேவை வேலைத் திட்டங்களுக்கு அனுசரணை வழங்கி வருகின்ற வை.டபிள்யூ.எம்.ஏ. (YWMA) அமைப்புக்கு நன்றியும் பாராட்டும் தெரிவித்துக் கொள்வதாக ரஹ்மத் மன்சூர் இதன்போது குறிப்பிட்டார்.

அதேவேளை, மிக விரைவில் இப்பள்ளி வாசலுக்கு ஜனாஸாக்களை சுமந்துகொண்டு செல்லும் சந்தூக் ஒன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

ரஹ்மத் பவுண்டேஷன் ஏற்பாட்டில் கல்முனை, சாய்ந்தமருது, மருதமுனை, சம்மாந்துறை, நிந்தவூர், ஒலுவில், சாளம்பைக்கேணி, மத்திய முகாம் போன்ற பிரதேசங்களுக்கும் ஜனாஸா நலன்புரிக்காக இவ்வாறான உதவிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவைத் தவிர இந்த அமைப்பினால் அம்பாறை மாவட்டத்தின் பல பிரதேசங்களிலும் குடிநீர் வசதிகள் உட்பட பல்வேறு மனிதநேய சமூகப்பணிகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

# வீட்டுச்சூழலில் பிள்ளைகள் விரும்பி கல்விகற்கும் நிலைமை உருவாக வேண்டும்

தென்கிழக்குப் பல்கலை உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர்







(மாளிகைக்காடு நிருபர்)

வீட்டுச் சூழலில் பிள்ளைகள் விரும்பி கல்விகற்கும் நிலைமையினை பெற்றோர்கள் உருவாக்கிக் கொடுத்தல் வேண்டும். பெற்றோர்கள் வீட்டில் தொலைக்காட்சி உள்ளிட்ட இணையதள பாவனையினை கட்டுப்படுத்துதல் வேண்டும் - என தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் கலாநிதி றமீஸ் அபூபக்கர் தெரிவித்தார்.

சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்தியாலத்தின் "கலர்ஸ் ஒவ் ஸ்கொலர்ஸ்" ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை - 2020இல் சித்தியடைந்த மாணவர்களை கௌரவக்கும் நிகழ்வு லீ மெரிடியன் மண்டபதில் அதிபர் யூ.எல்.நஸார் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் கலாநிதி றமீஸ் அபூபக்கர் கலந்துகொண்டார். இதில் கௌரவ அதிதிகளாக கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.புவேனந்திரன், கல்முனை கல்வி மாவட்ட பிரதம பொறியியலாளர் ஏ.எம்.ஸாஹிர், கணக்காளர் வை.ஹாபிவுல்லாஹ், சாய்ந்தமருது கோட்டக்கல்விப் பணிப்பாளர் எம்.என்.அப்துல் மலீக், அல்-பஹ்ரியா தேசிய பாடசாலை அதிபர் எம்.எஸ்.எம்.பைஷால் மற்றும் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், கல்விமான்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இதில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து அவர் உரையாற்றுகையில், மாணவர்களுக்கு மொழிக் கல்வி சிங்களம், ஆங்கிலம் முறையாக கற்றுக்கொடுப்பது அவசியமாகும். இதனை எல்லோரும் பேசுகின்றனர். ஆனால், என் போன்றவர்கள் அனுபவ ரீதியாக உணர்ந்து பேசுகின்றோம். மொழிக் கல்வியினால் கல்வியில் உச்சம் தொடும் அளவுக்கு எங்களை மொழிக் கல்வி உயர்த்தியுள்ளது. மாணவர்களை ஆளுமையுள்ள, ஒழுக்க விழுமியங்களை பேணக்கூடிய, தலைமைத்துவப் பண்புகளை வளர்க்கக்கூடிய செயற்பாடுகளில் ஈடுபடுத்த வேண்டும். மாணவர்களின் இன்றைய நிகழ்ச்சிகள் எங்களது கடந்தகால பாடசாலை காலங்களுக்கு கொண்டு சென்றது - என்றும் தெரிவித்தார்.

மேலும் நிகழ்வில் அல்ஹிலால் வித்தியாலய அதிபர் யூ.எல். நஸாரினால் Hilal Crescent விழா மலர் வெளியிட்டு வைக்கப்பட்டது. மலரின் முதற் பிரதி அதிபரினால் உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கருக்கு வழங்கிவைத்ததுடன், நிகழ்வில் கலந்துகொண்ட அதிதிகளுக்கும் வழங்'கப்பட்டது. ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை 2020இல் கல்முனை வலய மட்டத்தில் முதலாம் இடத்தையும், அம்பாறை மாவட்ட மட்டத்தில் இரண்டாம் இடத்தையும் பெற்ற ஹனா இப்பத் (190 புள்ளி) பெற்ற மாணவிக்கு உபவேந்தர் றமீஸ் அபூபக்கர் நினைவுச்சின்னம் வழங்கி கௌரவித்தார்.

இதைத் தொடர்ந்து முதற்றடவையாக புலமைப்பரிசில் மாணவர்கள் தங்களுக்கு கற்றுத்தந்த ஆசான்களுக்கு பரிசு வழங்கி கௌரவித்தனர். புலமைப்பரிசில் பரீட்சை 2020இல் சித்தியடைந்த 44 மாணவ, மாணவிகளுக்கு நிகழ்வின் அதிதிகளால் நினைவுச் சின்னம், பதக்கம் மற்றும் சான்றிதழ் என்பன வழங்கி கௌரவிக்கப்பட்டது. இதில் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

# மட்டக்களப்பில் மூன்று வருடங்களின் பின்னர் மாபெரும் சைக்கிளோட்டப் போட்டி





(கல்லடி நிருபர்)

வடக்கு - கிழக்கு சமர் என்ற தொனிப்பொருளில் மட்டக்களப்பு சைக்கிள் சங்கத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட மாபெரும் சைக்கிளோட்டப் போட்டி நேற்று முன்தினம் (27) மட்டக்களப்பு திருமலை வீதியிலுள்ள ஊறணியில் இடம்பெற்றது.

இந்நிகழ்வு முன்னாள் சைக்கிள் ஓட்டப்போட்டி வீரர் அமரர் செல்வராஜாவின் நினைவாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஐ.பிறேம்நாத் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்குப் பிரதம அதிதிகளாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும், மாவட்ட செயலாளருமான கணபதிப்பிள்ளை கருணாகரன் மற்றும் மட்டக்களப்பு மாநகர மேயர் தியாகராசா சரவணபவன் ஆகியோரும், கௌரவ அதிதிகளாக மட்டக்களப்பு மாவட்டப் பொலிஸ் அத்தியட்சகர் குமாரஸ்ரீ, மட்டக்களப்பு மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி வி.ஈஸ்வரன், கல்கி அறக்கட்டளை ஸ்தாபகர் என்.நர்மதன் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட சமூகப்பற்றாளர் வி.லவக்குமார் ஆகியோரும், சிறப்பு அதிதியாக சுவீஸைச் சேர்ந்த நடேசு உதயகுமாரும் கலந்து சிறப்பித்தனர்.



திருமலை வீதியிலுள்ள பஸ் தரிப்பிடத்திற்கு முன்னால் ஆரம்பமான சைக்கிள் ஓட்டமானது கொழும்பு திருமலை வீதி வழியாக கல்லடி மணிக்கூட்டு கோபுர வளைவு ஊடாக வாழைச்சேனை சுற்றுவளைவினை அடைந்து, மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட இடத்தினை சென்றடைந்தது. இச்சைக்கிள் ஓட்டமானது 102 கிலோமீற்றரைக் கொண்டதாக அமைந்தது.

இதில் முதலாம் இடத்தினை பி.சதீஸ்காந்தும், இரண்டாம் இடத்தினை பாலரசனும் (முல்லைத்தீவு), மூன்றாம் இடத்தினை ரி.நிரல்சனும், நான்காம் இடத்தினை ஐ.பிறேம்நாத்தும், ஐந்தாம் இடத்தினை வி.பார்த்தீபனும் பெற்றுக்கொண்டனர்.

உலக செய்திகள்

## அடுத்த 24 மணிநேரம் முக்கியமானது

# உக்ரைன் - ரஷ்யா பேச்சு: முடிவுக்கு வருமா போர்?



### ''போரை நிறுத்தி ரஷ்யா முழுமையாக வெளியேற வேண்டும்'' - உக்ரைன் வலியுறுத்து

### அணுஆயுதப் போருக்குத் தயாராகும் ரஷ்யா; நேட்டோ - சர்வதேச நாடுகள் எதிர்ப்பு

உக்ரைன் - ரஷ்யா இடையேயான போர் இன்று ஆறாவது நாளாகவும் நீடித்துள்ளது. இந்நிலையில், உக்ரைன் - ரஷ்யா இடையேயான போர் நிறுத்த பேச்சுவார்த்தை நேற்று பெலாரஸில் நடைபெற்றது.

இதன்போது ''உடனடியாக ரஷ்யா போரை நிறுத்தவேண்டும், அதேபோல் ரஷ்யப் படைகள் உக்ரைனைவிட்டு முழுமையாக வெளியேற வேண்டும்'' என உக்ரைன் வலியுறுத்தியது.

ஐ.நா. மற்றும் சர்வதேச நாடுகளின் எதிர்ப்பையும் மீறி உக்ரைன் மீது கடந்த 24ஆம் திகதி ரஷ்யா போர் தொடுத்தது. இன்றுடன் ஆறு நாட்களாக இரு நாடுகளுக்கிடையேயான மோதல் தீவிரமடைந்துள்ளது. சுமார் 5 நாட்களுக்குள் உக்ரைன் பேரழிவை சந்தித்துள்ளது.

இந்நிலையில், போரை முடிவுக்குக் கொண்டு வர இருநாடுகளும் பேச்சுவார்த்தைக்கு ஒப்புக் கொண்டுள்ளன. உக்ரைனுக்குள் புகுந்து சில நகரங்களை கைப்பற்றியுள்ள ரஷ்யா, பேச்சுவார்த்தைக்கு தயாராக இருப்பதாக அழைப்பு விடுத்திருந்தது.

பேச்சுவார்த்தைக்கு தாங்களும் தயாராக இருப்பதாகக் கூறிய உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஸெலென்ஸ்கி, ஆனால், ரஷ்யா சொல்வதுபோல் பெலாரஸில் பேச்சு நடத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது என தெரிவித்திருந்தார். இதனிடையே ரஷ்யாவுக்கு எதிராக மேற்கு நாடுகளும், நேட்டோ படைகளும் தீவிர நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகக் கூறிய புட்டின், அணுஆயுத தடுப்புப் படைகளை உச்சபட்ச தயார் நிலையில் வைக்க தனது இராணுவத்திற்கு உத்தரவிட்டிருந்தார். இதனையடுத்து, பெலாரஸில் பேச்சு நடத்த உக்ரைன் ஒப்புக்கொண்டது.

இந்நிலையில், இரு நாடுகள் இடையேயான பேச்சு நேற்று பெலாஸ் எல்லை பகுதியில் நடைபெற்றது. எனினும் பேச்சுவார்த்தையில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை.

பேச்சுவார்த்தைக்காக ஏற்பாடுகளை பெலாரஸ் அரசு மேற்கொண்டுள்ளது. உக்ரைன் - பெலாரஸ் எல்லையில் செர்னோபில் அருகே பிரிப்யத் நதி பகுதியில் பேச்சு நடைபெற்றது. உலகளவில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள உக்ரைன் - ரஷ்யா போர் இந்தப் பேச்சுவார்த்தை மூலம் முடிவுக்கு வருமா என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

போர்நிறுத்த பேச்சுவார்த்தைக்கிடையே உக்ரைனின் இரண்டாவது பெரிய நகரான கார்கிவ் நகரை கைப்பற்றும் நோக்குடன் ரஷ்யப் படைகள் நேற்று மேற்கொண்ட ரொக்கெட் தாக்குதலில் நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

**பெலாரஸும் உக்ரைன் மீது தாக்குதல் நடத்தக்கூடும்**

ரஷ்யாவுடன் இணைந்து பெலாரஸும் உக்ரைன் மீது தாக்குதல் நடத்தக்கூடும் என அமெரிக்க உளவுத்துறை நிறுவனம் தகவல் தெரிவித்துள்ளது.

சோவியத் ஒன்றியத்தில் உறுப்பினராக இருந்த பெலாரஸ், உக்ரைன் - ரஷ்யா இடையேயான விவகாரத்தில் ரஷ்யாவுக்கு ஆதரவான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது.

பெலாரஸ், போருக்கு முன் ரஷ்யப் படைகள் தங்கள் நாட்டில் தங்கிக்கொள்ள அடைக்கலமும் கொடுத்திருந்தது. இந்நிலையில், உக்ரைனுக்கு எதிரான போரில் ரஷ்யாவுக்கு நேரடியாக ஆதரவளிக்கும் வகையில் பெலாரஸ் தனது படையை களமிறங்கக் கூடும் என தகவல் வெளியாகியுள்ளது.

போரை முடிவுக்குக் கொண்டுவருவது தொடர்பாக ரஷ்யா - உக்ரைன் இடையேயான பேச்சுவார்த்தை நேற்று பெலாரஸில் நடைபெற்ற நிலையில், அந்த பேச்சுவார்த்தையில் வரும் முடிவுகளை பொறுத்து பெலாரஸ் உக்ரைனுக்குள் படைகளை களமிறக்கும் என தெரிவிக்கப்படுகிறது.

**மக்கள் சுதந்திரமாக வெளியேறலாம்**

ரஷ்யா - உக்ரைன் போர்நிறுத்தப் பேச்சுவார்த்தை நடைபெற்ற நிலையில், உக்ரைன் மீதான தாக்குதலை ரஷ்யா நேற்று குறைத்துக்கொண்டிருந்தது. போர் விமானத் தாக்குதலுக்கான எச்சரிக்கை ஒலி பெரும்பாலான இடங்களில் நிறுத்தப்பட்டன.

உக்ரைனில் வான்வழித் தாக்குதல் நடத்துவதில் ரஷ்யா வலிமையாக உள்ளதாகவும், கீவ் நகரைவிட்டுப் பொதுமக்கள் சுதந்திரமாக வெளியேறலாம் என்றும் ரஷ்ய இராணுவம் அறிவித்துள்ளது. கீவ்- வாசில்கோவ் வீதி வழியாக மக்கள் வெளியேறலாம் என்று தெரிவிக்கப்பட்டது. இதேவேளை, நேற்று கீவ்வில் ஊரடங்கு கட்டுப்பாடுகள் விலக்கிக்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

வான்வழித் தாக்குதல் வலிமையைக் கூறுவதும், பொதுமக்களை வெளியேறச் சொல்வதும் கீவ் நகரின் மீது ரஷ்ய இராணுவம் மீண்டும் மிகப்பெரும் அளவில் விமானங்கள், ஏவுகணைகள் மூலம் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டுள்ளதைக் காட்டுவதாக அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர்.

**ஆயுத உதவி வழங்க நேட்டோ முடிவு**

உக்ரைனுக்கு ஏவுகணை தடுப்பு ஆயுதங்கள், இராணுவ டாங்கி எதிர்ப்பு ஆயுதங்கள் மற்றும் நிதி உதவி வழங்கப்படும் என்று நேட்டோ கூட்டமைப்பு அறிவித்திருந்தது.

**ரஷ்யா எச்சரிக்கை**

உக்ரைனுக்கு ஆயுதங்கள் மற்றும் நிதி உதவி வழங்க முன் வந்திருப்பது மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என்று ரஷ்யா எச்சரிக்கை விடுத்துள்ளது.

**இராணுவ அனுபவமுள்ள கைதிகள் விடுவிக்கப்படுவர்**

''உக்ரைன் சிறையிலுள்ள கைதிகளுக்கு இராணுவ அனுபவம் இருந்தால் அவர்களை உடனே விடுதலை செய்ய தயார்'' என்றும் ''விடுதலை செய்யப்படும் கைதிகள் ரஷ்யாவுக்கு எதிரான போரில் ஈடுபடவேண்டும்'' என்றும் உக்ரைன் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே ரஷ்யப் படைகளை எதிர்த்துப் போராட உக்ரைன் பொதுமக்களுக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டு, போருக்குத் தயார் செய்யப்பட்டுவரும் நிலையில், போரில் ஈடுபட உக்ரைன் சிறையிலுள்ள இராணுவ அனுபவமுள்ள கைதிகள் விடுதலை செய்யப்படுவர் என்று உக்ரைன் ஜனாதிபதி அறிவித்துள்ளார்.





**ஐ.நா. பொதுச் சபையின் அவசர சிறப்புக் கூட்டம்**

உக்ரைன் மீதான ரஷ்யாவின் தாக்குதல் நீடித்துவரும் நிலையில், இதுகுறித்து விவாதிக்க ஐ.நா. பொதுச் சபையின் நேற்று அவசரக் கூட்டம் நடைபெற்றது.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கைகளை கண்டித்து, இரண்டு நாட்களுக்கு முன் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை ரஷ்யா தனது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி தோற்கடித்தது. இந்நிலையில், ஐ.நா. பொதுச் சபையின் அவசர சிறப்புக் கூட்டத்தை கூட்டுவது குறித்து முடிவெடுக்க பாதுகாப்புச் சபை நேற்றுமுன்தினம் மீண்டும் கூடியது.

15 உறுப்பினர்களைக்கொண்ட பாதுகாப்புச் சபையில் 11 நாடுகள் ஐ.நா. சபையைக் கூட்ட ஆதரவு தெரிவித்தன. ரஷ்யா எதிர்ப்புத் தெரிவித்தபோதும், நடைமுறை விதிகளின்படி தனது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்த முடியாது என்பது குறிப்பிடத்தக்கது. இந்தியா, சீனா, ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய நாடுகள் வாக்கெடுப்பில் பங்கேற்காமல் நடுநிலை வகித்தன.

தீர்மானம் நிறைவேற்றப்பட்டதையடுத்து, நேற்று நடைபெறும் அவசர சிறப்புக் கூட்டத்தில் பங்கேற்க, 193 உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளுக்கு ஐ.நா. பொதுச் செயலாளர் அழைப்பு விடுத்திருந்தார்.

ஐ.நா. சபையைக் கூட்டும் தீர்மானத்திற்கு பிரித்தானியா, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் வரவேற்புத் தெரிவித்துள்ளன. 1950ஆம் ஆண்டுக்குப் பின்னர் இதுபோன்ற சிறப்புக் கூட்டம் நடைபெறுவது 11ஆவது முறையாகும்.

இதற்கிடையே உக்ரைனுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் அதன்மீது தாக்குதல் நடத்திவரும் ரஷ்யாவின் விமானங்கள் பறப்பதற்கு 17 நாடுகள் அதிரடித் தடை விதித்துள்ளன.

நாளுக்கு நாள் உலக நாடுகள் ரஷ்யா மீது கொடுக்கும் நெருக்கடிகள் அதிகரித்து வருகின்றன. ரஷ்யாவின் ஆதிக்கப் போக்கை கண்டிக்கும் விதமாக அந்நாட்டு அரசு



ஊடகங்களின் கணக்குகளை சமூக வலைத்தளமான பேஸ்புக் முடக்கியுள்ளது. ரஷ்யா மீது தொழில்நுட்ப ரீதியில் பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்படும் என்று அமெரிக்கா எச்சரித்துள்ளது. இவ்வாறு சர்வதேச அளவில் ரஷ்யாவுக்கு சிறிது சிறிதாக நெருக்கடி கொடுக்கப்பட்டு வருகிறது.

**அணுஆயுதங்களை தயார் நிலையில் வையுங்கள்**

''சர்வதேச நாடுகள் பலவகையில் அழுத்தம் கொடுத்தும், ரஷ்யா தனது போர் யுக்திகளை உக்ரைனுக்கு எதிராக தீவிரப்படுத்தி வருகிறது. அதன் ஒருபகுதியாக ரஷ்ய ஜனாதிபதி புட்டின், 'மேற்கத்தேய நாடுகள் நம்மை விரோதிகளாகக் கருதுகின்றன. பொருளாதார ரீதியாக நிறைய தடைகள் நம் மீது விதிக்கப்பட்டுள்ளன. இவை சட்டவிரோதமானவை. நேட்டோ நாடுகளும் நம் நாட்டுக்கு எதிராக அவதூறான கருத்துகளைப் பரப்பி வருகின்றன. அதனால், பாதுகாப்பு அமைச்சர் அணுஆயுத தடுப்புப் படைகளை தயார் நிலையில் வைக்குமாறு நான் உத்தரவிடுகிறேன்'' என்று கூறினார். இதற்கு ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர் அழுத்தமாக சரி என்றார். இந்த உத்தரவும், இசைவும் உலகம் முழுவதும் அதிர்ச்சி அலைகளைக் கடத்தியுள்ளது.

**நேட்டோ கடும் எச்சரிக்கை**

உலகிலேயே இரண்டாவது பெரிய அணுஆயுத பலம் கொண்ட ரஷ்யாவின் இந்த முடிவு, உலகின் பல நாடுகளாலும், சர்வதேச அமைப்புகளாலும் விமர்சிக்கப்பட்டு வருகிறது. மேலும், புட்டினின் அறிவிப்புக்கு நேட்டோ கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக நேட்டோ வெளியிட்ட அறிவிப்பில்,

''அணு சக்தி படைகள் தயார் நிலையில் இருக்கும்படி புட்டின் அறிவித்திருப்பது, மிகவும் ஆபத்தான விடயமாகும். பொறுப்பற்ற முறையில், உலகை அச்சுறுத்தும் வகையில் ரஷ்யா தன்னால் முடிந்ததைச் செய்து வருகிறது'' என்று தெரிவித்துள்ளது.

இந்நிலையில், அமெரிக்கா தனது ஏவுகணை படைகளை விழிப்புடன் இருக்கும்படி கேட்டுக் கொண்டுள்ளது. அமெரிக்காவின் வியூக ஏவுகணைப் படையில், அணுஆயுதங்கள் மட்டுமன்றி ஒலியின் வேகத்தை விட பத்து மடங்கு வேகமாக தாக்கும் திறன்கொண்ட ஹைப்பர்சோனிக் ஏவுகணைகளும் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

**அடுத்த 24 மணிநேரம் முக்கியமானது**

இதற்கிடையே நேற்றுமுன்தினம் இரவு உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கி, பிரித்தானிய பிரதமர் பொரிஸ் ஜோன்சனிடம் பேசுகையில், ''அடுத்த 24 மணிநேரம் உக்ரைன் நாட்டிற்கு மிகவும் முக்கியமான காலமாக இருக்கும்'' என்று கூறியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. அணுஆயுத படையை தயார் நிலையில் வைத்திருக்க ஜனாதிபதி புட்டின் உத்தரவிட்ட நிலையில், ரஷ்யாவுக்கு



ஐ.நா, நேட்டோ, சர்வதேச நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன. இதற்கிடையே அடுத்த 24 மணிநேரம் குறித்து உக்ரைன் ஜனாதிபதி, இங்கிலாந்து ஜனாதிபதியிடம் பேசியிருப்பது பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

**வீரர்களின் இழப்பை ஒப்புக்கொண்ட ரஷ்யா**

உக்ரைனுக்கு எதிரான போரில் தங்கள் தரப்பிலும் உயிர்ச்சேதம் ஏற்பட்டுள்ளதாக ரஷ்யா முதன்முறையாக ஒப்புக்கொண்டுள்ளது.

இதுகுறித்து ரஷ்ய இராணுவ செய்தித் தொடர்பாளர் இகோர் கொனாஷென்கோவ், போர்க் களத்தில் ரஷ்ய வீரர்கள் தைரியத்துடனும், வீரத்துடனும் செயற்பட்டு வருகின்றனர். இருப்பினும், துரதர்ஷ்டவசமாக தங்கள் வீரர்களும் போரில் உயிரிழந்திருக்கின்றனர் என தெவித்துள்ளார்.

மேலும், போரின்போது தங்களிடம் சரணடையும் உக்ரைனிய போர்க்கைதிகள் மீண்டும் குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்படுவர் எனவும் அவர் தெரிவித்தார்.

**5,300 ரஷ்ய இராணுவச் சிப்பாய்கள் பலி**

உக்ரைன் - ரஷ்யா இடையிலான போரில் ரஷ்ய இராணுவத்தினர் 5,300 பேர் வரை உயிரிழந்திருப்பதாக உக்ரைன் இராணுவம் தெரிவித்துள்ளது.

ரஷ்யாவின் 29 போர் விமானங்கள், 29 ஹெலிகொப்டர்களையும் உக்ரைன் சுட்டு வீழ்த்தியிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ரஷ்யாவின் 191 இலகு ரக பீரங்கிகள், 74 கன பீரங்கிகள், 816 கவச போர் வாகனங்களும் 2 போர்க் கப்பல்களும் அழிக்கப்பட்டிருப்பட்டிருப்பதாக உக்ரைன் இராணுவம் தெரிவித்துள்ளது.

**352 அப்பாவி மக்கள் பலி**

கடந்த 24ஆம் திகதி தொடங்கிய ரஷ்யா - உக்ரைன் போர் இன்று 6ஆவது நாளாக தொடர்ந்துகொண்டிருக்கிறது. ரஷ்யாவுடனான போரில் உக்ரைன் பொதுமக்கள் 352 பேர் இதுவரை உயிரிழந்துள்ளதாக உக்ரைன் அரசு தெரிவித்துள்ளது.

ரஷ்யா தாக்குதலில் 14 குழந்தைகள் உட்பட 352 பேர் உயிரிழந்துள்ளதாகவும் 116 குழந்தைகள் உட்பட 1,684 பேர் படுகாயமடைந்துள்ளதாகவும் அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, உக்ரைனிலிருந்து இதுவரை (நேற்றுவரை) 3.86 இலட்சம் பேர் அண்டை நாடுகளில் அகதிகளாக தஞ்சம் புகுந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

**சர்வதேச நீதிமன்றில் வழக்கு**

இதையடுத்து சர்வதேச போர் விதிகளை மீறி உக்ரைன் மீது போர் தொடுத்து அப்பாவி பொதுமக்கள் உயிரை பலி வாங்கும் ரஷ்யா பதிலளிக்கவேண்டுமென சர்வதேச நீதிமன்றத்தில் உக்ரைன் வழக்கு தொடுத்துள்ளது.

**இந்திய மாணவர்கள் மீது உக்ரைன் படைத் தாக்குதல்**

இதேவேளை, உக்ரைனிலிருந்து வெளியேறும் இந்திய மாணவர்களை போலாந்து எல்லையில் உக்ரைன் இராணுவம் மற்றும் பொலிஸார் அடித்து துன்புறுத்தும் காட்சி வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

உக்ரைனில் தாக்குதல் நடக்கும் பகுதியிலிருந்து ருமேனியா, ஹங்கேரி எல்லைகளுக்கு இந்திய மாணவர்களை வரவழைத்து இந்திய மத்திய அரசு மீட்டு வருகிறது. போக்குவரத்து வசதி இல்லை என்ற போதும் ஆயிரக்கணக்காண மாணவர்கள் நடந்தே எல்லைக்கு வந்தடையும் சூழல் உள்ளது. இந்நிலையில், உக்ரைனிலிருந்து வெளியேறும் இந்திய மாணவர்களை போலாந்து எல்லையில் உக்ரைன் இராணுவம் மற்றும் பொலிஸாரும் தாக்கும் காட்சிகள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

**உலகின் மிகப் பெரிய சரக்கு விமானத்தை அழித்த ரஷ்யா**

உலகின் மிகப்பெரிய விமானமாக அறியப் பட்ட தங்கள் நாட்டு சரக்கு விமானத்தை ரஷ்யப் படை தாக்கி அழித்துள்ளதாக உக்ரைன் வேதனை தெரிவித்துள்ளது.

தலைநகர் கிவ் அருகே Hostomel விமான நிலையத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த சரக்கு விமானத்தை ரஷ்யப் படை தகர்த்து அழித்துவிட்டதாக உக்ரைன் தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் தமது ட்விட்டர் பதிவில்,

''உலகின் மிகப்பெரிய சரக்கு விமானமாக அறியப்பட்ட உக்ரைனிலேயே தயாரிக்கப்பட்ட AN-225 மிரியா சரக்கு விமானம் ரஷ்ய படையால் தாக்கப்பட்டது. விமானத்தை அழித்திருந்தாலும், வலுவான, சுதந்திரமான மற்றும் ஜனநாயக உக்ரைன் அரசு உருவாவதை அவர்களால் ஒருபோதும் அழிக்க முடியாது'' என பதிவிட்டுள்ளார்.

**அகற்றப்படும் பெயர்ப் பலகைகள்**

உக்ரைனில் நுழையும் ரஷ்யப் படையினரை குழப்ப, வீதியோரம் இருக்கும் பெயர்ப் பலகைகளை அப்புறப்படுத்தும் பணிகளில், ஒரு கட்டுமான நிறுவனம் ஈடுபட்டு வருகிறது. ரஷ்ய இராணுவத்தினருக்கு மோசமான தகவல் தொடர்புள்ளதாகவும், இந்த பெயர்ப் பலகைகள் இல்லாமல், அவர்களால் வழி அறிந்து செல்ல முடியாது என்றும் அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

**எலான் மஸ்க் உதவி**

போர் நடக்கும் உக்ரைனில், இணைய சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில், உக்ரைன் அமைச்சர் மிகைலோ பெடோரோவின் வேண்டுகோளை ஏற்று, உலகின் மிகப்பெரிய பணக்காரரான எலான் மஸ்க், தன், ஸ்பேஸ் எக்ஸ் நிறுவன செயற்கைக்கோளான, ஸ்டார்லின்க் வாயிலாக, உக்ரைனுக்கு இணைய சேவைகளை வழங்கியுள்ளார்.

**பெற்றோல் குண்டுகளை தயாரிக்கும் பொதுமக்கள்**

இந்நிலையில் போரில் மக்கள் பங்கேற்கலாம் என்று உக்ரைன் அழைப்பு விடுத்ததையடுத்து ஏராளமான குடிமக்கள் தங்கள் பெயர்களை பதிவு செய்துகொண்டு துப்பாக்கிசூடும் பயிற்சி பெற்று வருகின்றனர். இந்நிலையில், ரஷ்ய படைகளுக்கு எதிரான தாக்குதல்களுக்காக அந்நாட்டு மக்கள் பெற்றோல் குண்டுகளை ஆயிரக்கணக்கில் தயாரித்து வருகின்றனர்.

பெற்றோல், டீசல் உள்ளிட்ட எரிபொருட்களுடன் தர்மகோல் துகள்களை கலந்து அவர்கள் பெற்றோல் வெடிகுண்டுகளை தயாரித்து வருகின்றனர்.

(15ஆம் பக்கம் பார்க்க...)

# உக்ரைன் மீதான ரஷ்ய தாக்குதலைக் கண்டித்து பல்வேறு நாடுகளில் ஆர்ப்பாட்டம்
















உக்ரைன் மீது போர் தொடுத்துள்ள ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினைக் கண்டித்து உலகின் பல்வேறு பகுதிகளில் இலட்சக்கணக்கான மக்கள் பேரணி நடத்தி வருகின்றனர்.

**ஜேர்மனியில் பிரம்மாண்ட பேரணி**

உக்ரைன் மீதான ரஷ்யப் படையெடுப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஜேர்மனியில் மூன்று இலட்சத்திற்கும் அதிகமானோர் பங்கேற்ற பிரம்மாண்ட பேரணி நடைபெற்றது.

பேர்லினில் நடந்த பேரணியில் பங்கேற்றவர்கள் போரை நிறுத்துமாறும், உக்ரைனுக்கு தாங்கள் துணைநிற்பதாகவும் பதாகைகளை ஏந்தியிருந்தனர். ரஷ்ய தூதரக வாயிலில் குவிந்த அவர்கள், உக்ரைனுக்கு எதிரான படையெடுப்பை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்று வலியுறுத்தினர்.

பிரிட்டன் தலைநகர் லண்டன் உள்ளிட்ட இடங்களில் போராட்டங்கள் நடைபெற்றன.

ஸ்கொட்லாந்தில் நடைபெற்ற பேரணியில் திரளானோர் பங்கேற்றனர். அப்போது அவர்கள் போர் நிறுத்தப்பட வேண்டும் என்று கோஷங்களை எழுப்பினர்.

இதேவேளை, ஸ்பெயின் தலைநகர் மேட்ரிட்டில் நடந்த பேரணியில் ஏராளமான பொதுமக்கள் பங்கேற்றனர். போரை நிறுத்த வலியுறுத்தி பதாகைகளை ஏந்தியிருந்த பொதுமக்கள், ரஷ்ய ஜனாதிததி புட்டினைக் கண்டித்து முழக்கங்கள் எழுப்பினர்.

போரை முடிவுக்குக் கொண்டுவரக் கோரி, வடக்கு ஈராக்கில் வசிக்கும் உக்ரேனியர்கள் எர்பிலிலுள்ள ஐக்கிய நாடுகளின் அலுவலக முன்றலில் போர் எதிர்ப்புப் பேரணியை நடத்தினர்.

இதேபோல் ஜப்பான், அவுஸ்திரேலியா, லிதுவேனியா, தென்கொரியா, துருக்கி ஆகிய நாடுகளில் பல்லாயிரக்கணக்கில் மக்கள் பேரணி நடத்தினர்.

இதேவேளை, உக்ரைன் மீதான தாக்குதலை நிறுத்த போரி தலைநகர் மொஸ்கோ உட்பட ரஷ்யாவின் 58 நகரங்களில் போராட்டங்கள் நடைபெற்றதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. மொஸ்கோவில் திரண்ட போராட்டக்காரர்கள் போருக்கு எதிரான முழக்கங்களை எழுப்பினர். அவர்களை பொலிஸார் தடுத்துநிறுத்தி கைதுசெய்துள்ளனர்.

## உக்ரைனில்....
## ‘தெர்மோபரிக்’வெடிகுண்டுகளை பயன்படுத்த ரஷ்யா திட்டம்





உக்ரைனுக்குள் படைகளை நகர்த்திவரும் ரஷ்யா, வெடிகுண்டுகளுக்கெல்லாம் தந்தை எனக் கருதப்படும் சக்தி அதிகரிக்கப்பட்ட தெர்மோபரிக் (thermobaric) என்னும் வெப்ப அழுத்த வெடிகுண்டுகளை பயன்படுத்த வாய்ப்பிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

அணுகுண்டுக்கு அடுத்தபடியாக மிக மோசமான அழிவை ஏற்படுத்தக்கூடியவை இந்த வெப்ப அழுத்த வெடிகுண்டுகள் என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

வெடிகுண்டுக்குள் உள்ள அமிலம் மற்றும் எரிபொருள் கலவை வெடித்தால் சூப்பர் சோனிக் அலை உருவாகி மனிதர்கள், கட்டடம் என எல்லாவற்றையும் அழிக்கும் என தெரிவிக்கப்படுகிறது.

கீவ் நகருக்குள் ரஷ்யா நகர்த்திவரும் இராணுவத் தளவாடங்களில் வெப்ப அழுத்த வெடிகுண்டுகள் பொருத்தப்பட்ட ரொக்கெட்டுகளை ஏவும் TOS-1 வகை லான்சர்களும் (launcher) இடம்பெற்றுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. வெப்ப அழுத்த வெடிகுண்டுகளை சிரியா மற்றும் செசன்யா போர்களில் ஏற்கனவே ரஷ்யா பயன்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## எந்தெந்த நாடுகளிடம் எவ்வளவு அணு ஆயுதங்கள்




உக்ரைன் மீது அணு ஆயுதத்தை கையாள்வோம் என்று ரஷ்ய ஜனாதிபதி புட்டின் தெரிவித்திருந்தார். ரஷ்யாவை தாண்டி உலக நாடுகள் பலவற்றுள் அணு ஆயுதங்கள் இருக்கின்றன.

உலகில் சுமார் 13,080 அணு ஆயுதங்கள் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. ரஷ்யா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் தங்களுக்குள் இருந்த பனிப்போரால் அதிகளவு அணு ஆயுதங்களை உற்பத்தி செய்தன.

30-40 ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததை விட அணு ஆயுதங்களைக்கொண்ட நாடுகளின் பட்டியல் தற்போது அதிகமாக இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

உக்ரைன் மீது போர் தொடுப்பதற்கு முன்பே, புட்டின் தலைமையில் அணு ஆயுதப் போர் பயிற்சியை மேற்கொண்டது ரஷ்யா. இதனால் உலக நாடுகள் அச்சத்தில் இருந்தன. அணு ஆயுதம் தாண்டி, போர்க் கருவிகள், போர் விமானங்கள், படைகள், வீரர்கள் என எல்லாவற்றிலும் ரஷ்யாவின் கையே ஓங்கியுள்ளது.

உலகின் மற்ற நாடுகளை விட ரஷ்யாவிடம் அதிக அணு ஆயுதங்கள் இருக்கின்றன; பராமரித்து வருகிறது. 6,257 அணு ஆயுதங்கள் ரஷ்யாவிடம் உள்ளன. இவற்றில், 1458 அணு ஆயுதங்கள் செயற்பாட்டில் இருக்கின்றன. 3,039 அணு ஆயுதங்கள் செயற்படுத்தப்படாததும், 1,760 அணு ஆயுதங்கள் செயலற்றதுமாக தற்போது ரஷ்யாவிடம் உள்ளன.

மிகப்பெரிய வல்லரசு நாடான அமெரிக்காவை விட இது அதிக எண்ணிக்கை. இதனால்தான் உலக நாடுகள் போர்ச் சூழலில் ரஷ்யாவைப் பார்த்து பயப்படுகின்றன.

உக்ரைனுக்கு அமெரிக்கா பல உதவிகள் செய்தாலும், நேரடியாக தங்கள் படைகளை அனுப்பாமல் இருக்கிறது. அப்படி படை அனுப்பினால், அது மற்றொரு உலகப் போருக்கு வழிவகுக்கும் என உலக நாடுகள் நினைக்கின்றன. அதனால்தான் அமெரிக்கா உக்ரைனுக்கு டொலர்களில் உதவி வருகிறது.

தற்போது அமெரிக்காவில் 5,550 அணு ஆயுதங்கள் உள்ளன. அதில் 1,389 செயற்பாட்டிலும், 2361 செயற்படுத்தப்படாமலும் உள்ளன. அதேபோல் 1,800 அணு ஆயுதங்கள் செயலிழந்ததும் அமெரிக்காவில் உள்ளன.

ரஷ்யா, அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக சீனாவிடம் அதிக அணு ஆயுதங்கள் உள்ளன. சீனாவிடம் 350 அணு ஆயுதங்கள் உள்ளன. பிரான்ஸில் 290 அணு ஆயுதங்களும், பிரித்தானியாவிடம் 225 அணு ஆயுதங்களும், பாகிஸ்தானில் 165 அணு ஆயுதங்களும், இந்தியாவில் 156 அணு ஆயுதங்களும், இஸ்ரேலிடம் 90 அணு ஆயுதங்களும், வடகொரியாவிடம் அதிகபட்சமாக 50 அணு ஆயுதங்களும் கையிருப்பில் உள்ளன.

கடைசியாக 1945இல் நடந்த 2ஆம் உலகப் போரில் அணு ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டன. அமெரிக்கா ஓகஸ்ட் 6இல் ஜப்பான் ஹீரோசிமாவிலும், ஓகஸ்ட் 9இல் நாகசாகியிலும் அணு ஆயுதங்களை வீசியது. இதில் அமெரிக்காவின் கணக்குப்படி ஒரு இலட்சத்து 35 ஆயிரம் மக்கள் வசித்த ஹீரோசிமாவில் பாதி பேர் 67,500 பேர் இறந்ததாகவும், 1.95 இலட்சம் பேர் வசித்த நாகசாகியில் 64 ஆயிரம் பேர் இறந்ததாகவும், 70 சதவீத கட்டடங்கள் சேதமானதாகவும் கணக்கிடப்பட்டது.

14ஆம் பக்கத் தொடர்ச்சி...

இதற்காக பொது இடங்களில் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் ஒன்றிணைந்து குண்டுகளை தயாரிக்கின்றனர்.

ரஷ்ய படைகளுக்கு எதிராக போராடும் முயற்சியில் உதவுவதற்காக உக்ரைனிலுள்ள மதுபான ஆலையொன்று கடந்த சில நாட்களுக்கு முன்பு பீர் தயாரிப்பை கைவிட்டு முழு அளவில் பெற்றோல் வெடிகுண்டுகளை தயாரித்து வருவது குறிப்பிடத்தக்கது.

**தாயகத்துக்காக ஆயுதமேந்தும் முன்னாள் உக்ரைன் அழகி**

ரஷ்யாவின் பிடியிலிருந்து தங்கள் தாயகத்தை விடுவிக்க உக்ரைனில் வயது, பாலின வித்தியாசமின்றி பொதுமக்களும் ஆயுதமேந்தி வருகின்றனர்.

கடந்த 2015ஆம் ஆண்டு மிஸ் உக்ரைன் பட்டம் பெற்றவர் அனஸ்டாஸியா லென்னா. தற்போது 31 வயதான இவர், ரஷ்யாவை எதிர்த்துப் போராட துப்பாக்கி ஏந்தியுள்ளார்.



இவரைப் போலவே உக்ரைன் ஜனாதிபதி அழைப்பை ஏற்று ஏற்கனவே ஒற்றைக் காலை இழந்து அதற்காக செயற்கைக் கால் பொருத்தியுள்ள ஒருவரும் உள்நாட்டுப் பாதுகாப்புப் படையில் இணைந்துள்ளார்.

உக்ரைன் நாட்டின் இளம் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற பெயர் பெற்ற 26 வயதான ஸ்வியாடோஸ்லாவ் யுராஷ் என்பவரும் தனது பங்கிற்கு ஏகே ரக துப்பாக்கியைக் கையில் ஏந்தி போர்க்களம் புகுவதற்கு ஆயத்தமாகியுள்ளார். அதேவேளை, உக்ரைனின் பிரபல ஹிப்பொப் பாடகர் மற்றும் முன்னாள் குத்துச் சண்டை வீரர் உட்பட பல உக்ரைன் பிரபலங்கள் தங்கள் தாய்நாட்டுக்காக போராட உக்ரைன் படையில் இணைந்துகொண்டுள்ளனர்.


இந்நிலையில், உக்ரைன் இராணுவத்தில் இதுவரை 36,000 பெண்கள் இணைந்துகொண்டுள்ளதாக அந்நாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன.

**ஐரோப்பிய ஒன்றிய வான் எல்லையில் ரஷ்ய விமானங்கள் பறக்கத் தடை**

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் வான் எல்லையில் ரஷ்ய விமானங்கள் பறப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கையை கண்டித்து உக்ரைனுக்காக முன்னெப்போதும் இல்லாத நிகழ்வாக ஆயுத கொள்முதல் செய்ய முடிவெடுத்துள்ளதாக ஐரோப்பிய ஒன்றியத் தலைவர் உர்சுலா வொன் டெர் லெயன் (Ursula von der Leyen), தெரிவித்துள்ளார்.

ரஷ்யா மீது பல்வேறு புதிய பொருளாதார தடைகளை விதித்த அவர், ரஷ்ய அரசு செய்தி நிறுவனம், தொலைக்காட்சி மற்றும் ஊடகங்களை தடை செய்தார். மேலும் ரஷ்யாவுக்கு உறுதுணையாக இருந்த பெலாரஸ் மீதும் பொருளாதாரத் தடைகளை விதித்தார்.




பிப்ரவரி 27 வரை ஐரோப்பிய நாடுகளுக்கு உக்ரேனிய அகதிகளின் வருகையைக் காட்டும் ஐரோப்பா வரைபடம்...

**பனியின் பிடியிலும் சிக்கித் தவிக்கும் உக்ரைனியர்கள்**

ரஷ்யாவின் தாக்குதலுக்கு ஆளாகி சிக்கித் தவிக்கும் உக்ரைன் மக்கள் தற்போது இயற்கையின் கொடையான பனியின் பிடியிலும் சிக்கியுள்ளனர்.

உக்ரைன் மீது ரஷ்யா தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருவதால், அங்கிருக்கும் மக்கள் அகதிகளாக அண்டைநாடுகளுக்குச் செல்கின்றனர்.

போலந்து எல்லைப் பகுதியான Medykaவில் தற்போது பனிப்பொழிவு தொடங்கியுள்ளதால் அந்த வழியாக செல்லும் உக்ரைன் அகதிகள் பனிப்பொழிவால் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

பெண்கள், குழந்தைகள் உட்பட 4 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் உக்ரைனிலிருந்து அகதிகளாக அண்டை நாட்டிற்கு தப்பிச் சென்றுள்ளனர்.

**உக்ரைனுக்கு உலக நாடுகள் ஆயுத உதவி**

உக்ரைன் மீதான ரஷ்ய தாக்குதல் அதிகரித்துள்ள நிலையில், ரஷ்யாவுக்கு பல்வேறு உலக நாடுகள் பொருளாதார தடைகளை வித்துள்ள நிலையில் தற்போது உக்ரைனுக்கு ஆயுதங்கள் மற்றும் மருத்துவம் உள்ளிட்ட மனிதநேய உதவிகளையும் வழங்கி வருகின்றன.

அந்தவகையில் விமான எதிர்ப்பு ஏவுகணைகள், பீரங்கி எதிர்ப்பு ஆயுதங்கள், 30 ஆயிரம் தோட்டாக்களை நெதர்லாந்து, அனுப்பிவைத்துள்ளது.

தீவிர மோதலில் இருக்கும் நாடுகளுக்கு ஆயுதங்களை அனுப்பக்கூடாது என்ற கோட்பாட்டை மீறி உக்ரைனுக்கு ஆயுதங்கள் அனுப்பிவைக்கப்படுவதாக சுவீடனும் அறிவித்துள்ளது. இவ்விரு நாடுகளைப் போலவே, உக்ரைனுக்கு 2,700 பீரங்கி எதிர்ப்பு ஆயுதங்கள் நன்கொடையாக வழங்கப்படும் என டென்மார்க் பிரதமர் தெரிவித்துள்ளார்.

ஜேர்மனி ரொக்கெட் லோஞ்சர், ஏவுகணைகள் உள்ளிட்ட ஆயுதங்கள், ஆயிரம் டாங்கி எதிர்ப்பு ஆயுதங்கள், ரஷ்யாவின் வான் தாக்குதலை சமாளிக்கக்கூடிய 500 ஸ்டிங்கர் ஏவுகணைகளை வழங்கவுள்ளதாக தெரிவித்துள்ளது.

**அவுஸ்திரேலியா உதவி**

ரஷ்யாவின் தாக்குதலை எதிர்கொள்ளும் வகையில் உயிர்ச்சேதம் விளைவிக்காத ஆயுதங்களை உக்ரைனுக்கு அனுப்ப அவுஸ்திரேலியா முடிவு செய்திருந்ததாகவும், தற்போது பல கட்ட ஆலோசனைக்குப் பின்னர் அமெரிக்கா, பிரித்தானியா நாடுகள் மூலமாகவும், நேட்டோ படைகளின் மூலமாகவும், உயிர்ச்சேதம் விளைவிக்கக்கூடிய அதிநவீன போர் ஆயுதங்கள் உக்ரைனுக்கு வழங்கப்படும் என அந்நாட்டு பிரதமர் ஸ்கொட் மோரிசன் அறிவித்துள்ளார்.

அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் ஸ்பெயின் உள்ளிட்ட 28 நாடுகள் உக்ரைனுக்கு மருத்துவ மற்றும் இராணுவ உதவிகளை வழங்க ஒப்புக்கொண்டுள்ளன.

# ரஷ்யாவையும், பெலாரஸையும் விரும்பாத விளையாட்டுலகம்




### சர்வதேச ஜூடோ கூட்டமைப்பின் பதவியை இழந்த ரஷ்ய ஜனாதிபதி

ரஷ்யா - உக்ரைன் நெருக்கடிக்கு மத்தியில் சர்வதேச ஜூடோ கூட்டமைப்பின் கௌரவ தலைவர் பதவி ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினிடமிருந்து பறிபோய்விட்டது. இது கௌரவ பதவியாக இருந்தாலும், பெருமைக்குரிய பதவியாக பார்க்கப்படுகிறது.

விளையாட்டுத்துறையில் ஆர்வம் கொண்ட புட்டினுக்கு உக்ரைனுடனான மோதல் காரணமாக பல்வேறு பிரபல வீரர்களும் கண்டனங்களை தெரிவித்து வருகின்றனர். இந்நிலையில், சர்வதேச ஜூடோ கூட்டமைப்பின் தலைவர் மற்றும் தூதராக இருந்த விளாடிமிர் புட்டின், உக்ரைனில் நடந்துவரும் போர் மோதல் காரணமாக பதவியிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

விளாடிமிர் புட்டின் நேற்று முன்தினம் உலக விளையாட்டுகளில் தனது மிகவும் பெருமையான அதிகாரப்பூர்வ பதவியை தற்காலிகமாக இழந்தார். சர்வதேச ஜூடோ கூட்டமைப்பு புட்டினின் கௌரவ தலைவர் அந்தஸ்தை இடைநிறுத்துவதற்கு காரணமாக "உக்ரைனில் நடந்துவரும் போர் மோதல்" என்பதை சுட்டிகாட்டியுள்ளது.

ஜூடோ விளையாட்டில் ஆர்வமுள்ள ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின், 2012 லண்டன் ஒலிம்பிக்கில் விளையாட்டில் கலந்துகொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. புட்டினுக்கு 2012இல் எட்டாவது டான் விருதை சர்வதேச ஜூடோ கூட்டமைப்பு வழங்கியது. அந்த நிலையை எட்டிய முதல் ரஷ்யர் என்ற பெருமையைப் பெற்றார். 69 வயதான அவர் ஜூடோவில் ஆர்வமுள்ளவர் மற்றும் "ஜூடோ வரலாறு, கோட்பாடு, பயிற்சி" என்ற தலைப்பில் ஒரு புத்தகத்தை இணைந்து எழுதியுள்ளார்.



### ரஷ்யாவுக்குத் தடை

சர்வதேச ஸ்கேட்டிங் யுனியன், உலக ஸ்பீடு ஸ்கேட்டிங் சம்பியன்ஷிப்பை அடுத்த மாதம் நடத்தவுள்ள நோர்வே ஸ்கேட்டிங் ஃபெடரேஷன், ரஷ்ய பெலாரஷ் ஆகிய நாடுகளின் விளையாட்டு வீரர்களுக்கு தடை விதிக்கப்பட வேண்டும் என்று அந்நாட்டின் தேசிய ஒலிம்பிக் குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

நோர்வே ஒலிம்பிக், பாராலிம்பிக் குழு மற்றும் விளையாட்டுக் கூட்டமைப்பு மற்றும் அதன் டேனிஷ் கூட்டமைப்பு, உக்ரைன் மீதான தாக்குதலை "சர்வதேச சட்டத்தின் தெளிவான மீறல்" என்று கண்டித்து, ரஷ்யா - பெலாரஸ் ஆகிய நாடுகளுக்கு போட்டிகளிலிருந்து தடை விதிக்க வேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளது. பெலாரஸ் தனது நீண்டகால நட்பு நாடான ரஷ்யாவிற்கு படையெடுப்பிற்கு உதவுகிறது. மார்ச் 3 முதல் 6 வரை உலக சம்பியன்ஷிப் போட்டிகளை நடத்தவுள்ளது.

### இரண்டு போட்டிகளுக்குத் தடை

சர்வதேச கைப்பந்து சம்மேளனம் (எவ்.ஐ.வி.பி.) ரஷ்யாவின் உக்ரைன் மீதான படையெடுப்பிற்கு பதிலடியாக இரண்டு சுற்று வொலிபோல் நேஷன்ஸ் லீக் (வி.என்.எல்.) போட்டிகளை நடத்துவதை இரத்துசெய்துள்ளது.

ஜூன் 28 முதல் ஜூலை 3 வரையிலான பெண்களுக்கான வி.என்.எல். சீசனின் மூன்றாவது வாரத்தில் யுஃபா ஹோஸ்ட் நகரங்களில் ஒன்றாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது, அதேநேரத்தில் கெமரோவோ ஆண்களுக்கான மூன்று விளையாட்டுகளை ஜூலை 5 முதல் 10 வரை நடத்த திட்டமிடப்பட்டது.

உலக சம்பியன்ஷிப் ஒகஸ்ட் 26 முதல் செப்டெம்பர் 11 வரை ரஷ்யாவின் 10 நகரங்களில் நடைபெறவுள்ளது. உலக ஊக்கமருந்து எதிர்ப்பு நிறுவனம் மொஸ்கோ ஆய்வகத்திலிருந்து தரவுகளை கையாள்வதற்காக ரஷ்ய ஊக்கமருந்து எதிர்ப்பு ஏஜென்சிக்கு எதிராக விதிக்கப்பட்ட தடைகளின் ஒரு பகுதியாக, உலக சம்பியன்ஷிப் போன்ற முக்கிய நிகழ்வுகளை நடத்துவதற்கு ரஷ்யாவை ஏற்கனவே தடை செய்துள்ளது.

### விஸாவை இரத்துசெய்த இங்கிலாந்து

உக்ரைன் மீதான விளாடிமிர் புட்டினின் படையெடுப்பிற்கு பெலாரஸ் ஆதரவு தெரிவித்ததையடுத்து, பெலாரஸ் ஆடவர் கூடைப்பந்து அணியின் விஸாக்களை பிரித்தானிய உள்துறை செயலாளர் பிரித்தி படேல் இரத்துசெய்துள்ளார்.

உலகக்கிண்ண தகுதிச்சுற்றில் சனிக்கிழமை இரவு நியூகேஸில் பிரிட்டன் அணி விளையாடவிருந்தது, ஆனால், சர்வதேச கூடைப்பந்து கூட்டமைப்பு (FIBA) வெள்ளிக்கிழமை (பெப்ரவரி 25) "தற்போதைய சூழ்நிலையின் மதிப்பீட்டிற்கு" பிறகு போட்டியை ஒத்திவைத்தது.

"சனிக்கிழமை இரவு நியூகேஸில் விளையாடவிருந்த பெலாரஷ்ய ஆண்கள் கூடைப்பந்து அணியின் விஸாக்களை நான் இரத்துசெய்துவிட்டேன்" என்று படேல் ட்விட்டரில் எழுதினார்.

### பெலாரஸின் போட்டிகள் ஒத்திவைப்பு

பெலாரஸில் நடைபெறும் போட்டி ஒத்திவைக்கப்படுவதாக ஃபிபா முதலில் கடந்த வியாழக்கிழமை அறிவித்தது. "ஃபிபாவின் அனைத்து உதவிகளுக்கும், மின்ஸ்க் பயணம் குறித்த எங்கள் கவலைகளைப் புரிந்துகொண்டதற்கும் நாங்கள் நன்றி கூறுகிறோம்" என்று இங்கிலாந்து கூடைப்பந்து சம்மேளனத்தின் இடைக்காலத் தலைவர் டோனி மினிச்சில்லோ கூறினார்.

பெலாரஸ் தற்போது கூடைப்பந்து உலகக்கிண்ணத் தகுதி போட்டியில் ஐரோப்பிய 'டீ' பிரிவில் மூன்றாவது இடத்தில் உள்ளது. சர்வதேச ஒலிம்பிக் குழு, எந்தவொரு நாட்டிலும் திட்டமிடப்பட்ட எந்தவொரு போட்டியையும் இரத்துசெய்ய அல்லது இடமாற்றம் செய்யுமாறு சர்வதேச கூட்டமைப்புகளை வலியுறுத்தியது.

### ரஷ்யாவுடன் விளையாட செக் குடியரசு மறுப்பு

போலந்து, சுவீடன் ஆகிய நாடுகளைப் பின்தொடர்ந்து, பீபா உலகக்கிண்ண பிளேஆஃப் போட்டியில் ரஷ்யாவுடன் செக் குடியரசின் உதைபந்தாட்ட சங்கம் விளையாட மறுத்தது.

செயற்குழுக் கூட்டம் மற்றும் வீரர்களுடனான கலந்துரையாடலைத் தொடர்ந்து, செக் தேசிய அணி "நடுநிலை மைதானத்தில் கூட ரஷ்யாவுடன் விளையாடாது" என்று அறிவித்தது. ரஷ்யாவுக்கு எதிராக விளையாட மறுத்தால் ரஷ்யா வெற்றி பெற்றதாக அறிவிக்கப்படும். இந்தப் பிரச்சினையை பீபா எப்படிக் கையாளப்போகிறதென்பதை அறிய விளையாட்டுலகம் ஆவலாக உள்ளது.

### ரஷ்யாவை புறக்கணித்த இங்கிலாந்து

ரஷ்யாவில் எந்தவொரு சர்வதேச உதைபந்து போட்டியும் நடத்தப்படாது என்று சர்வதேச உதைபந்து சங்கம் அறிவித்துள்ளது. அந்த நாட்டு உதைபந்து உறுப்பினர் சங்கம் இனி உதைபந்து யுனியன் ஒவ் ரஷ்யா



என்ற பெயரில் அழைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், ரஷ்யாவுக்கு எதிரான அனைத்து சர்வதேச உதைபந்து போட்டிகளையும் இங்கிலாந்து புறக்கணிக்கும் என அந்நாட்டு உதைபந்து சங்கம் தெரிவித்துள்ளது.

# 7ஆவது பாகிஸ்தான் சுப்பர் லீக் சம்பியனான லாகூர் கலாண்டர்ஸ்



ஆவது பாகிஸ்தான் சுப்பர் லீக் தொடரின் சம்பியனாக ஷஹீன் ஷா அப்ரிடி தலைமையிலான லாகூர் கலாண்டர்ஸ் அணி மகுடம் சுடியது.

பாகிஸ்தான் சுப்பர் லீக் தொடரின் இறுதிப் போட்டி லாகூரில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்தப் போட்டியில் முல்டான் சுல்தான்ஸ் மற்றும் லாகூர் கலான்டர்ஸ் அணிகள் மோதின. முதலில் பேட் செய்த லாகூர் கலாண்டர்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட் இழப்பிற்கு 180 ஓட்டங்கள் குவித்தது. அந்த அணியில் அதிகபட்சமாக மொஹமட் ஹபீஸ் 46 பந்துகளில் 69 ஓட்டங்கள் குவித்தார்.

இதைத் தொடர்ந்து 181 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கியது சுல்தான்ஸ் அணி. அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழக்க இறுதியில் 19.3 ஓவர்களில் 138 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. இதனால் 42 ஓட்டங்கள் வித்தியாசத்தில் லாகூர் அணி வெற்றிபெற்றது. லாகூர் அணி தரப்பில் அந்த அணியின் கேப்டன் ஷாஹீன் ஷா அப்ரிடி 3 விக்கெட்டுகளை கைப்பற்றி அசத்தினார். இதன் மூலம் லாகூர் அணி பாகிஸ்தான் சுப்பர் லீக் தொடரில் முதல் முறையாக சம்பியனானது.




விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

# இலங்கையை க்ளீன் சுவீப் செய்த இந்தியா!

சுற்றுலா இலங்கை அணியுடனான மூன்று போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச தொடரை இந்திய அணி 3-0 என்ற அடிப்படையில் கைப்பற்றி இலங்கை அணியை க்ளீன் சுவீப் செய்தது.




3 போட்டிகள்கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச தொடரின் முதல் இரு போட்டிகளிலும் வெற்றிபெற்ற இந்திய அணி தொடரை முன்னதாகவே கைப்பற்றிய நிலையில் மூன்றாவதும், இறுதியுமான போட்டி நேற்று முன்தினம் தரம்சாலாவில் நடைபெற்றது. போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகள் இழப்பிற்கு 146 ஓட்டங்களை குவித்தது. துடுப்பாட்டத்தில் தசுன் சானக்க தனியாளாக 38 பந்துகளில் 74 ஓட்டங்கள் குவித்தார்.

147 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்குக் களமிறங்கிய இந்திய அணி ஆரம்பத்தில் ரோஹிட் சர்மாவை இழந்தது. எனினும், ஸ்ரேயஸ் ஐயரின் நிதானமான துடுப்பாட்டத்தின் மூலம் இந்திய அணி 16.5 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

இந்த வெற்றியின் மூலம் இந்திய அணி 3-0 என்ற அடிப்படையில் இருபதுக்கு 20 சர்வதேச தொடரை கைப்பற்றியது. போட்டியின் ஆட்டநாயகனாகவும், தொடர் ஆட்டநாயகனாகவும் மூன்று போட்டிகளிலும் இந்திய அணியின் வெற்றிக்கு வித்திட்ட ஸ்ரேயஸ் ஐயர் தெரிவானார்.

இந்திய அணி, இலங்கை அணியுடன் மூன்று போட்டிகளில் வெற்றிபெற்றிருக்கும் நிலையில் இருபதுக்கு 20 சர்வதேச கிரிக்கெட் வரலாற்றில் தொடர்ச்சியாக அதிக போட்டிகளில் வெற்றியைக் குவித்த அணி என்கின்ற பெருமையை தற்போது இந்திய அணி சமநிலைப்படுத்தி இருக்கிறது. முன்னதாக ஆப்கானிஸ்தான் அணி 12 போட்டிகளில் தொடர்ச்சியாக வெற்றிபெற்ற நிலையில், தற்போது இந்திய அணி தொடர்ச்சியாக 12 போட்டிகளில் வெற்றிபெற்று ஆப்கானிஸ்தான் அணியுடன் முதலிடத்தில் காணப்படுகிறது.

# இரண்டாம் கட்ட அரையிறுதியில்

## வடக்கு – கிழக்கு அணிகள் இன்று மட்டக்களப்பில் மோதல்

இலங்கை உதைபந்து சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றுவரும் மாகாண அணிகளுக்கிடையிலான சுதந்திரக் கிண்ண உதைபந்து தொடரில், சொந்த மண், அந்நிய மண் என்ற அடிப்படையில் இரு கட்டங்களாக நடைபெறும் அரையிறுதிப் போட்டிகளின் முதற்கட்ட போட்டிகள் நிறைவுபெற்றுள்ள நிலையில் இன்று இரண்டாம்கட்ட அரையிறுதி ஆரம்பமாகிறது.


லீக் போட்டிகள் நிறைவில் அணிகள் நிலையில் முதலாம் இடத்தைப் பெற்ற சப்ரகமுவ மாகாணத்துக்கும், நான்காம் இடத்தைப் பெற்ற தென் மாகாணத்துக்கும் இடையிலான முதலாம் கட்ட முதலாவது அரைறுதிப் போட்டியில் சப்ரகமுவ மாகாண அணி 1-0 என்ற கோல் கணக்கில் தென் மாகாணத்தை வீழ்த்தியது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்ற முதற்கட்ட இரண்டாவது அரையிறுதியில் வடமாகாண அணியும், கிழக்கு மாகாண அணியும் மோதின. இந்தப் போட்டியில் வடமாகாண அணி 1-0 என்ற அடிப்படையில் வெற்றிபெற்றது. இந்நிலையில், வட மாகாணத்துக்கும், கிழக்கு மாகாணத்துக்கும் இடையிலான இரண்டாம் கட்ட அரையிறுதிப் போட்டி இன்று மாலை 3.30 மணிக்கு மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் நடைபெறுகிறது.

தென் மற்றும் சப்ரகமுவ மாகாண அணிகளுக்கிடையிலான இரண்டாம் கட்ட அரையிறுதிப் போட்டி நாளை இரத்தினபுரி சீவாளி மைதானத்தில் நடைபெறவுள்ளது. இந்த இரண்டு கட்ட அரை இறுதிப் போட்டிகளிலும் ஒட்டுமொத்த கோல்கள் அடிப்படையில் வெற்றிபெறும் இரண்டு அணிகள் இறுதிப் போட்டியில் விளையாட தகுதிபெறும். ஒட்டுமொத்த கோல்கள் சமநிலையில் இருந்தால், வெற்றி அணி அல்லது பெனல்டி முறையில் தீர்மானிக்கப்படும்..

# மேற்கிந்திய தீவுகளின் முன்னாள் வீரர் சோனி ரமடின் காலமாணார்

மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் அணியின் முக்கிய சுழற்பந்து வீச்சாளர்களில் ஒருவராக கடந்த 1950களில் திகழ்ந்த சோனி ரமடின் நேற்று முன்தினம் காலமானார்.



வலது கை சுழற்பந்து வீச்சாளரான ரமடின், தனது பந்துவீச்சு நடவடிக்கையில் எந்த பெரிய மாற்றமும் இல்லாமல் முக்கியமக ஆஃப்-ஸ்பின் மற்றும் லெக்-ஸ்பின் ஆகிய இரண்டையும் வீசும் திறனைக் கொண்டிருந்தார். இதனால் எதிரணி பேட்ஸ்மேன்களுக்கு அவரது பந்து வீச்சினை எதிர்கொள்வது கணிக்க முடியாதிருந்தது.

அவர் 43 டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்று 28.98 சராசரியில் 158 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். மேலும் ரமடின் 184 முதல்தர போட்டிகளில் விளையாடி 20.24 சராசரியில் 758 விக்கெட்டுகளையும் வீழ்த்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுதலையான இந்திய கிரிக்கெட் வீரர்



மதுபோதையில் கார் விபத்து ஏற்படுத்தியதாக இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் வினோத் காம்ப்ளி நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இடது கை பேட்ஸ்மேனான வினோத்காம்ப்ளி எப்போதுமே சர்ச்சையில் சிக்கிக்கொள்வார். மும்பை பாந்த்ரா சொசைட்டி பகுதியில் வினோத் காம்ப்ளி குடித்துவிட்டு காரை ஓட்டிச் சென்றுள்ளார். அவரது கார், மற்றொரு கார் மீது மோதியது. இதுதொடர்பாக அவர் மீது பொலிஸில் புகார் கொடுக்கப்பட்டது. இந்த புகாரின்பேரில் வினோத் காம்ப்ளியை பொலிஸார் கைதுசெய்தனர். பின்னர் அவர் ஜாமீனில் விடுவிக்கப்பட்டார்.

இந்தச் சம்பவத்துக்கு பிறகு காம்ப்ளி தனது வளாகத்திலுள்ள காவலாளி மற்றும் குடியிருப்பு வாசிகளுடன் வாக்குவாதம் செய்ததாக கூறப்படுகிறது. 50 வயதான வினோத் காம்ப்ளி 17 டெஸ்டில் விளையாடி 4 சதம் உட்பட 1,084 ஓட்டங்கள் எடுத்துள்ளார். 104 ஒருநாள் போட்டியில் விளையாடி 2 சதம் உட்பட 2477 ஓட்டங்கள் எடுத்துள்ளார்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7